

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூலை 02, 2015 | புரட்சி 14 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00


## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரைக்கு மறுப்பு

# ‘பிராமணாள்’ பெயர் அழிப்புக் கிளர்ச்சி: நடந்தது என்ன?

பெரியார் நடத்திய ‘பிராமணாள் ஓட்டல் பெயர் அழிப்புக் கிளர்ச்சிக்’ குறித்து, போராட்டம் நடந்த ‘முரளி கபே’ உரிமையாளரின் மகன் , ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஏட்டில் (ஜூன் 19) ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பெரியார் காலங்களில் அவர் நடத்திய பார்ப்பன ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்களில் வன்முறை நடந்தது இல்லை என்று ஏற்கெனவே வெளிவந்த கட்டுரைக்கு (ஜூன் 26) மறுப்பாக, இது வெளி வந்திருக்கிறது. முரளி கபே ஓட்டல் மறியலில் திராவிடர் கழகத்தினர் வன்முறையில் ஈடுபட்டதாக உண்மைக்கு மாறான தகவலைத் தந்துள்ளார். ‘பிராமணாள்’ என்பது அசைவ உணவைக் குறிப்பிடும் சொல் என்றும் வாதாடுகிறார். ‘பிராமணாள்’ என்பது ஏனைய பார்ப்பனரல்லாத மக்களை ‘சூத்திரர்’ என்று இழிவுபடுத்தும் குறியீட்டுச் சொல். இதற்கான விளக்கங்களைத் தந்து உரிய வேண்டுகோள் கடிதங்களை எழுதிய பிறகே பெரியார் போராட்டத்தைத் தொடங்கினார். வன்முறையை பின்பற்ற விரும்பியிருந்தால், அந்த பெயர்ப் பலகையை ஒரே நாளில் எடுத்து எறிந்திருப் பார்கள். ஆனால், ஓட்டல் உரிமையாளரே அகற்றும்வரை அந்தப் போராட்டம் நடந்தது. இதுதான் வரலாறு.

இந்தப் போராட்டம் குறித்த சுருக்கமான வரலாறு இது:

“18.4.1957 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய செயற்குழுவில், சாதி ஒழிப்புக் கிளர்ச்சியில் ஒரு கூறாக, 5.5.1957 முதல், பார்ப்பனர் ஓட்டல்களின் முன்புறப் பலகைகளில் உள்ள ‘பிராமணாள்’ என்ற எழுத்துக்களை அழிப்பதாக முடிவெடுக்கப்பட்டது. கிளர்ச்சிக்கு முன்னோட் டமாகப் பெரியார் அவர்கள் சென்னை ஆட்சியாளர் களுக்கும், கவர்னருக்கும் ஒரு கடிதம் எழுதி, 27.4.57 ‘விடுதலை’யில் அதை வெளியிடச் செய்தார். அதில், “நமது நோக்கம் சாதி மத பேதமற்ற சமுதாயம் நிறுவப்பட வேண்டும் என்பதாகவும், அரசாங்க ஆணைகளில்கூடச் சாதியைக் காட்டக் கூடாது என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எடுத்துக்காட்டி; சாதிப்பிரிவு என்பது, நம் நாட்டில் அனுபவப்பூர்வமாகப் பார்ப்பனர் பார்ப்பன ரல்லாதார் என்ற இரண்டுக்குள் அடங்கிவிடுவதாக உதாரணத்துடன் விளக்கினார். சிலர் தங்களை க்ஷத்திரியர் என்றும், சிலர் வைசியர் என்றும் அழைத்துக் கொண்டாலும், ‘பிராமணாள்’ இவர் களையும் சூத்திராள் என்றுதான் கருதுகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ பிராமணாள் விடுதி என்று உணவுக் கடைகளை நடத்திட அரசு அனுமதி தந்து வருகிறது. பார்ப்பனர் வீடு என்று அவர்கள் தங்கள் சொந்த வீட்டில் போட்டுக் கொள்ளட்டும். அரசு அனுமதியோடு, மற்றவர்களை இழிவுபடுத்தும் அடையாளமாகவும், பணம் சம்பாதிக்கவும், ஏன் பிராமணாள் என்ற வார்த்தை பயன்பட வேண்டும்? 25 ஆண்டுகட்கு முன்பே நான் சில நகரசபைத் தலைவர்களையும் சேர்த்துக் கொண்டு, நகரசபை லைசன்ஸ் தர மறுத்தேன். அரசு, நகரசபை இதில் தலையிடக் கூடாதென்றது. பிறகு, இரயில்வேயுடன் போராடி, அங்கேயிருந்த ‘பிராமணாள்’ ஓட்டல், ‘பிராமணாள்’ சாப்பிடுமிடம் ஆகியவற்றை எடுக்கச் செய்தேன். எனவே அருள்கூர்ந்து, 5.5.57க்குள் அமுலுக்கு வருமாறு, ஓர் அவசர உத்தரவு பிறப்பித்துப் ‘பிராமணாளை’ அகற்றிவிட்டால், நேரடி நடவடிக்கையாக ஒரு கிளர்ச்சி செய்ய அவசிய மிருக்காது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்!” என்று முடிவடைந்தது பெரியார் கடிதம்.

‘பிராமணாள்’ அழிப்புக் கிளர்ச்சி ஏன்? என்ற தலைப்பில் பெரியார், 28.4.57 ‘விடுதலை’ ஏட்டில் ஒரு விளக்கமான அறிக்கையினையும் வெளியிட்டார். எதற்கும் பதிலோ, நடவடிக்கையோ காணப் பெறாமையால், திட்டமிட்டபடி 5.5.57 அன்று, சென்னை திருவல்லிக்கேணி, பைக்ராஃப்ட்ஸ் சாலையிலுள்ள முரளி கஃபே என்ற பார்ப்பனர் உணவு விடுதியைக் களமாகத் தேர்ந்தெடுத்துப் போராட்டம் தொடங்கியது. முதல் நாள் கணக்கற்ற மக்கள் கூட்டம், கடையின் முன்னர் மறியல் செய்து, ‘பிராமணாள்’ என்ற எழுத்துக்களை அழித்திட, ஈ.வெ.ரா. மணியம்மையார், விசாலாட்சியம்மாள், மனோரஞ்சிதம் அம்மாள், எஸ்.குருசாமி, எம்.கே.டி. சுப்பிரமணியம், மு.பொ. வீரன், டி.எம்.சண்முகம், திருவாரூர் தங்கராசு, ஏ.பி. சனார்த்தனம் ஆகியோர் முன் வந்தனர். பெரியாரும் வந்து மேற்பார்வை யிட்டார். ஓட்டல் முதலாளியிடம் கேட்டுக் கொண்டும் இசையவில்லை. அழிக்க முயன்றவர் களைப் போலீசார் கைது செய்தனர். நாள்தோறும் இந்தக் கிளர்ச்சி இடைவிடாமல் நடத்தப்பட்டு வந்தது. 2.12.57 அன்று 210ஆம் நாள் கிளர்ச்சி வரையில் கைதாகி தண்டனை பெற்றோர் 837 பேர்.” (ஆதாரம்: கவிஞர் கருணானந்தம் எழுதிய ‘தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு’)

கைதானவர்கள் 1010 பேர் என்று மற்றொரு தகவல் கூறுகிறது. காஞ்சி சங்கராச்சாரி தலையிட்டு, முரளி கபே பார்ப்பனருக்கு அறிவுரை கூறிய பிறகே அவர் பணிந்தார். ‘முரளி அய்டியல் ஓட்டல்’ என்று 22.3.1958இல் பெயர் மாற்றம் பெற்றது.

## வினாக்கள்... விடைகள்...!

- மதுக்கடைகளுக்கு கடவுள் பெயர் வைக்க ஆந்திர அரசு தடை. – **செய்தி**

  அப்படியே மதுக் குடியர்களும் கடவுள் பெயரை வைக்க தடை போட்டுடுங்க...

- அத்வானி யாரை மனதில் வைத்து அவசர நிலை பற்றிப் பேசினார்? – **சிவசேனா கேள்வி**

  தான், ஓரம் கட்டப்படுவதை மனசுல வைச்சுகிட்டுத்தான் பேசினாரு!

- யோகா செய்யும் கைதிகளுக்கு தண்டனை காலம் குறைக்கப்படும். – **ம.பி. அரசு**

  போற போக்கைப் பார்த்தா, யோகா செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை இல்லைன்னு அறிவிச்சிடுவீங்க போல!

- பூரி ஜெகநாதன் கோயிலில் ‘ஆகம விதிகள்’ மீறப்படுவதை எதிர்த்து ஒரிசாவில் காங்கிரஸ் சார்பில் முழு அடைப்புப் போராட்டம். – **செய்தி**

  இந்த முழு அடைப்புல பூரி ஜெகநாதன் கலந்துகிட்டானா? அவன் கோயிலும் மூடப்பட்டதா?

- ஏழுமலையான் கோயிலுக்கு மேல், பாதுகாப்புக் கருதி விமானங்கள் பறக்க தடைவிதிக்க வேண்டும். – **திருப்பதி தேவஸ்தானம்**

  கோயிலுக்குள்ளே விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வச்சிடலாம். அப்பதான் ஏழுமலையானுக்கு பாதுகாப்பு!

- ஆர்.கே. நகரில் ஒரு வாக்குச் சாவடியில் வாக்களித்தவர்கள் எண்ணிக்கையைவிட ஓட்டு எந்திரத்தில் அதிக ஓட்டு. – **செய்தி**

  அம்மாவுக்கு ஆதரவாக ஓட்டு எந்திரங்களே ஓட்டுகளைப் போட ஆரம்பிச்சிடுச்சா?

## இளவரசனைத் தொடர்ந்து கோகுல்ராஜ்

# ஜாதி ஆணவக் கொலை: கழகம் கடும் கண்டனம்

‘கவுரவக் கொலை’ என்ற பெயரில் ஜாதி வெறிக் கொலை சம்பவங்கள் தமிழகத்தில் தலைதூக்கி வருவது தமிழ்நாட்டுக்கே தலைகுனிவாகும். 2013ஆம் ஆண்டு இளவரசன் என்ற தலித் இளைஞர், திவ்யா என்ற வன்னியப் பெண்ணை காதலித்து திருமணம் செய்த ‘குற்றத்துக்காக’ அவர்களை ஜாதி வெறியர்கள் கட்டாயப்படுத்தி அச்சுறுத்திப் பிரித்தனர். கடைசியில் இளவரசன் உடல் தண்டவாளத்தில் பிணமாகக் கிடந்தது. இப்போது பொறியியல் பட்டதாரியான தலித் இளைஞர் கோகுல் ராஜ், அதே ‘கதிக்கு’ ஆளாகியுள்ளார். ‘உயர்ஜாதி’ என்று சொல்லிக் கொள்ளும் ‘கவுண்டர்’ ஜாதிப் பெண்ணை காதலித்து, திருமணம் செய்ததால் அவர் ஜாதி வெறியர்களால் கடந்த 23ஆம் தேதி கடத்தப்பட்டுள்ளார். 24ஆம் தேதி தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் பள்ளிப்பாளையம் கிழக்கு தொட்டிப்பாளையம் அருகே இரயில் தண்டவாளத்தில் அவர் பிணமாகக் கிடந்தார்.

திருச்செங்கோடு மலைக் கோயிலுக்கு கோகுல் ராஜ், ஒரு மாணவியுடன் சென்று சாமி கும்பிடுவது கண்காணிப்புக் காமிராவில் பதிவாகியுள்ளது. கடைசியாக 7 பேர் கொண்ட ஒரு கும்பல், கோகுல் ராஜை கடத்திச் செல்வதும் காமிராவில் பதிவாகியுள்ளது. கவுண்டர் ஜாதியைச் சார்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் மீது போலீசாருக்கு சந்தேகம் எழுந்துள்ளதாக ‘தினத்தந்தி’ நாளேடு செய்தி கூறுகிறது. கோகுல்ராஜ் தலை மட்டும் துண்டிக்கப்பட்டுள்ளது. உடலில் எவ்வித காயங்களும் இல்லை. எனவே, இரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை. இது திட்டமிட்ட படுகொலையே ஆகும். இந்த வழக்கை கொலை வழக்காக மாற்ற வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள், பகுஜன் சமாஜ் கட்சி, சி.பி.அய். (எம்.எல்.) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள், சேலம் உயர் சிகிச்சை சிறப்புப் பிரிவு மருத்துவமனைக்கு எதிரே தொடர்ந்து போராடி வருகின்றன. ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ இந்த ஜாதி வெறிக் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறது. கொலைக்கு திட்டமிட்டு நடத்தி முடித்த ஜாதிவெறிக் கும்பலைக் கைது செய்து கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றும் வழக்கை சி.பி.இ.அய்.டி. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

**– கொளத்தூர் மணி**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்**

**தலையங்கம்**

## பாராட்டுகிறோம்; ஆனால்...

இது உண்மைதானா என்று வியக்க வைக்கும், ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழக காவல்துறையும் கல்வித் துறையும் இணைந்து, ஜாதி, தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக, தமிழகம் முழுதும் வீதி நாடகங்கள் உள்ளிட்ட கலை வடிவங்களில் பரப்புரை நடத்துகிறது என்பதுதான் அந்த செய்தி. தமிழகக் காவல்துறைக்கு இப்படி ஓர் அரிய ஆலோசனை எங்கிருந்து வந்தது என்று நமக்குத் தெரியவில்லை. இப்படி ஒரு திட்டத்தை காவல்துறையும் கல்வித் துறையும் உருவாக்கி, களமிறங்கியதற்காக நாம் மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், இந்த அடிப்படையான பிரச்சினையை தனது தோளில் சுமந்து, பல ஆண்டுகளாகவே களத்தில் நிற்கும் அமைப்பு திராவிடர் விடுதலைக் கழகம். பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோதே இந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை, முடிவெட்ட மறுத்தல், செருப்பு அணிய, சைக்கிள் ஓட்ட, அலைபேசி பேச தடை என்று பல்வேறு வடிவங்களில் தீண்டாமைகள் தொடருகின்றன. இவற்றின் விவரங்களைத் தொகுத்தும் இரட்டைக் குவளை முறைகளை பின்பற்றும் தேனீர்க் கடை உரிமையாளர்கள் – கடைகள் குறித்த முகவரிகளைத் திரட்டியும், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் பட்டியல் வெளியிட்டோம். கிராமங்கள் தோறும் பரப்புரை இயக்கங்களை நடத்தி, இறுதியில் ‘இரட்டை தம்ளர்’ உடைப்புப் போராட்டங்களையும் நடத்தினோம். அப்போது பல இடங்களில் ஆதிக்க ஜாதியினரிடமிருந்து எதிர்ப்புகள் வந்தபோது, காவல்துறை ஆதிக்க ஜாதியினரின் பக்கம்தான் நின்றது என்பதே உண்மை. தீண்டாமையை சுட்டிக்காட்டிப் போராடிய கழகத்தினர்தான் கைது செய்யப்பட்டார்களே தவிர, தீண்டாமையைப் பின்பற்றும் ‘குற்றவாளிகள்’ மீது சட்டங்கள் பாயவில்லை.

கிராமங்களில், கட்சிகள் வேறுபட்டு, அரசியலில் மோதிக் கொண்டாலும், தீண்டப்படாத மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளில் கைகோர்த்துக் கொண்டு விடுகிறார்கள். காவல்துறையும் இவர்களைச் சார்ந்து நிற்கிறது.

ஜாதி எதிர்ப்பு இயக்கங்களின் தொடர்ச்சியாக இளைய சமுதாயத்தினரிடம் ஜாதி தீண்டாமைகளுக்கு எதிராக ‘எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்’ என்ற பரப்புரை இயக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த மார்ச் மாதம் தொடங்கியது. நல்ல சிந்தனை கொண்ட காவல்துறையின் சில உயர் அதிகாரிகளே, இன்றைய சூழலில் இது அவசியமான இயக்கம் என்று உற்சாகப்படுத்தினர். ஆனால், நகரம், கிராமங்களில் பரப்புரைகள் நடந்தபோது ஆதிக்க ஜாதியினரும் மதவெறி சக்திகளும் இணைந்து பரப்புரைக்கு எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். அதைக் காரணம் காட்டி பரப்புரைக் கூட்டங்களுக்கு காவல்துறை அனுமதி மறுத்தது.

சென்னை தாம்பரத்தில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தின் பொதுக் கூட்டத்திற்கு காவல்துறை கடைசி நாளில் அனுமதி மறுத்தது. அதேபோன்று மேட்டுப் பாளையத்தில் நடந்த ஜாதி எதிர்ப்புப் பயண விளக்கக் கூட்டங்களுக்கும் இரண்டு முறை ஒரே காரணத்தைக் கூறி, காவல்துறை அனுமதி மறுத்தது. கிணத்துக் கடவு கூட்டத்துக்கும் அனுமதி மறுத்தார்கள். ஒவ்வொரு முறையும் உயர்நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்து, நீதிமன்றங்களின் அனுமதி பெற்ற பிறகே ஜாதி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த வேண்டிய நிலையை காவல்துறை உருவாக்கிவிட்டது. இந்த நிலையில், காவல்துறையே ஜாதி எதிர்ப்புப் பரப்புரையை மாவட்டந்தோறும் ஒரு மாவட்டத்தில் 20 இடங்களில் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது என்ற செய்தி நம்மை ஆச்சரியப் படுத்தாமல் எப்படி இருக்கும்?

தமிழ்நாட்டில் சமுக ஒற்றுமையை குலைத்து, மக்களை வன்முறைக்கு எளிதில் தூண்டிவிடும் ஜாதிய–தீண்டாமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பது காவல்துறை யின் உண்மையான கவலையாக இருக்குமானால் உடனடியாக செய்ய வேண்டியது என்ன?

1. ஒரு மாவட்டத்தின் ஆதிக்க ஜாதியாக உள்ள பிரிவுகளைச் சார்ந்தவர்களை அம்மாவட்டத்தின் காவல்துறை அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது.
2. ஜாதி–தீண்டாமை எதிர்ப்புப் பரப்புரை இயக்கங்களுக்கு தடைபோடக் கூடாது.
3. தலித் மக்கள், தங்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து புகார் தந்தால், வழக்கைப் பதிவு செய்யாமல் சமரசம் பேசி, ஜாதி ஒடுக்குமுறையாளர்களைக் காப்பாற்றத் துடிக்கக் கூடாது.
4. தீண்டாமைக் குற்றங்களைத் தடுப்பதற்காக செயல்பட வேண்டிய காவல்துறை யின் சமூக நீதிப் பிரிவு, புகார் வரும்வரைக் காத்துக் கொண்டிருக்காமல், தீண்டாமைக் குற்றங்களைக் கண்டறிந்து தாமாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. தீண்டாமைக் கொடுமைகளைத் தடுக்கத் தவறும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களை இடை நீக்கம் செய்து, துறை சார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ‘ஆறுமுகம் சேர்வை’ வழக்கில் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருப்பதை செயல்படுத்திட முன் வரவேண்டும்.
6. ஜாதிகளைக் கடந்து, காதல் திருமணம் செய்ய விரும்புவோரைக் கொலை செய்து பழி தீர்க்கத் துடிக்கும் ஜாதி வெறியர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

சட்டங்களை கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதலே மிகவும் அடிப்படையானது. ஜாதிக்கு எதிராக இத்தகைய விழிப்புணர்வு இயக்கங்களை தங்களின் உழைப்பு, நேரம், பொருளை செலவழித்து, ஒரு இயக்கம் தொண்டாற்ற வருவது என்பது, இன்றைய சமூகச் சூழலில் மிக மிக அபூர்வம். பெரியாரின் இலட்சியச் சுடரை ஏந்தி, ஜாதி ஒழிப்புக்காக களமாடும் பெரியார் இயக்கத்தின் தன்னலமற்ற தோழர்கள், இதைச் செய்ய முன் வருகிறார்கள். அவர்களின் பரப்புரைகளை ஒரு பக்கம் தடுத்துக் கொண்டு, மற்றொரு பக்கம் காவல்துறை ஜாதி எதிர்ப்புப் பரப்புரை செய்வது, இரட்டை அணுகுமுறை மட்டுமல்ல; காவல்துறையின் நம்பகத் தன்மையையும் கேள்விக்குள்ளாக்கிவிடுகிறது என்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

காவல்துறையின் அணுகுமுறை மாறவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்!

# பார்ப்பனர்களின் அறிவு ‘விபச்சாரம்’

## அம்பேத்கர்



*பார்ப்பனர்களின் சங்பரிவார்களும், இந்து தேசியப் பா.ஜ.க.வினரும் அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடுகிறார்கள். பார்ப்பனர் பற்றி அம்பேத்கர் ஆழமாக முன் வைத்த வரலாற்று சித்திரம் இது.*

பார்ப்பனர்களை எடுத்துக் கொள்வோம். வரலாற்று வழியில் இவர்கள்தான் மொத்த இந்து மக்கள் தொகையில் சுமார் எண்பது சதவீதமாக அமைந்துள்ள அடிமை வகுப்புகளுக்கு (சூத்திரர்களும் தீண்டாதார்களுக்கும்) பரம வைரியாக இருந்துள்ளார்கள். இன்று இந்தியாவில் அடிமை வகுப்புகளைச் சேர்ந்த சாமானிய மனிதனின் இவ்வளவு இழிந்தவனாக, இவ்வளவு தாழ்ந்தவனாக, இப்படிக் கொஞ்சம்கூட நம்பிக்கையும் ஆவலும் அற்றவனாக இருக்கிறான் என்றால், பார்ப்பனர்களும் அவர்களின் தத்துவமும்தான் இதற்கெல்லாம் முழுக் காரணம்.

இந்தப் பார்ப்பனிய தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் ஐந்து: (1) வெவ்வேறு வகுப்புகளிடையே படிப்படியான ஏற்றத் தாழ்வு; (2) சூத்திரர்களையும் தீண்டாதார்களையும் அறவே ஆயுத நீக்கம் செய்தல்; (3) சூத்திரர்களும் தீண்டாதார்களும் கல்வி பெறுவதை அடியோடு தடை செய்தல்; (4) சூத்திரர்களும் தீண்டாதார்களும் அதிகாரம் வாய்ந்த இடங்களைக் கைப்பற்றுவதற்குத் தடை; (5) சூத்திரர்களும் தீண்டாதார்களும் சொத்துடைமை பெறுவதற்குத் தடை; (6) பெண்களை அறவே அடக்கி ஒடுக்குதல். ஏற்றத்தாழ்வுதான் பார்ப்பனியத்தின் அதிகாரப் பூர்வக் கொள்கை. சமத்துவ நாட்டம் கொள்ளும் கீழ் வகுப்புகளை அடக்கி ஒடுக்குவதை அவர்கள் தங்களின் இன்றியமையாக் கடமையாகக் கருதி, எவ்விதக் குற்ற உணர்வும் இன்றி அதைச் செய்து வந்துள்ளார்கள்.

கல்வி என்பது ஒரு சிலரைத் தாண்டிப் பரவாத நாடுகள் உண்டு. ஆனால், இந்திய நாட்டில் மட்டும்தான் அறிவாளி வகுப்பினர், அதாவது பார்ப்பனர்கள் கல்வியைத் தங்கள் ஏகபோகம் ஆக்கிக் கொண்டதோடு, கீழ் வகுப்புகள் கல்விப் பெறுவதைக் குற்றச் செயல் என்றும் அறிவித்தார்கள். இக் குற்றத்துக்குத் தண்டனையாக நாக்கை அறுக்கலாம் அல்லது ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றலாம். பிரிட்டிஷ் இந்திய மக்களை ஒட்டு மொத்தமாய் நிராயுதபாணிகளாக்கி இந்தியாவை ஆண்டு வருவதாக காங்கிரஸ் அரசியல்வாதிகள் குறை சொல்கிறார்கள். ஆனால், சூத்திரர்களையும் தீண்டாதார்களையும் நிராயுதபாணியாக்குவதுதான் பார்ப்பனர்கள் பிறப்பித்த சட்டத்தின் ஆட்சியாக இருந்தது என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். சொல்லப் போனால், சூத்திரர்களையும் தீண்டத்தகாதவர்களையும் நிராயுதபாணியாக்குவதுதான் பார்ப்பனர்கள் பிறப்பித்த சட்டத்தின் ஆட்சியாக இருந்தது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

சூத்திரர்களையும் தீண்டத் தகாதவர்களையும் நிராயுதபாணிகளாக்குவதில் பார்ப்பனர்கள் கொண்டிருந்த நம்பிக்கை எவ்வளவு வலுவானது தெரியுமா? பார்ப்பனர்கள் தங்கள் சிறப்புரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்துவதற்கு வசதியாக சட்டத்தில் திருத்தம் செய்தபோது சூத்திரர்களுக்கும் தீண்டாதார்களுக்குமான தடையை அப்படியே வைத்துக் கொண்டார்கள். அதன் கடுமையைக்கூடக் குறைக்கவில்லை. இன்று மிகப் பெரும்பாலான இந்திய மக்கள் சற்றும் வீரியமற்றவர்களாக, ஊக்கம் இழந்தவர்களாக, ஆண்மையில்லாதவர்களாகக் கீழ்ப்படுத்தி வைத்திருப்பது பார்ப்பனிய கொள்கையின் விளைவுதான். பார்ப்பனர் ஆதரவு தராத சமூகத் தீங்கு, சமூக அநீதி ஏதுமில்லை.

மனிதனை மனிதன் மனிதத் தன்மையின்றி நடத்துவது, சாதி உணர்ச்சி, தீண்டாமை, அணுகாமை, காணாமை போன்றவை பார்ப்பனர்க்கு மதமாகும். ஆனால், மனித அநீதிகள் மட்டுமே அவருக்குச் மதமென்று கருதுவது தவறாகும்.

உலகின் எந்த பகுதியிலும் இல்லாத அளவில் பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள படுமோசமான அநீதிகளுக்கு பார்ப்பனர் ஆதரவு தந்துள்ளனர். சதி என்ற பெயரில் கைம்பெண்கள் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். கைம்பெண்ணை உயிரோடு கொளுத்தும் சதி வழக்கத்திற்கு பார்ப்பனர் முழு ஆதரவு கொடுத்தனர். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. பார்ப்பனர் இந்த கொள்கையை ஆதரித்தனர். பெண்களுக்கு எட்டு வயதாகும் முன்பே திருமணம் செய்துவிட வேண்டும். அதன் பிறகு எப்போது வேண்டுமானாலும் திருமணத்தை நிறைவு செய்ய உரிமை உண்டு. பெண் பூப்பெய்தி விட்டாளா, இல்லையா என்பது பொருட்டன்று. பார்ப்பனர் இந்தக் கொள்கைக்கும் வலுத்த ஆதரவு தந்தனர். சூத்திரர்களுக்கும் தீண்டாதார்களுக்கும் பெண்களுக்கும் சட்டம் விதிக்கிறவர்கள் என்ற முறையில் பார்ப்பனர்கள் செய்திருப்பதன் வரலாறு உலகின் ஏனைய பகுதிகளின் அறிவாளி வகுப்புகளின் வரலாற்றுடன் ஒப்பிடுகையில் கருப்பு அத்தியாயமாகும். இந்தியாவில் பார்ப்பனர்கள் செய்திருப்பதுபோல் உலகில் வேறெந்த அறிவாளி வகுப்பினரும் படிக்காத நாட்டினரை நிரந்தர அறியாமையிலும் வறுமையிலும் ஆழ்த்தி வைப்பதற்காக ஒரு தத்துவத்தை கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவு வேறு எவரும் அறிவு விபச்சாரம் செய்தது கிடையாது.

இன்று ஒவ்வொரு பார்ப்பனரும் தன் மூதாதையர் வகுத்துக்

( 4ஆம் பக்கம்)

# ‘தலித்’ அர்ச்சகர் நாகமுத்து தற்கொலை: பின்னணி என்ன?

பெரிய குளம் கைலாச நாதன் கோயில் அர்ச்சகர் நாகமுத்துவை தற்கொலைக்குத் தூண்டிய வழக்கில் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தம்பியும், பெரிய குளம் நகராட்சித் தலைவருமான ராஜா என்பவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதிகாரச் செல்வாக்குக் காரணமாக அவருக்கு பிணையும் கிடைத்துவிட்டது. இந்த வழக்கிற்கு ‘அர்ச்சகர் தற்கொலை வழக்கு’ என்று ஊடகங்கள் பெயர் சூட்டியிருக்கின்றன. இதற்குப் பின்னால், ஒரு வரலாறு உண்டு. நாகமுத்து, தலித் சமுதாயத்தைச் சார்ந்தவர். இவர் தற்கொலை செய்துகொண்டதன் பின்னணியை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு 2012 செப். 17இல் வெளியிட்டது. அந்த செய்தி இது:

“டி. கல்லுப்பட்டியிலுள்ள கைலாசநாதன் கோயிலில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அர்ச்சகராக இருந்து வருபவர் நாகமுத்து. அவர் ஒரு தலித். நான்கு மாதங்களுக்கு முன்பு கோயில் புதுப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்த மே 5ஆம் தேதி கோயில் நிர்வாகக் குழுவில் இருந்த தலித் அல்லாத சாதியினர், நாகமுத்துவை அழைத்து, இனி கோயிலுக்குள் நுழையக் கூடாது என்றும், தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் பூஜை செய்வதை பெரும்பான்மை மக்கள் விரும்பவில்லை என்றும் கூறினர். 10 ஆண்டுகாலத்துக்கும் மேலாக என்னை ஏற்றுக் கொண்டவர்கள், இப்போது எதிர்ப்பது ஏன் என்று நாகமுத்து கேட்டார். உடனே நாகமுத்துவை சாதி வெறியர்கள் அடித்து உதைத்துள்ளனர்.

இது பற்றி நாகமுத்து கூறுகையில், “சில ஆண்டு களுக்கு முன்பாகவே பிரச்சினை தொடங்கிவிட்டது. முக்கியமான பண்டிகை மற்றும் ‘புனித’ நாட்களில் என்னை பூஜை சடங்குகள் நடத்த அனுமதிக்காமல், அன்று மட்டும் ‘பிராமண’ (பார்ப்பன) அர்ச்சகர்களை அழைத்து வந்து அவர்களுக்கு கூடுதலாக ஊதியம் தந்து பூஜைகளை செய்ய ஏற்பாடு செய்தனர். இதைக்கூட நான் ஏற்றுக் கொண்டு, ஏனைய நாட்களில் நான் பூஜைகளை செய்து வந்தேன். இப்போது நான் கோயிலுக்குள்ளேயே வரக் கூடாது; பக்தர்கள் பலர் நான் பூசை செய்வதை ஏற்கவில்லை என்று கூறினர். இதை நான் கேள்வி கேட்டபோது, இழிவாகப் பேசி என்னைத் தாக்கினர்” என்று கூறினார்.

நாகமுத்து காவல்துறையை அணுகியபோது, காவல்துறை, தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர், மனித உரிமையாளர்கள் ஆதரவோடு, உயர்நீதிமன்றத்தில் ‘ரிட்’ மனு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று காவல்துறைக்கு உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து தென்கரை காவல்நிலைய அதிகாரிகள் ‘எப்.அய்.ஆர்.’ மட்டும் ஆகஸ்டு 2 ஆம் தேதி பதிவு செய்தனர். எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

“இந்த வழக்கில் சாதிப் பிரச்சினை இருப்பதால் எங்களால் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. கோயில் நிர்வாகத்தினருக்கு அர்ச்சகரை பதவி நீக்கும் அதிகாரம் உண்டு. அதே நேரத்தில் நாகமுத்து தாக்கப்பட்டது உண்மை தானா என்று விசாரித்து வருகிறோம்” என்று பெயர் குறிப்பிட விரும்பாத காவல்துறை அதிகாரி கூறினார்.

“இந்தக் கோயில் பற்றி எவருமே கவலைப்படாத காலத்தில் நாகமுத்து என்ற தலித் எந்த எதிர்ப்பும் இன்றி அர்ச்சகராக இருந்தார். இப்போது சுற்றுப் பகுதியிலுள்ள செல்வாக்குள்ள பிரமுகர்கள் கோயிலைப் புதுப்பித்தப் பிறகு, கோயில் புதுப் பொலிவு பெற்றவுடன் இப்போது அவர்களுக்கு பார்ப்பன அர்ச்சர்கள் தேவைப்படுகிறார். இது வேதனைக்கும் கண்டனத்துக்கும் உரியது” என்று ‘எவிடென்ஸ்’ இயக்குனர் கதிர் கூறினார். “அர்ச்சகர் தொழில் வருமானத்தை மட்டுமே நம்பி இருந்த நாகமுத்து குடும்பத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி யுள்ளது” என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தி வெளியிட்டது.

இதற்குப் பிறகு அவர் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். பார்ப்பன அர்ச்சகர் நியமனத்துக்காக விரட்டியடிக்கப்பட்டு தற்கொலைக்கு தள்ளப்பட்டவர்தான் நாகமுத்து. இதுவே வழக்கின் பின்னணி

## அய்.நா.வில் கண்ணீர் சாட்சியங்கள்

அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் முன் சிறீலங்காவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் வரும் செப்டம்பரில் தீவிரமாகும் என்ற எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் சரணடைய வந்த விடுதலைப் புலிகள் தளபதிகள் சுட்டுக் கொல்லப்பட்டது, சர்வதேச நெறி முறையின்படி கடும் குற்றமாகும். இது குறித்து சிறிலங்கா மவுனம் சாதித்து வருகிறது. இந்த நிலையில், சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் சமாதானப் பிரிவுத் தலைவர் புலித் தேவனின் மனைவி குறிஞ்சி, கொல்லப்பட்ட புலிகளின் தளபதி மலரவன் மனைவி சுசீலாம்பிகை மற்றும் கொல்லப்பட்ட அரசியல் பிரிவு தலைவர் நடேசனின் மகன் ஆகியோர் அளித்த கண்ணீர் சாட்சியங்கள் அய்.நா.வில் பெரும் தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது.

சுட்டுக் கொல்லப்பட்டதை இவர்களின் சாட்சியங்கள் உறுதி செய்துள்ளன. அய்.நா.வின் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனமான பசுமைத் தாயகம், இங்கிலாந்து தமிழ் பேரவை, அமெரிக்க தமிழர் அரசியல் பேரவை ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த சாட்சியங்களுக்கு ஏற்பாடுகளை செய்தன. ஏற்கெனவே இலங்கை அளித்த உறுதிமொழியின்படி எந்த உள்நாட்டு விசாரணையும் இலங்கை நடத்தவில்லை. 13ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றும் முயற்சிகள் எதுவும் எடுக்கவில்லை என்பதால், இலங்கை தன்னை நியாயப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் குறைந்துவிட்டதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். இந்த நிலையில் 8 தமிழர்களைக் கொலை செய்த இராணுவ அதிகாரி ஒருவருக்கு மரண தண்டனை விதித்து அண்மையில் கொழும்பு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பும், அய்.நா.வை ஏமாற்றும், ஒரு கண் துடைப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. 1976ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்படவில்லை. ஏற்கெனவே மரணதண்டனைக்குள்ளான 400 பேர் தண்டனை நிறைவேற்றப்படாமலே உள்ளனர். மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே நமது கருத்து. ஆனாலும் இப்போது கொழும்பு நீதிமன்றம் விதித்துள்ள மரணதண்டனை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையே என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

## பார்ப்பன பயங்கரவாதத்தை மோடி அரசு காப்பாற்றுகிறது

மகாராஷ்டிராவில் உள்ள மாலேகான் பகுதியில் 2008இல் வெடிகுண்டுகள் வெடித்ததில் 37 உயிர்கள் பலியாயின. 140 பேர் படுகாயமடைந்தனர். வழக்கம்போல் காவல் துறை முஸ்லீம் இளைஞர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுத்தது. வழக்கு சிறப்புப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டவுடன் இந்த வெடிகுண்டு தாக்குதலை நடத்தியது பார்ப்பனப் பயங்கரவாதம் என்ற உண்மைகள் வெளிவரத் தொடங்கின. பிரங்யாசிங் தாக்கூர் என்ற பெண் சாமியார், சிவ் நாராயண் கோபால், சிரி கார்த் புரோகித் கல்சகரா, ஷியாம் போன்ற இந்து பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அபினவ் பாரத் என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கின் அரசுத் தரப்பு வழக்கறிஞராக செயல்பட்ட ரோகினி செலியன், அண்மையில் அதிர்ச்சியான தகவல்களை வெளியிட்டுள்ளார். மோடி ஆட்சிக்கு வந்தவுடன், தேசிய புலனாய்வுக் கழகத்தைச் சார்ந்த ஒரு அதிகாரி, இவரை சந்தித்து, வழக்கில் தீவிரம் காட்ட வேண்டாம் என்று கூறியிருக்கிறார். வழக்கில் வேறு புதிய வழக்கறிஞரை நியமிக்கவிருப்பதால் வழக்கிலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார். மாலேகான் குண்டு வெடிப்பு குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சிகளை மோடி ஆட்சி தொடங்கிவிட்டது.

## அடுக்கடுக்கான ஊழல்கள்

பதவியேற்ற ஓராண்டு காலத்திலேயே மோடி ஆட்சியின் ஊழல் முறைகேடுகள் வெளிவரத் தொடங்கி விட்டன. ‘அய்.பி.எல்.’ என்ற கிரிக்கெட் சூதாட்ட நிறுவனத்தின் தலைவராக இருந்து பல கோடி சுருட்டிய - தேடப்படும் குற்றவாளி லலித்மோடிக்கு, போர்ச்சுகல் நாட்டுக்கு பயணிக்க ஆவணங்கள் கிடைப்பதற்கு வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா, இலண்டன் தூதரகத்துக்கு மறைமுகமாக பரிந்துரை செய்தார் என்பது ஒரு புகார். இராஜஸ்தான் முதல்வரான வசுந்தரா ராஜே, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, லலித் மோடிக்கு இலண்டன் குடியுரிமை வழங்க எழுத்துப் பூர்வமாக தனது ஆதரவைத் தெரிவித்ததோடு, இந்த உண்மை இந்திய அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ தெரியக் கூடாது என்று அதில் குறிப்பிட்டிருந்தது. மற்றொரு மிகப் பெரும் முறைகேடு; வசந்தராவின் மகனும், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினருமான துஷ்யந்த் என்பவர் நடத்தும் போலி நிறுவனத்துக்கு லலித்மோடி கோடிக்கணக்கில் பணம் கொடுத்திருக் கிறார்.

மற்றொரு ஊழல், மகாராஷ்டிராவில் பா.ஜ.க. சிவசேனை கூட்டணி ஆட்சியோடு தொடர்புடையது. கார் விபத்தில் பலியான பா.ஜ.க. தலைவர் கோபிநாத் முன்டேயின் மகள் பங்கஜா முன்டே, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சர். ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலான எந்தப் பொருளையும் டெண்டர் மூலம் வாங்க வேண்டும் என்ற விதியை மீறி, 24 அரசு உத்தரவுகளைப் போட்டு, 204 கோடிக்கான பொருள்களை நேரடியாக வாங்கி ஊழல் செய்திருக்கிறார். ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மய்யங்களுக்காக குழந்தைகளுக்காக வாங்கப்பட்ட உணவுப்பொருள்களில் இந்த ஊழல் நடந்திருக்கிறது. இந்த குழந்தை உணவுப் பொருள் களில் களிமண், கற்கள் கலக்கப்பட்டு இருந்ததைக் கண்டுபிடித்தபோது, இந்த முறைகேடுகள் வெளியே வந்துள்ளன. இன்னும் எத்தனை ஊழல்கள் வெளிவரப் போகிறதோ தெரியவில்லை.

## அத்வானி தரும் நெருக்கடி

அவசர நிலை மீண்டும் வரலாம் என்று கூறிய அத்வானி, பிறகு அதை காங்கிரசை மனதில் வைத்துக் கூறியதாகக் கூறினார். இப்போது சுஷ்மா, இராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா மீது முறைகேடுகள் புகார் வந்த நிலையில் மற்றொரு ‘ஏவுகணை’யை வீசியிருக்கிறார். ‘ஹவாலா’ குற்றச்சாட்டில் தனது பெயர் அடிபட்டபோது உடனே பதவி விலகிய தோடு, நீதி விசாரணைக்கும் உட்பட தயாராக இருந்ததாக இந்தி நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். யஷ்வந்த் சின்ஹா என்ற மற்றொரு பா.ஜ.க. தலைவர், “75 வயதுக்கு மேற்பட்டவர்கள் பா.ஜ.கவில் மூளைச் சாவுக்கு உட்பட்டுவிட்டனர்” என்று கூறியிருக்கிறார். மோடி, அமித்ஷா என்ற இரு சர்வாதிகாரிகளிடம் நாடு சிக்கிக் கொண்டு சீரழிகிறது என்று மகாராஷ்டிரா பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரும் சட்டமன்ற உறுப்பினருமான ராஜ் புரோகித் என்பவர் இந்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

“நாளுக்கு நாள் பா.ஜ.க.வின் புகழ் அதல பாதாளத்தில் சரிந்து வருகிறது. கட்சியினர் இந்த உண்மையை தலைமையிடம் பேசப் பயப்படு கிறார்கள். காரணம், பதவி போய் விடுமோ என்ற அச்சம். அவர்கள் பதவியை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்கள் என்று குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகிறார் ராஜ் புரோகித்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

DATE OF PUBLICATION 02.07.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

### கொளத்தூர் கழக படிப்பகத்துக்கு நிலம் வழங்கிய

# இன உணர்வாளர் டாக்டர் ஆறுமுகம் முடிவெய்தினார்



சேலம் மாவட்டம் கொளத்தூரைச் சார்ந்த, கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர். துரைசாமியின் தந்தையும், கழக ஆதரவாளர் வழக்கறிஞர். எம்.கே.அர்ச்சுணனின் சித்தப்பாவும் இன உணர்வாளருமான டாக்டர். எம்.பி.ஆறுமுகம், கடந்த 26-6-2015 அன்று அதிகாலை முடிவெய்தினார்.

அவர், அவரது நண்பர் டாக்டர். அகில்சாமியுடன் அடிக்கடி பெரியார் திடலுக்கு வருபவராக இருந்தவர்; அவ்வப்போது அவர்களின் துறையில் நடக்கும் பார்ப்பனக் கொட்டங்களை “விடுதலை”க்கு எழுதியவர்களும் ஆவர். தந்தை பெரியார், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோருடன் நல்ல அறிமுகமும், நட்பும் உடையவர். கொளத்தூரில் கழகப் படிப்பகம் அமைப்பதற்கு 6¼ சென்ட் (இன்றைய மதிப்பு சுமார் 25 இலட்சம்) நிலத்தை நன்கொடையாக வழங்கியும் உள்ளார்.

அவர் மறைவையொட்டி கொளத்தூர் நகரக் கழகத்தின் சார்பில் இரங்கல் துண்டறிக்கைகளும், பதாகைகளும் வைக்கப்பட்டன. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக மாவட்டப் பொறுப்பாளர்கள், தோழர்கள் அவரது இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

### அம்பேத்கர்–பெரியார் படிப்பு வட்டம்

# திருச்சியில் ‘யாதும்...’ ஆவணப்படம் திரையிடல்

திருச்சி மாநகரில் திராவிடர் விடுதலைக் கழகம், இடதுசாரி கட்சிகள், சிறுபான்மையினர், தலித் அமைப்புகள் ஒருங்கிணைந்து, ஆவணப் படங்களை திரையிட்டு - அது குறித்த விவாதங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இப்போது அந்த அமைப்பு அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 13ஆம் தேதி உறையூரில் உள்ள ‘கான்பரன்ஸ் ஹாலில்’ கோம்பை எஸ். அன்வர் இயக்கிய ‘யாதும்...’ என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது. மதத்தால் மாறுபட்டாலும் இஸ்லாமியர்கள், இனத்தால் தமிழர்களே என்று தமிழர்களோடு - இஸ்லாமியர்கள் பிணைந்து நிற்கும், கலை, பண்பாடு கூறுகளைப் பேசுகிறது. இந்த ஆவணப்படம் திராவிடர் விடுதலைக் கழகம், த.மு.மு.க., கம்யூனிஸ்ட் மக்கள் விடுதலை, தமிழக ஒடுக்கப்பட்டோா விடுதலை இயக்கம், எஸ்.அய்.ஓ. அமைப்புகளைச் சார்ந்த 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். இயக்குனர் அன்வர், திரையிடலைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களில் பங்கேற்று விளக்கமளித்தார். கழக மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி, அமைப்பாளர் குணா, மாநகர அமைப்பாளர் தமிழ் முத்து, மாவட்ட செயலாளர் கந்தவேல். குமார், பொருளாளர் மனோகரன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் பங்கேற்றனர். கழகத் தோழர் புதியவன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். ‘சட்ட உரிமைகள் கழக’த் தோழர் அருண், அவரது துணைவியார் ஜான்சிராணி, அரங்கம் மற்றும் அறிவியல் சாதனங்களை வழக்கம்போல் தந்து உதவினர்.

# கழகச் செயல்வீரர் சரவணன் படத்திறப்பு



முடிவெய்திய சென்னை கழகச் செயல்வீரர் சரவணன் படத்தை 16.6.2015 அன்று இராயப்பேட்டை முருகேசன் மண்டபத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். கழகத் தோழர்கள் அன்பு தனசேகர், தபசி குமரன், வழக்கறிஞர்கள் திருமூர்ததி, துரை. அருண், பி.சாரநாத், எம்.பன்னீர்செல்வம், பத்திரியாளர் அமுதா, ஏ.கார்த்திக், டிங்கர் குமரன் (த.பெ.தி.க.) ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். சு. பிரகாசு நன்றி கூறினார்.

சரவணனின் இரண்டு பெண் குழந்தைகளின் படிப்பு செலவை கழகத் தோழர்களே ஏற்பதாக நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டது.

# ஈரோடு கிருஷ்ணம்பாளையம் பகுதியில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், 26.06.2015 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தெருமுனைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு ஈரோடு நகரத் தலைவர் திருமுருகன் தலைமை தாங்கினார். தலைமைக்குழு உறுப்பினர் இரத்தினசாமி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் சண்முகப்பிரியன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வைராபாளையம் சுப்பிரமணி பெரியார் கொள்கை விளக்கப் பாடல்கள் மற்றும் ஜாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினார்.

சாமியார்களின் மோசடித் தனங்களை தோலுரித்துக் காட்டி, காவை இளவரசு ‘மந்திரமல்ல, தந்திரமே?’ நிகழ்ச்சியை நடத்தினார். ஆசிரியர் சிவக்குமார், இரத்தினசாமி ஆகியோர் உரையாற்றினர். மக்களிடம் மலிந்து கிடக்கும் மூடநம்பிக்கைகள் பற்றியும், இன்றைய நிலைமையில் சாதிய ஒடுக்குமுறைகள் பற்றியும், தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி.வேலுச்சாமி சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில்

“நீங்கள் வணங்குகின்ற முருகக் கடவுளே, ஜாதி மறுப்புத்திருமணம் (குறவர் சமூகப் பெண்ணான வள்ளியை) செய்து கொண்டுள்ள நிலையில், ஜாதிவிட்டு காதலிப்பது, ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்து கொள்வது போன்றவை ஏற்படும் போது எதிர்ப்பது ஏன்?” என்று கேள்வி எழுப்பினார்.

சாலையின் இருமருங்கிலும் ஏராளமான மக்கள் கூடி நின்று இரவு 10.15 மணி வரை நடந்த கூட்டத்தைக் கேட்டனர். கூட்டத்தை செவிமடுத்த காவல்துறையினரும் நம்மிடம் வந்து வேலுச்சாமியின் பேச்சு மிகச் சிறப்பாக இருந்தது என பாராட்டினர்.

கூட்டத்தில் ஆசிரியர் மோகன்ராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் மரவபாளையம் குமார். சென்னிமலை செல்வராசு, சிவானந்தம், கிருஷ்ணன், சிஎன்சி கல்லூரி மாணவர் மூர்த்தி, நங்கவள்ளி சிவக்குமார், நகர துணைத்தலைவர் மரப்பாலம் சத்தியமூர்த்தி, மற்றும் ஏராளமான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.


(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த இந்த பார்ப்பனர்தத்துவத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்து சமுதாயத்தில் பார்ப்பனர் ஒரு அயற்கூறு ஆவர். பிரஞ்சுக்காரருக்கு ஜெர்மானியரும், யூதரல்லாதவருக்கு நீக்ரோவும் வெள்ளையரும் எப்படியோ அதேபோல் சூத்திரர்களுக்கும் தீண்டாதார்களுக்கும் பார்ப்பனர் அயலவர் ஆவர். பார்ப்பனருக்கும் சூத்திரர்கள், தீண்டாதார்களாகிய கீழ் வகுப்பினருக்கும் மெய்யாகவே பெருத்த இடைவெளி உள்ளது. அவர்களுக்கு அயலவர் மட்டுமல்ல; பகையானவரும் ஆவார். அவர்களுடனான உறவில் மனசாட்சிக்கு இடமேயில்லை, நீதிக்கு அழைப்பே இல்லை.

**– “காங்கிரசும் காந்தியும் தீண்டாத மக்களுக்கு செய்தது என்ன?” நூலிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 02 July 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூலை 09, 2015 | புரட்சி 14 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

## ஜூலை 19இல் தர்மபுரியில் கழகத்தின் செயலவைக் கூடுகிறது

4-7-2015 சனிக்கிழமையன்று காலை10-00 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில், சென்னை, கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கழகத்தின் செயல்பாடுகள், தேவைப்படும் மாற்றங்கள், இந்து மதவெறி இயக்கங்களின் நிகழ்கால நடவடிக்கைகள், கழகத்தின் முன்னணி அமைப்புகளான தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்திய குழந்தைகள் பழகு முகாம், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சந்திப்பு, சுயமரியாதை கலை, பண்பாட்டுக் கழகத்தின் காட்டாறு இதழ், கழகத்தின் அடுத்த கட்ட செயல்திட்டங்கள் போன்ற பல்வேறு செய்திகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதன் பின்னர் கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது.

1) கழகத்தின் செயலவைக் கூட்டத்தை எதிர்வரும் 19-7-2015 ஞாயிறு அன்று தருமபுரியில் நடத்துவது எனத் தீர்மானிக்கப் பட்டது.

2) தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் செயலவையைத் தொடர்ந்து மாவட்டக் கழகங்களின் கலந்துரையாடல்களை நடத்துவது, மாவட்டக் கழக அமைப்புகளைப் புதுப்பிப்பது, செயல்பாடுகளை முடுக்கி விடுவது எனத் தீர்மானிக்கப் பட்டது.

3) தனியார்துறை இட ஒதுக்கீடு, எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் பயண நோக்கங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்த கோரிக்கை ஒன்றினை செயலவையில் விவாதித்து ஒரு பரப்புரைத் திட்டத்தை உருவாக்குவது எனத் தீர்மானிக்கப் பட்டது.

4) இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த அய்.நா.வை வலியுறுத்தி நடைபெறும் கையெழுத்து இயக்கங்களை மேலும் தீவிரப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

5) தங்கள் சொந்த வேலைகள் காரணமாக கழகத் தலைமைக் குழுவில் தொடர்ந்து பணியாற்ற இயலாமையால் விலகல் கடிதம் கொடுத்துள்ள தோழர்கள் சூலூர் தமிழ்ச்செல்வி, தி. தாமரைக் கண்ணன் ஆகியோரின் விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# ஜாதி மறுப்பு காதலர்களை வரவேற்று வாழ்வளிக்கும் - ஒரு கிராமம்

*ஜாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட காதலர்களுக்கு புகலிடமும் பாதுகாப்பும் தரும் கிராமம் எஸ்.பட்டி. இளவரசனை ஜாதி வெறி பலி கொண்ட அதே தர்மபுரியில்தான் இந்த கிராமமும் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.பட்டிகள் உருவாக வேண்டும்.*

தமிழ்நாட்டில் ஆச்சரியமான காதல் கிராமம் ஒன்று இருக்கிறது.1500 குடும்பங்கள் வசிக்கும் அந்த கிராமத்தில் ஏராளமானவர்கள் காதல் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். அதைவிட அதிசயம் என்னவென்றால், பல்வேறு பகுதிகளில் பெற்றோரின் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்துகொண்ட 200 ஜோடிகளின் உண்மைக் காதலை உணர்ந்து, அந்த கிராமத்தில் அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த அதிசய காதல் கிராமத்தின் பெயர் எஸ்.பட்டி. தர்மபுரி மாவட்டம் அரூரில் இருந்து திருப்பத்தூர் செல்லும் சாலையில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காதல் திருமணங்களுக்கும், கலப்புத் திருமணங்களுக்கும் அடையாள சின்னமாக விளங்கி வரும் எஸ்.பட்டியில் இதுவரை நூற்றுக்கணக்கான காதல் திருமணங்கள் நடந்துள்ளன. அந்த காதல் தம்பதிகள் சமூக இடர்பாடுகளை எல்லாம் கடந்து வெற்றிகரமாக வாழ்ந்து, காதலை ஜெயிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் இதில், ‘ஹைலைட்’!

“காதல் ஒரு அற்புதமான உணர்வு. சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும் கடந்து மனிதர்களை ஒருங்கிணைக்கும் சக்தி காதலுக்கு உண்டு” என்கிறார்கள், இந்த கிராமத்தில் வாழும் காதல் தம்பதிகள்.

“பொதுவுடைமை கொள்கைகளின்மீது ஏற்பட்ட ஈர்ப்பின் காரணமாக உருவான சுயமரியாதை உணர்வு, கல்வியறிவின் மூலம் கிடைத்த சிந்தனை மாற்றம் ஆகியவைகளே நாங்கள் காதல் திருமணங்களை ஆதரிக்க மூலகாரணமாக இருக்கின்றன” என்கிறார்கள், இந்த கிராமத்து படித்த இளைஞர்கள்.

எஸ்.பட்டியில் பெரும்பாலானவர்கள் ஆசிரியர்கள். பல்வேறு அரசு துறைகளில் பணிபுரிபவர்களும் அதிக அளவில் இருக்கிறார்கள். கணிசமானவர்கள் விவசாய பணிகளையும் செய்து வருகிறார்கள்.

இந்த கிராமத்து முதல் காதல் கலப்பு திருமண இணையர்: ஆண்டி-துளசியம்மாள். 85 வயதான ஆண்டியும், துளசியம்மாளும், இப்போது கொள்ளு பேரன், பேத்திகளுடன் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

பெரியவர் ஆண்டி சொல்கிறார்: “சுதந்திரத்திற்கு முன்பு இந்தப் பகுதியில் வசித்தவர்களுக்கு சிறிதும் படிப்பறிவு இல்லை. ஆண்கள் தலைமுடியைகூட வெட்டாமல் ஜடையுடன் சுற்றி திரிவது வழக்கம். சுதந்திரம் கிடைத்த ஆண்டில் இந்த ஊரில் தொடங்கப்பட்ட பள்ளிக்கு அரூரை சேர்ந்த அப்பாத்துரை என்பவர் ஆசிரியராக வந்தார். சமூக ஏற்றத்தாழ்வுகள் அதிகம் இருந்த அந்த காலகட்டத்தில் ‘சுயமரியாதையுடன் வாழ வேண்டும்.



காதல் மணம் முடித்த பெண்கள்

அடிமை மனப்பான்மை இருக்கக் கூடாது’ என்ற சிந்தனையை இந்த கிராம மக்களிடையே ஏற்படுத்தினார். அதனால் தலைமுடியை வெட்டிக் கொள்ளும் பழக்கம் இளைஞர்களிடம் ஏற்பட்டது. அப்பாத்துரைதான். அந்த காலத்தில் எங்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார்” என்றார்.

உங்களுக்கும் துளசியம்மாளுக்கும் எப்படி காதல் அரும்பியது?

“துளசியம்மாள் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர். அவருடைய வீட்டில் நான் விவசாய வேலைகளை செய்து வந்தேன். அப்போது எனக்கும், துளசியம்மாளுக்கும் இடையே காதல் மலர்ந்தது. 1955ஆம் ஆண்டு துளசியம்மாள் வீட்டைவிட்டு வெளியேறி என்னை திருமணம் செய்து கொண்டார். நாங்கள் கலப்பு திருமணம் செய்து கொண்டபோதும், என்னுடைய குணம் குறித்து தெரிந்து இருந்ததால் எனது மாமனார் குடும்பத்தினர் எங்களுக்கு எந்தவித இடைஞ்சலும் செய்யவில்லை.

அந்த காலத்தில் நான், எனது மனைவியுடன் தெருக்களில் நடந்து சென்றால், ‘காதல் திருமணம் செய்தவர்கள்’ என்று கூறி கைத்தட்டி வரவேற்பார்கள். 60 ஆண்டுகளாக மனைவியின் குடும்பத்தினருடன் சமூக உறவு வைத்திருக்கிறேன்” என்று மகிழ்ச்சியோடு சொல்கிறார், அந்த கிராமத்தின் முதல் காதலரான பெரியவர் ஆண்டி.

எஸ்.பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெயிண்டர் முத்து 20 ஆண்டுகளுக்கு முன்பு, அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த வனிதாவை காதலித்து கலப்பு திருமணம் செய்தவர்.

வனிதா சொல்கிறார்: “எங்கள் காதலுக்கு மிகப் பெரிய எதிர்ப்பு இருந்தது. இருந்தபோதிலும் இந்த கிராமத்தினர் அளித்த ஆதரவே எங்கள் வாழ்க்கை நிலைக்கக் காரணம். எங்கள் மூத்த மகளுக்கு தற்போது திருமணமாகிவிட்டது. எவ்வளவோ காலம் கடந்துவிட்டது. ஆனாலும் கலப்பு திருமணம் செய்துகொண்ட ஒரே காரணத்தால எனது அம்மா இறந்த போது இறுதி சடங்கில் என்னை அனுமதிக்கவில்லை. காதல் திருமணம் செய்ததால் எனக்கு ஏற்பட்ட பெரிய இழப்பு அது...” என்றார்.

( 4ஆம் பக்கம்)

## கோகுல்ராஜ் படுகொலை: காவல்துறை இயக்குனரிடம் கழகம் மனு



தலித் இளைஞர் கோகுல்ராஜ், ஜாதி ஆணவக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டதைக் கொலை வழக்காக மாற்ற வலியுறுத்தி, 1.7.2015 பகல் 1 மணியளவில் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சட்டம் ஒழுங்குப் பிரிவு துணை இயக்குனரிடம் மனு அளித்தார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதிக்க ஜாதியாக இருக்கும் சமூகப் பிரிவைச் சார்ந்தவர்களை காவல்துறை அதிகாரிகளாக நியமிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும், காவல்துறை கல்வித் துறையுடன் இணைந்து ஜாதி எதிர்ப்புப் பரப்புரை நடத்துவதை வரவேற்றும், அதே நேரத்தில் கழகம் நடத்தும் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை இயக்கத்துக்கு காவல்துறை தடை விதிப்பதை நிறுத்தக் கோரியும் மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது. கோரிக்கைகளில் நியாயம் இருப்பதாகக் கூறிய அதிகாரி, சமூக நீதி, ஜாதி வெறி தலைதூக்கும் ஆபத்துகளை சுட்டிக்காட்டினார். மாவட்ட செயலாளர் உமாபதி, தபசி குமரன், வழக்கறிஞர் அருண், அன்பு தனசேகரன் ஆகியோர் இயக்குனரை சந்திக்க உடன் வந்தனர்.

**தலையங்கம்**

## நகரமயமாகும் தமிழ்நாடு!

இந்தியாவின் “சமூகப் பொருளாதார - ஜாதி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு” விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் ஜாதி கணக்கெடுப்புப் பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை. இதன்படி கிராமங்களில் வாழும் மக்களில் 30 சதவீதம் பேர் நிலமற்றவர்களாக வாழ்க்கையைக் கடப்பதற்கு கூலி வேலை செய்யும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். 25 வயதுக்கு மேற்பட்டவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 23.5 சதவீதம் பேர். கிராமங்களில் உயர்நிலைப் பள்ளியை நிறைவு செய்தவர்கள் 5.4 சதவீதம். 3.4 சதவீதம் மட்டுமே கல்லூரிகளில் பட்டப்படிப்பு முடித்தவர்கள். கிராமப்புறங்களில் 90 சதவீதக் குடும்பங்களில் ஊதியம் பெறும் ஊழியர்கள் எவரும் கிடையாது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ‘கல்வி’க்காக தனிக் கடவுளைக் கொண்டுள்ள நாடு இது. ‘பாரதப் பூமி’, ‘புண்ணிய பூமி’, ‘மகான்கள் அவதரித்த’, ‘வேதம் செழித்த’, ‘அவதாரங்கள்’ எடுத்த பூமி என்று பெருமை பேசப்படும் நாட்டின் நிலை இதுதான். மக்களை வறுமையில் மூழ்கச் செய்துவிட்டு, ‘இந்து’ தேசத்தை உருவாக்கிட துடிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் என்ன நிலை? இந்தியாவிலேயே நகர்மயமாவதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. இந்தியா முழுமைக்கும் கிராமங்களில் வசிக்கும் குடும்பங்கள் 73 சதவீதம். ஆனால், தமிழகத்தில் 57.53 சதவீத குடும்பங்களே கிராமத்தில் வசிக்கின்றன. 42.47 சதவீத குடும்பங்கள் நகரங்களில் வசிக்கின்றன. ‘வர்ணாஸ்ரமம்’ வேர் பிடித்து நிற்கும் கிராமங்கள் மறைந்து, கிராம-நகர வேறுபாடுகள் ஒழிய வேண்டும் என்று பெரியார் வலியுறுத்திய கருத்து வெற்றி பெற்று வருகிறது என்றே சொல்ல வேண்டும். கிராமங்களில் வாழும் 85.58 சதவீத மக்களின் வருமானம் ரூ.5000க்கு கீழேதான் இருக்கிறது. 55.80 சதவீத குடும்பங்கள் நில மற்றவர்களாக கூலி வேலை செய்வோராகவே உள்ளனர். தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஒப்பீட்டளவில் வறுமை நிலை குறைந்திருப்பதற்குக் காரணம், பொது விநியோகத் திட்டம் உள்ளிட்ட சமூக நலத் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுவதுதான் என்று சமூகவியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இந்தியாவில் ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடுகையில், கிராமக் குடும்பங்களில் அலைபேசிகள், இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதில் தமிழகமே முன்னணியில் நிற்கிறது. இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதில் இந்தியா முழுதும் (கிராமக் குடும்பங்களில்) 17.43 சதவீதம்; தமிழ்நாட்டில் 29.91 சதவீதம். அலைபேசிகளைப் பயன்படுத்துவோர் (கிராமக் குடும்பங்களில்) தேசிய சராசரி 68.35; தமிழ்நாட்டில் 78.46. அதேபோல் குளிர்சாதனப் பெட்டிகளை பயன்படுத்தும் கிராமக் குடும்பங்கள் - தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் அதிகம் (12.13 சதவீதம்). தமிழ்நாட்டு கிராமங்களில் குடியிருப்போரில் அரசு வேலைகளைவிட தனியார் நிறுவனங்களில் வேலைக்குப் போவோர் அதிகம். ஆனால் பாசன வசதி கொண்ட பயிரிடும் நிலங்களை வைத்துள்ள பட்டியலினப் பிரிவினர் தேசிய சராசரியைவிட (17.47), தமிழ்நாட்டில் குறைவாகவே (5.01) உள்ளனர் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

தமிழ்நாட்டில் திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வந்து, தமிழகத்தையே சீரழித்துவிட்டார்கள் என்று ‘வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ’ என்று பேசி வந்தவர்களுக்கு இந்தப் புள்ளி விவரங்களே சரியான மறுப்பாகும். ஆனாலும், தமிழ்நாட்டில் அதிகாரத்துக்கு மாறி மாறி வந்த திராவிட அரசியல் கட்சிகள் திட்டமிட்ட தொலைநோக்குப் பார்வையில் மக்கள் நலனை கருத்தில் கொண்டு கவலையோடு செயல்பட்டிருந்தால், நல்ல மாற்றங்களை நிகழ்த்திக் காட்டியிருக்க முடியும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. இந்தியாவில் ஒப்பீட்டளவில் ஆய்வு செய்யும்போது தமிழகம் ஒரு படி மேலே இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். தமிழ்நாட்டில் நீண்டகாலம் நடந்த - சமூக நீதி, பார்ப்பன எதிர்ப்புப் போராட்டங்களின் தாக்கமும் இந்த வளர்ச்சியில் பெரும் பங்காற்றியிருப்பதை மறுத்துவிட முடியாது.

இப்போது, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லாமல், பின்னோக்கி இழுத்துப்போக ஜாதி வெறி, மதவெறி சக்திகள் தீவிரம் காட்டி வருவது தமிழகத்தைச் சூழ்ந்து நிற்கும் ஆபத்தாகும். சமூக-பொருளியல் தளங்களில் தமிழர்கள் வலிமை பெறவும் முன்னேற்றத்தை நோக்கி நகரவும் வலிமையான மக்கள் இயக்கங்கள் உருவாக வேண்டும்.

இந்த இயக்கங்கள் ‘ஜாதி, மத, பார்ப்பனிய ஆபத்துகளையும் அதன் மக்கள் விரோத கருத்துகளையும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். விளிம்பு நிலை மக்களின் வாழ்வுரிமைக்காக அவர்களின் கல்வி-பொருளாதார-வேலை வாய்ப்பு உரிமைகளைப் பறிக்கும் பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டல்களையும் அதற்கு பச்சைக்கொடி காட்டும் ஆட்சியாளர்களையும் எதிர்த்து, மக்களை அணி திரட்ட வேண்டும்; இது காலத்தின் அறைகூவல்!

### 2016இல் விந்தன் நூற்றாண்டு

# இராஜாஜியின் ‘பஜகோவிந்தத்’துக்கு எதிராக ‘பசிகோவிந்தம்’ எழுதியவர்

*சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை தனது படைப்புகளில் எழுதியவர் விந்தன். அவரது நூற்றாண்டு 2016இல் வருகிறது.*

“போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் இரசாயனங்களை, சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு ‘மின்சார சிகிச்சையளிக்கும்’ புத்தம் புது முறைகளை குரூர வசீகரங்களைப் படம்பிடித்துக் காட்டி, மனித உள்ளத்திலே எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது, தங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டியெழுப்பும் உணர்ச்சி மிக்க உயிரோவியங்களை, அந்த அபிமானத்துக்கு விரோதமாயிருந்த, இருந்து வருகிற, ‘மனித மிருகங்’களின் மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட முயலும் நவயுகக் கதைகளை இன்றுபோல் நீங்கள் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டை மேம்படுத்த வேண்டும். இதுவே என் எண்ணம். இதுவே என் இருபது வருட கால எழுத்து” (விந்தன்: 15.5.1956: விந்தன் கதைகள்: முன்னுரை)

“இன்று மனித வாழ்வில் முக்கியமாக இடம் பெற்றிருப்பவை மூன்று. முதலாவது கடவுள்; இரண்டாவது மதம்; மூன்றாவது கலை. எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான்! என்று சொல்லிச் சொல்லி மனிதனின் தன்னம்பிக்கையைக் கடவுள் கொன்று கொண்டிருக்கிறார். ‘இந்த உலகத்தில் அநுபவிக்கும் துன்பத்தைப் பற்றிக் கவலைப்படாதே; மறு உலகத்தில் இன்பம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது’ என்று சொல்லி மனிதனை மதம், சாவை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. கடைசியாக உள்ள கலையாவது மனிதனை வாழ வைக்கிறதா என்றால் அதுவும் இல்லை! கடவுளையும் மதத்தையும் சிருஷ்டி செய்து, மனிதனின் ஆயுளைக் காலத்திற்கு முன்னால் கொள்ளையடிக்கும் பிக்பாக்கெட் முதலாளிகளின் கத்தரிக்கோலாகவும் அது மாறி விட்டது! ஆம் மாறத்தான் வேண்டும்; மனிதன் மனிதனாக வாழத்தான் வேண்டும். இதற்கு வேண்டியதெல்லாம் என்ன?

‘ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் நம் உழைப்புக்கு ஏற்ற மதிப்பு’ அந்த மதிப்பைப் பெறுவதற்காகத் தான் இன்று கடவுளுடன் நாம் போராடுகிறோம்; மதத்துடன் நாம் போராடுகிறோம். இந்தக் கடுமையான போராட்டத்தில் நாம் வீழ்ந்தாலும் சரி, நம் சந்ததிகளாவது வாழ வேண்டும். மேற்படி குறிக்கோளுடன் எழுதப்படுபவை எதுவாயிருந்தாலும் அதுவே ‘மக்கள் இலக்கியம்’ (விந்தன்: சமுதாய விரோதி - சிறுகதைத் தொகுப்பு: முன்னுரை ஜூலை 1956)

கோவிந்தன் என்னும் விந்தன் (1916-1975) எவ்வகையான கருத்து நிலையோடு வாழ்ந்தார் என்பதை மேலே கண்ட அவரது இரு மேற்கோள்கள் நமக்குச் சொல்லும்.

விந்தனின் எழுத்துலக வாழ்க்கை, ‘கல்கியில் பணியாற்றிய காலம்’ (1942-1951), சுதந்திர எழுத்தாளராக இருந்து ‘பத்திரிகை நடத்துதல் மற்றும் திரைப்படத் துறையில் செயல்பட்ட காலம்’ (1952 - 1966), ‘தினமணிக்கதிர் இதழில் பணியாற்றிய காலம்’ (1967 - 1974) என்று பாகுபடுத்திக் கொள்ள முடியும். இதில் முதல் கால கட்டத்தில் தான் அதிகமான சிறுகதைகளை எழுதினார். திரைப்படத்துறையில் செயல்பட்ட காலங்களில் நான்கு நாவல்களை எழுதினார். முதல்கட்டத்தில் இரண்டு நாவல்கள் எழுதினார். இறுதிக் காலச்சூழலில் தான், புனைகதை அல்லாத வேறு வடிவங்களில் பெரிதும் செயல்பட்டார். இந்தக் காலச்சூழலில் செயல்பட்ட விந்தனின் ஆளுமை முன் செயல்பட்ட பரிமாணங்களிலிருந்து வேறு தளத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. தமிழ்ச் சமூக இயங்கு நிலைகளுக்கும் விந்தனின் ஆக்கங்களுக்கும் கால ஒழுங்கில் தொடர்ச்சியான உறவு இருப்பதைக் காண முடிகிறது. கால நிகழ்வுகளோடு தன்னைக் கரைத்துக் கொண்ட



நேர்மையான மனிதனாக விந்தனின் செயல்பாடுகள் உள்ளன. வாழ்க்கை முழுவதும் சமரசம் செய்து கொள்ளாத வாழ்க்கைப் போராட்டம் அவருக்கு வாய்த்திருக்கிறது. வெகுசன வெளியில் செயல்படுபவர்களில் இவ்விதம் இருந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. இந்தப் பின்புலத்தில் விந்தனின் ஆளுமை என்பது தனித்துப் பேசவேண்டிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்று கருதமுடியும்.

திரைப்பட உலகத்தில் செயல்படச் சென்ற விந்தன் அதற்காகவே ‘கல்கி’யிலிருந்து விலகினார். அந்த உலகம் அவருக்கு உவப்பாக இல்லை. அந்த உலகத்திலும் தன்னுடைய அடையாளத்தைக் காட்ட முயன்றார். அவரது திரைப்பாடல் ஒன்று பின்வரும் வகையில் அமைகிறது.

“ஒண்ணும் புரியவில்லை தம்பி - எனக்கு / ஒண்ணும் புரியவில்லை தம்பி / கண்ணு ரெண்டும் சுத்துது / காதை வந்து அடைக்குது / கஞ்சி கஞ்சி என்று வயிறு / கெஞ்சிக் கெஞ்சிக் கேட்குது.

கடவுளை நம்பினேன் கற்பூரம் செலவு / கல்வியை நம்பினேன் காசெல்லாம் செலவு / மனிதனுக்கு மனிதன் மனமிரங்கவில்லை / மானத்தோடு வாழ மார்க்கம் ஏனோ இல்லை / சாலையிலே தொழிலாளி சம்சாரம் நடக்குது / ஆலையிலே அவனாவி புகையாகப் போகுது” (1953; ‘அன்பு’ திரைப்படம்)

திரைப்படத்துறையில் அவருக்கு ஏற்பட்ட நிறைவின்மையைப் பத்திரிகை நடத்துவதின் மூலம் போக்கிவிடலாம் என்று நம்பினார். இவ்வகையில், 1950களில் தமிழ்ச்சமூக நடைமுறையின் நேரடி விளைவாக விந்தன் போன்றோரின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடிகிறது. பத்திரிகைத் துறையில் தொடர்ந்து செயல்பட்டிருக்கும் வாய்ப்பு இல்லாமல் போனது தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்பாகவே கருத வேண்டும். தாம் பத்திரிகைத் துறையில் தொடர முடியாமைக்குப் பத்திரிகைகளை விற்பனை செய்யும் முகவர்களின் பித்தலாட்டம், ஏமாற்றுதல் ஆகியவற்றையே காரணமாக விந்தன் பதிவு செய்கிறார்.

இராஜாஜி ‘பஜகோவிந்தம்’ (1956) என்ற நூலை எழுதினார். இந்நூல் ‘மோக முத்கரம்’ என்ற பெயரில் சங்காராச்சாரி எழுதிய நூலின் வழிநூல். அந்நூலின் கருத்துகளை உள்வாங்கி 31 பாடல்களை இராஜாஜி எழுதினார். இராஜாஜியின் இந்நூலுக்குப் புடை (எதிர்) நூலாக ‘பசி கோவிந்தம்’ (1956) என்ற நூலை விந்தன் எழுதினார்.

அவரது இறுதியான கையெழுத்துப்படி, 1973ல் எழுதிய ‘பெரியார் அறிவுச் சுவடி’ ஆகும். இக்குறுநூல் 2004ல் அச்சு வடிவம் பெற்றது. பெரியார் மறைந்த ஆண்டில் இதனை எழுதி விட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவரும் மறைந்தார்.

தமிழில் எழுதப்பட்ட ஆத்திச்சூடி, உலக நீதி, கொன்றை வேந்தன் ஆகிய சமயச்சார்பு நீதி நூல்களின் வடிவத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 1979ல் அதனைக் கையெழுத்துப் பிரதியாகப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விந்தன் மீது ஆழ்ந்த மரியாதையை இந்நூல் என்னுள் உருவாக்கியது.

இவ்வகையில் விந்தன் என்ற ஆளுமை தமிழ்ச் சமூகத்தில் செயல்பட்ட பல பரிமாணங்களைப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமுண்டு. 2016ல் விந்தன் நூற்றாண்டு வருகிறது. அந்தக் கட்டத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு விந்தனை விரிவாக அறிமுகப்படுத்தும் ஆய்வுகளும் பரப்புரைகளும் நிகழ வேண்டும்.

**(முனைவர் வீ. அரசு; நன்றி: ‘தீக்கதிர்’)**

# மனித உரிமைகளை நசுக்கும் பார்ப்பன தேசம்

*"அவசர நிலை காலம் மீண்டும் வருமா?"* **என்ற விவாதங்கள் ஒரு பக்கம் நடந்தாலும், அந்தக் காலங்களில் நடந்த மனித உரிமை மீறல்களைவிட இன்னும் மோசமான உரிமை மீறல்கள் இங்கே நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இது குறித்த செய்திகளின் தொகுப்பு:**

## மனித உரிமைப் போராளி சாய்பாபா

அவரால் நடமாட முடியாது; சக்கர வண்டிதான் அவரை நகர்த்தும்; உடலில் ஊனமானாலும் உள்ளத்தில் உறுதியோடு போராடும் சமூகப் போராளி; அவர் பெயர் ஜி.என். சாய்பாபா. மனித உரிமையாளர்களிடையே பிரபலமானவர். டெல்லி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் பேராசிரியர். சமூகநீதிக்காகவும், பழங்குடி மக்களின் உரிமைக்காகவும் குரல்கொடுத்த குற்றத்துக்காக அவர் ஒரு 'மாவோ' தீவிரவாதி என்று காவல்துறையால் குற்றம்சாட்டப்பட்டு, 2014 மே 9ஆம் தேதி, பல்கலைக் கழகத்திலிருந்து காரில் வீடு திரும்பும்போது போலீசாரால் கைது செய்யப்பட்டார். அங்கிருந்து நாக்பூருக்கு விமானத்தில் கொண்டு போகப்பட்டு, சித்திரவதை முகாமாகக் கருதப்படும் முட்டை வடிவத்திலுள்ள அண்டா சிறையில் அடைக்கப் பட்டார். அடுத்த 72 மணி நேரம் - அவர் கழி வறையைப் பயன்படுத்தக்கூட அனுமதிக்கப்பட வில்லை. மிக மோசமாக நடத்தப்பட்ட நிலையில் அவர் உடல்நிலை மேலும் மோசமாகியது. 14 மாத சிறைவாசத்துக்குப் பிறகு கடந்த வெள்ளிக் கிழமை (ஜூலை 3) பம்பாய் உயர்நீதிமன்றம் அவருக்கு மூன்று மாதம் 'பரோலில்' விடுதலை செய்துள்ளது.

1990ஆம் ஆண்டு மண்டல் பரிந்துரைக்கு ஆதரவாக அதை எதிர்த்த பார்ப்பன சக்திகளுக்கு எதிராக போராடத் தொடங்கினார். பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு நேரில் சென்று, அவர்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்படுவது பற்றிய தரவுகளை சேகரித்து அம்பலப்படுத்தினார். பழங்குடி மக்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக பல பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. 2009-லிருந்து 2012 வரை மனித உரிமையாளர்கள் அறிவுலக சிந்தனையாளர்களை ஒன்று திரட்டி, 'மக்கள் மீதான யுத்த எதிர்ப்புக் குழு' ஒன்றை உருவாக்கினார். அவருடைய கணினியி லிருந்து போலீசார் கைப்பற்றிய சில பத்திரிகை களுக்கான அறிக்கைகள் மட்டுமே அவரை பயங்கரவாதியாக சித்தரிப்பதற்கு காவல்துறை முன் வைத்துள்ள ஒரே ஆதாரம். தனது செயல்பாடுகளை முடக்கவே அரசு சிறையிலடைக்கிறது என்கிறார் சாய்பாபா.

பலமலைகிராமங்களுக்கு இந்த ஊனமுற்ற போராளியை பழங்குடி மக்கள் தோளில் சுமந்து சென்றனர். உரிமைப் போராளியாக உறுதியுடன் புறப் பட்டவர்களுக்கு ஊனம் ஒரு தடையல்ல. சாய்பாபாக் களின் இந்த அர்ப்பணிப்புகள், சமூகநீதி மனித உரிமைப் போராளிகளுக்கு நிச்சயமாக உரம் சேர்க்கும்.

## வடகிழக்கில் நடக்கும் இராணுவ ஆட்சிகள்

காஷ்மீரிலும் வடகிழக்கின் பெரும்பாலான மாநிலங்களிலும் இன்றைக்கு ஜனநாயகத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கும் ஆயுதப் படை களுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் உருவாக்கி யிருக்கும் சூழல் நெருக்கடிநிலைச் சூழலுக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல.

சட்டம், ஒழுங்குப் பராமரிப்பின் பெயரால், ஆயுதப் படையினருக்கு உச்சபட்ச அதிகாரம் அளிக்கும் சட்டம் இது. நாட்டின் எந்தவொரு பகுதியில் இந்தச் சட்டம் அமலாக்கப்படுகிறதோ, அந்தப் பகுதி கலவரப் பகுதியாகக் கருதப்பட்டு, அந்தப் பகுதியின் எந்த இடத்திலும் அனுமதியின்றி நுழையவும் சோதனையிடவும் எங்கு வேண்டுமானா லும் தாக்குதல் நடத்தவும் எவரை வேண்டுமானாலும் பிடியாணையின்றிக் கைது செய்யவும் தேவைப்பட் டால் சுட்டுக் கொல்லவும் ஆயுதப் படைகளுக்கு இந்தச் சட்டம் அனுமதி அளிக்கிறது. இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்திதான் கடந்த 15 ஆண்டுகளாக தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கிறார் இரோம் ஷர்மிளா.

அரசு இந்தச் சட்டத்தின் எதிர்காலம் குறித்து ஆராய 2004இல் நியமித்த நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி ஆணையம் தனது 147 பக்கப் பரிந்துரையில், இந்தச் சட்டத்தை ஏன் முற்றிலுமாக ரத்துசெய்ய வேண்டும் என்பதன் நியாயத்தை உரக்கப் பேசுகிறது. இந்திய அரசோ ஆயுதப் படைகளின் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்தைத் தொடர்ந்து மக்கள் மீது திணித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டிலேயே முதல் முறையாக 1958இல் ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் கொண்டு வரப்பட்ட மாநிலம் அசாம். இன்றைக்கும் குவாஹாட்டி நீங்கலாக ஏனைய பகுதிகளில் அங்கு இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது. நாகாலாந்து 1961இல் தனி மாநிலமாக உருவானது. அதற்கும் முன்பிருந்தே இங்கு இந்தச் சட்டம் தொடர்கிறது. காஷ்மீரில் இன்றுவரை நீடிக்கும் பல மனித உரிமை மீறல் குற்றங்களுக்கான அடிப்படை பலத்தை ஆயுதப் படையினருக்குத் தருவது இந்தச் சட்டம்தான் என்கிறார்கள் காஷ்மீரிகள்.

காஷ்மீரில் மட்டும் ஆயுதப் படைகளால் கடந்த 26 ஆண்டுகளில் 94,195 பேர் கொல்லப்பட்டிருப் பதாகவும் 1.28 லட்சம் பேர் கைது செய்யப்பட் டிருப்பதாகவும் சொல்லும் 'காஷ்மீர் ஊடக மையம்', கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 15 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் 416 பேர் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் பட்டியலிடுகிறது. 2008இல் கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு தூர்தர்ஷன், அகில இந்திய வானொலி நீங்கலாக ஏனைய ஊடகங்கள் அத்தனையையும் முடக்கிப்போட்டது அரசு.

2010-ல் குறுஞ்செய்திகள் அனுப்பத் தடை விதித்தது. குறுஞ்செய்தி அனுப்பும் அனுமதியைத் திரும்ப எல்லோரும் பெற நான்கு ஆண்டுகள் ஆயின. 2012-ல் ஒருமுறை ஃபேஸ்புக், யூட்யூப் போன்ற சமூக வலைதளச் சேவை முடக்கப்பட்டது. 2013-ல் இணைய ஊடகங்கள் மீதான அரசின் அடக்கு முறையை எதிர்த்து ஊடகவியலாளர்கள் போராட்டம் நடத்தினர்.

ஆனால், சில நாட்களுக்கு முன்புகூட காஷ்மீரில் ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் நீடிப்பதற்கான நியாயங்களைப் பேசியிருக்கிறார் பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர்.

## நாடு கடத்தப்பட்ட மனித உரிமை ஆய்வாளர்

கடந்த 2014 நவம்பர் மாதம் கிறிஸ்டின் மேத்தா என்ற இளம்பெண் ஆய்வாளர், இந்திய ஆட்சியால் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டிருக்கிறார். கிறிஸ்டின் மேத்தாவின் பெற்றோர்கள் இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில் குடியுரிமை பெற்றவர்கள். ஆய்வாளர் மேத்தா, காஷ்மீரில் இந்திய இராணுவம் மனித உரிமைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) இந்திய பிரிவுக்காக காஷ்மீரில் தங்கி கள ஆய்வுகளை மேற்கொண்டார். காஷ்மீரானாலும் வடகிழக்கு மாநிலங்களானாலும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆய்வுகள் நடப்பதை இந்திய தேசிய பார்ப்பன ஆட்சிகள் விரும்புவது இல்லை. அரசு தரும் தகவல்களை மட்டுமே மக்கள் நம்ப வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். ஆய்வுகள் செய்வதற்கான நோக்கத்தோடு 'விசா'க் களைப் பெற்று இந்தியாவுக்கு வரும்போது, அந்த ஆய்வுகள் மனித உரிமை தொடர்பானதாகவோ அல்லது சுற்றுச் சூழல் தொடர்பானதாகவோ இருக்குமானால், அதை அனுமதிப்பது இல்லை. ஆனால், மருந்து நிறுவனங்கள் இங்கே அப்பாவி மக்களின் உயிரைப் பணயம் வைத்து, தங்கள் மருந்துகளை ஆய்வு செய்ய விரும்பினால், அதற்கு எந்தத் தடையும் கிடையாது. உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடு என்று சுய தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஒரு நாட்டில் மனித உரிமைகள் குறித்த ஆய்வுகளுக்கே அனுமதி மறுப்பதும், இந்தியாவின் வம்சா வழியினராக இருந்தாலும்கூட அவர்களை நாட்டை விட்டு துரத்துவதும் வெட்கக்கேடானது!

## குஜராத்தின் பயங்கரவாத எதிர்ப்பு மசோதா

நாட்டுக்கே முன்னோடியாக குஜராத் அரசு, 'குஜராத் பயங்கரவாதம், திட்டமிட்ட குற்றச்செயல் கட்டுப்பாட்டுச் சட்டம் 2015' என்று ஒரு மசோதாவைச் சில மாதங்களுக்கு முன் நிறை வேற்றியிருக்கிறது. மோடி முதல்வராக இருந்தபோது கொண்டுவர முயற்சித்தது 'திட்டமிட்ட குற்றச் செயல்கள் கட்டுப் பாட்டு குஜராத் மசோதா 2003' இன் திருத்தியமைக்கப்பட்ட வடிவம் இது. 2004இல் அப்துல் கலாம், 2008இல் பிரதிபா பாட்டீல் என்று இரு குடியரசுத் தலைவர்கள் கையெழுத்திட மறுத்து நிராகரித்த மசோதா. மனித உரிமைகளைத் தூக்கிப் போட்டு மிதித்து நசுக்கும் பல பிரிவுகளைக் கொண்ட மசோதா.

இதன் கீழ், தாங்கள் கைது செய்யும் ஒருவரின் விசாரணைக் காலத்தைக் காவல் துறையினர் 90 நாட்கள் முதல் 180 நாட்கள் வரையிலும்கூட நீட்டித்துக் கொள்ளலாம். போலீஸ் காவலில் இருக்கும்போது ஒருவர் கொடுத்ததாகச் சொல்லப்படும் வாக்குமூலத்தையே அவருக்கு எதிரான வழக்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் காவல் துறையினர் அளிக்கலாம். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே குற்றவாளி, குற்றவாளியுடன் இணைந்து செயல்பட்டவர், உடந்தையாக இருந்தவர், சதி செய்தவர் என்று அனைவர் மீதும் குற்றம்சாட்ட முடியும். எல்லாவற்றுக்கும் மேல் இதன் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் ஜாமீன் மனு அடிப்படையிலோ, சொந்த ஜாமீனிலோ வெளியே வர முடியாது. இப்படியெல்லாம் மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக, யாரும் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க முடியாது.

மோடி பிரதமர் நாற்காலியை நோக்கி நகர்ந்த உற்சாகத்தில் மீண்டும் புதிய பெயரில் அதே மசாதாவை நிறைவேற்றி குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறது குஜராத் அரசு. குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து, ஒவ்வொரு மாநிலமும் இப்படியான சட்டங்களை நிறைவேற்ற ஆரம்பித்தால், நிலைமை என்னவாகும்?

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 09.07.2015**

## வினாக்கள்... விடைகள்...!

+ குடியரசுத் தலைவர் திருப்பதி வருகை: 4 மணி நேரம் பக்தர்கள் தரிசனம் நிறுத்தம். **– செய்தி**

  இதுக்கெல்லாம், 'ஆகம' விதி அனுமதிச்சுடும் போல.

+ சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்ப தமிழக அரசிடம் தேவையான நிதி இல்லை. **– நீதிமன்றத்தில் அரசு மனு**

  அப்படி, என்ன 'ஆலிவுட்' படமா எடுக்கப் போறீங்க!

+ உலகிலேயே குறுகிய காலத்தில் 11 கோடி உறுப்பினர்களை சேர்த்த ஒரே கட்சி பா.ஜ.க. **– இல. கணேசன்**

  உலகத்திலேயே கார் வச்சிருக்கிற ஒரே கரகாட்ட கோஷ்டி இருக்குன்னா அது நமதான்.

+ குரு பகவான் – கடக இராசியிலிருந்து சிம்ம இராசிக்கு பிவேசித்தார். **– செய்தி**

  எதுலேங்க பிரவேசிச்சாரு? 'மெட்ரோ' இரயிலிலா?

+ உலகின் மிக உயரமான பசு – அமெரிக்காவில் இறந்தது. **– செய்தி**

  சடலத்தை இந்தியாவுக்கு அனுப்புங்க! தேசிய சின்னம் வச்சுடலாம்!

+ திருச்சி டி.டி.பி. சமஸ்கிருத பல்கலைக்கழகம் போலியானது. **– பல்கலை மான்யக் குழு**

  இதுல படிச்சிட்டு புரோகிதத் தொழில் செய்யும் போலிகள் மீதும் நடவடிக்கை எடுப்பாங்களா?

DATE OF PUBLICATION 09.07.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# காவல்துறை தடையை தகர்த்து மேட்டுப்பாளையத்தில் கழகக் கூட்டம்

தனியார் துறையில் இடஒதுக்கீடு கோரி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மேட்டுப்பாளையம் காந்தி மைதானத்தில் மே.சி. தூயமணி நினைவு மேடையில் 28.6.2015 அன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த அன்னூர் முருகேசன் தலைமை வகித்தார். இரும்பறை சுந்தரமூர்த்தி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில தலைவர் ஆசிரியர் சிவகாமி, ஆசிரியர் சிவக்குமார், திருப்பூர் துரைசாமி, ஈரோடு இரத்தினசாமி, மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். பெரியநாயக்கன் பாளையம் ஒன்றிய பொருப்பாளர் பாபு நன்றி கூறினார். மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மே.சி. தூயமணி படத்தைத் திறந்து வைத்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக மே.சி. தூயமணி இல்லத்தில் கொளத்தூர் மணி, ஈரோடு இரத்தினசாமி, மேட்டுப் பாளையம் இராமச்சந்திரன், இங்கர்சால், இரும்பறை சுந்தரமூர்த்தி ஆகியோர், அவரது துணைவியார் லலிதா தூய மணியை சந்தித்து, ஆறுதல் கூறினர். இந்து முன்னணியின் கோட்டை என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ள மேட்டுப் பாளையத்தில் கழகத் தோழர்கள் பொதுக் கூட்டத்துக்கு நன்கொடை கேட்டபோது பெரும்பாலான வணிகர்கள் நன்கொடை வழங்கி உற்சாகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. காவல்துறை அனுமதி மறுத்த நிலை யில் உயர்நீதிமன்றத்தின் அனுமதி யோடு மேட்டுப் பாளையத்தில் நடந்த இரண்டாவது பொதுக்கூட்டம் இது.




### சீரிய பெரியாரிஸ்ட் ‘தூய மணி’

மறைந்த தூய மணி - சீரிய பெரியாரியல்வாதியாக வாழ்ந்தவர். 1971-லிருந்து 1976வரை மேட்டுப் பாளையம் தொகுதி தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவர். இரண்டு முறை தந்தை பெரியாரை அழைத்து கூட்டம் நடத்தியவர். அதில் ஒரு கூட்டத்தில் பெரியார் நிகழ்த்திய மூன்று மணி நேர பகுத்தறிவு உரை, பகுத்தறிவாளர் கழக சார்பில் தனி நூலாக வெளியிடப்பட்டது. தனது இல்லத்தில் உலக சிந்தனையாளர் மய்யம் என்ற பெயரில் தனி நூலகத்தை நடத்தி வந்தார். மாணவப் பருவத் திலேயே ஈழம் சென்று தமிழ் ஈழத்தை ஆதரித்து ஏராளமான கூட்டங்களில் பேசியதால் இலங்கை அரசால் வெளி யேற்றப்பட்டவர். சீரிய கொள்கை யாளரை கவுரவிக்கும் வகையில் மேட்டுப்பாளையம் திராவிடர் விடுதலைக் கழகம் பொதுக் கூட்ட மேடைக்கு அவர் பெயர் சூட்டி, மேடையிலேயே படத்திறப்பு நிகழ்ச் சிக்கும் ஏற்பாடு செய்ததை உணர் வாளர்கள் பலரும் பாராட்டினர்.

**– நமது செய்தியாளர்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பி.காம். படிக்கும் இவர்களின் மகள் முத்தமிழ், “எனது அம்மாவின் குடும்பத்தினர், காதல் திருமணத்தை ஏற்காவிட்டாலும், எனது பெற்றோர் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்” என்று மகிழ்ந்தார்.

எஸ்.பட்டி கிராமத்தைச் சேர்ந்த முதுகலை பட்ட தாரியான ரவியை காதலித்து திருமணம் செய்திருக்கிறார். சென்னையைச் சேர்ந்த சுகன்யா. தங்களுக்குள் காதல் அரும்பிய கதையை சுகன்யா விளக்குகிறார்...

“காஞ்சிபுரம் கல்லூரியில் படித்தபோது எங்களுக்குள் காதல் ஏற்பட்டது. பெரும் எதிர்ப்புகளை மீறி எங்கள் திருமணம் நடந்தது. எதிர்ப்புகளை சமாளித்தபோது சிரமங்கள் ஏற்பட்டாலும், நாம் விரும்பிய வாழ்க்கை நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நினைக்கும்போது இன்னல்கள் பெரிதாக தெரிவதில்லை. எனது பெற்றோர் வீட்டில் இருந்ததைவிட இங்கே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்” என்றார்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த கருணாகரனின் மனைவி மைதிலி கூறுகையில்,

“7 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டோம். காதல் வாழ்க்கையில் ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொள்வது மிகவும் அவசியம். சின்னச் சின்ன விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால்தான் காதல் கடைசி வரை நிலைக்கும்” என்று தத்துவார்த்தமாக சொன்னார்.

இதே ஊரைச் சேர்ந்த ஈஸ்வரனை காதலித்து திருமணம் செய்த அழகம்மாள், “காதலித்து திருமணம் செய்து கொண்டால் மட்டும் போதாது, எதிர்ப்புகளை சமாளித்து நாலு பேர் மதிக்கும் அளவிற்கு வாழ பொருளாதாரத்தை மேம்படுத்தி கொள்வது மிக அவசியம்” என்று அனுபவரீதியான கருத்தை எடுத்து வைத்தார்.

எஸ்.பட்டியைச் சேர்ந்த தூயமல்லி என்ற பெண்ணை, பரமகுடியைச் சேர்ந்த தேவராஜன் என்ற ஆசிரியர் 20 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து கலப்புத் திருமணம் செய்திருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள். அவர்களின் மகள்களான தமிழரசி, சுடரொளி இருவரும் எஸ்.பட்டியிலேயே வசித்து வருகிறார்கள். தமிழரசி கல்லூரியிலும், சுடரொளி 10ஆம் வகுப்பும் படிக்கிறார்கள்.

சுடரொளி சொல்கிறார்... “எனது தந்தையும், தாயும் வெவ்வேறு சமூகங்களை சேர்ந்தவர்கள். அவர்களது முற்போக்கு சிந்தனை எங்களை பெருமைப்பட வைக்கிறது. உண்மையான காதல் வேற்றுமைகளை அகற்றுகிறது. பெற்றோர் இறந்த நிலையிலும், இந்த கிராமத்தினர் என்னையும், எனது அக்காவையும் தங்கள் குழந்தைகள் போல் பாவித்து எங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார்கள்” என்று நெகிழ்ச்சியோடு கூறினார்.

தனியார் கல்லூரி ஆசிரியர் நெபுகாத் நேச்சர் உண்மைக் காதலர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது பற்றி நம்மிடம் பேசினார். “1500 குடும்பங்கள் வசிக்கும் இந்த கிராமத்தில் 60 ஆண்டுகளாக தொடர்ந்து காதல் மற்றும் கலப்புத் திருமணங்கள் நடந்து வருகின்றன. கம்யூனிச கொள்கைகள் இந்த கிராம மக்களிடையே வேரூன்றி இருப்பதே இதற்கு முக்கிய காரணம். இந்த கிராமத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பெண்களை வெவ்வேறு சமூகங்களை சேர்ந்த ஆண்கள் காதல் திருமணம் செய்து இருக்கிறார்கள்.

பெற்றோரின் எதிர்ப்பை மீறி காதல் திருமணம் செய்யும் பலர் அடைக்கலம் தேடி இந்த கிராமத்திற்கு வருகிறார்கள். உண்மையிலேயே அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து, காதல் திருமணம் செய்து கொண்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு அடைக்கலம் தந்து பாதுகாப்பு அளிக்கிறோம். அவர்களுக்கு தேவையான அனைத்துவிதமான உதவிகளை செய்கிறோம். அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு சமாளிக்கிறோம். இந்த கிராமத்திற்கு அடைக்கலம் தேடி வந்தவர்களில் இதுவரை 200 காதல் இணையர்களுக்கு திருமணம் செய்து வைத்திருக்கிறோம். எதைப் பற்றியும் கவலைப்படாமல் உண்மைக் காதலுக்கு மரியாதை செய்து வருகிறோம்” என்றார்.

**நன்றி: ‘தினத்தந்தி’ ஞாயிறு மலர், 5.7.2015**

# கோகுல்ராஜ் படுகொலையைக் கண்டித்து திருச்சியில் ஆர்ப்பாட்டம்

3-07-15 அன்று திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக கோகுல்ராஜ் படுகொலையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றியோர் – புதிய தமிழகம் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் வாழையூர் குணா, மாவட்டச் செயலாளர் அய்யப்பன். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் தமிழாதன், எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலப் பேச்சாளர் சம்சுதீன், பெரியார் பெருந்தொண்டர் திருச்சி எஸ்.எஸ்.முத்து, கழகத் தோழர் மாவட்ட தலைவர் ஆரோக்கியசாமி.


ஆர்ப்பாட்டத்தில், கழகத் தோழர்கள் திருச்சி விஜி, மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார், மாவட்ட அமைப்பாளர்கள் புதியவன், மனோகரன், குணா. திருவரங்கப் பகுதி செயலாளர் அசோக். வழக்கறிஞர் சந்துரு, பழனி, பாரத், சரத், முருகானந்தம், குளித்தலை சத்யா, கரூர் மோகன் தாஸ் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் சந்துரு நன்றியுரையாற்றினர்.

## நெருக்கடி நிலை எதிர்ப்பு: கழகத் தலைவர் உரை

27-6-2015 அன்று மாலை 6-00 மணிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக சென்னை, அசோக் நகர், அம்பேத்கர் திடலில் “நெருக்கடிநிலை அறிவிப்பும், ஒரு கட்சி ஆட்சியின் எதேச்சாதிகாரமும்” என்ற தலைப்பில் அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்திய பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்நாட்டு செயலாளர் முத்தரசன், மார்க்சீய பொதுவுடைமைக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கே.பாலகிருட்டிணன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில இணைப் பொதுச்செயலாளர் ஆரூண் ரசீத் ஆகியோர் உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 09 July 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூலை 16, 2015 | புரட்சி 14 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00

## வளர்ச்சியும் பார்ப்பனியமும்

இந்தியாவில் வறுமை கணிசமாக குறைந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால், மக்களிடையே சமத்துவம் உருவாகியிருக்கிறதா? அதாவது, ஏற்றத்தாழ்வுகள் குறைந்திருக்கிறதா என்பதே முக்கிய கேள்வி! ஏற்றத் தாழ்வுகள் இல்லாத சமூக சமுத்துவம் தான் – பெரியாரின் இலட்சியம். பெரியார் வாழ்நாள் முழுதும் போராடிய வகுப்புவாரி பிரதி நிதித்துவம் என்ற கொள்கையின் அடிநாதமே அனைத்து சமூகப் பிரிவினரையும் சமப்படுத்துவது தான். இந்தியாவின் உயர் அதிகார மட்டத்தில், பார்ப்பனர்களே கொடி கட்டிப் பறக்கிறார்கள். அவர்கள் கார்ப்பரேட்டுகளுடன் கைகோர்த்துக் கொண்டு, வெகு மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளின் இடைவெளிகளை மேலும் மேலும் அதிகப்படுத்தும் திட்டங்களையே உருவாக்குகிறார்கள்.

இந்தியாவில் “பொருளாதார சீர்திருத்தம்” என்ற பெயரில், கடந்த 30 ஆண்டுகளாக பின்பற்றப்பட்ட கொள்கைகள் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கச் செய்துவிட்டது என்பதை புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. 2000ஆம் ஆண்டின் நிலவரப்படி இந்தியாவின் மொத்த சொத்து – செல்வங்களில் 66 சதவீதம், 10 குடும்பங்களிடமே தங்கியிருந்தது. இப்போது, இது 66–லிருந்து 74 சதவீதமாக அதிகரித்துவிட்டது. இதேபோல் 2000–த்தில் இந்தியாவின் உச்சகட்டப் பணக்காரர்களாக இருக்கும் ஒரு சதவீதத்தினரிடம் இந்தியாவின் சொத்து வளங்களில் 37 சதவீதம் இருந்தது. இது இப்போது 44 சதவீதமாக அதிகரித்துவிட்டது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பயன் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியடைந்த பெரும் பணக்காரர்களுக்கே போய்ச் சேரும்போது, சமமற்ற சமூகம் எப்படி உருவாக முடியும்? 60 மில்லியன் பழங்குடி மக்களில் 40 சதவீதம் பேர் வளர்ச்சித் திட்டங்களுக்காக தங்கள் வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்டு உள்ளார்கள். விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தலித், மிகவும் பிற்படுத்தப்பட்ட ஜாதிப் பிரிவினரிடம் நாட்டின் ‘பொருளாதார வளர்ச்சி’ சென்று அடையவில்லை என்பதை அண்மையில் வெளிவந்துள்ள சமூகப் பொருளாதாரக் கணக்கெடுப்புகளும் உறுதி செய்கின்றன. கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான அரசின் திட்டங்கள் அரசால் புறக்கணிக்கப்படுகின்றன. இவை மக்களுக்கான வளர்ச்சிக்கு அடிப்படையானவை. இத்திட்டங்களில் அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முன்வராமல், தனியார் கார்ப்பரேட்டுகளிடம் ஒப்படைத்து விட்டது. கல்வி–மருத்துவ சேவைகளைப் பெற முடியாமல், தனித்துவிடப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட ஜாதி மற்றும் வர்க்கப் பிரிவினர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்க முடியாதவர்களாக ஓரம் கட்டப்பட்டுவிட்டனர். ஆக பார்ப்பனியம், பொருளாதாரத்திலும் ஏற்றத் தாழ்வுகளை உறுதிபடுத்தி வருகிறது.

## ஜூலை 15இல் விசாரணை தொடங்குகிறது:

# 7 தமிழர் விடுதலையில் சட்டச் சிக்கல் என்ன?

**தியாகு**

***பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களை விடுதலை செய்து, தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்த அடுத்த நாளே மத்திய காங்கிரஸ் ஆட்சி, அந்த அறிவிப்புக்கு இடைக்கால தடை வாங்கியது. வழக்கு மாநிலம் தொடர்பானது என்பதால் கலந்தாலோசனைக்காக தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. மத்திய அரசோ கலந்தாலோசனை என்றாலே மத்திய அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்று வாதிடுகிறது. இரண்டும் ஒன்று என்றால், இரண்டுக்கும் வெவ்வேறு பிரிவுகளை சட்டம் உள்ளடக்கியிருப்பது ஏன் என்ற கேள்வியை தோழர் தியாகு எழுப்புகிறார்.***

***உச்சநீதிமன்றத்தில் ஜூலை 18இல் வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் வழக்கு குறித்த விளக்கங்களை முன் வைக்கிறது இந்த கட்டுரை.***

திருப்பெரும்புதூரில் கடந்த 1991 மே 21ஆம் நாள் ராஜிவ் காந்தி கொல்லப்பட்டதும், இது தொடர்பான கொலை வழக்கில் தடா சிறப்பு நீதிமன்றம் மொத்தமாக 26 தமிழர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்ததும், உச்ச நீதிமன்றம் அவர்களில் 19 பேரை விடுதலை செய்து, மூவருக்குத் தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனை ஆக்கி, நால்வருக்குத் தூக்கை உறுதி செய்ததும், அவர்களிலும் நளினிக்கு மட்டும் தமிழக அரசு முடிவின்படி ஆளுநர். தூக்கை ஆயுளாகக் குறைத்ததும், பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் கருணை மனுக்களை இந்தியக் குடியரசுத் தலைவர் மறுதலித்ததும், இதற்கெதிராகத் தமிழ்நாட்டில் பெரும் போராட்டம் வெடித்ததும், தமிழகச் சட்டப் பேரவையே தீர்மானம் இயற்றியதும், சென்னை உயர்நீதிமன்றம் தூக்கிலிடுவதை நிறுத்தித் தடையாணை வழங்கியதும், கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க 11 ஆண்டுக் காலத் தாழ்வு ஏற்பட்டதைக் காரணமாகக் காட்டி இந்திய உச்ச நீதிமன்றம் மூவருக்கும் தூக்கை ஆயுளாகக் குறைத்ததும் பழைய செய்திகள் என்றாலும் நாம் நினைவிற்கொள்ள வேண்டியவை.

பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைப்பதை எதிர்த்து இந்திய அரசு தொடுத்த மீளாய்வு வழக்கைத் தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்ற நீதிபதி சதாசிவம் தலைமையிலான ஆயம் (பெஞ்சு), ஆயுள் தண்டனை என்றால் ஆயுட்காலச் சிறைதான் என்ற போதிலும், மாநில அரசு இவர்களைக் குற்ற நடைமுறைச் சட்டத்தின் தண்டனைக் குறைப்பு விதிகளைப் பயன் படுத்தி விடுதலை செய்ய முடியும் என்பதைச் சுட்டிக்காட்டியது.

இதையொட்டித் தமிழக முதல்வர் கடந்த 2014 பிப்ரவரி 19ஆம் நாள் சட்டப் பேரவையில் ஓர் அறிவிப்புச் செய்தார்: ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப் பெற்றுக் கடந்த 23 ஆண்டுகளாகச் சிறையில் இருந்துவரும் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய எழுவரையும் விடுதலை செய்வதென தமிழக அமைச்சரவை தீர்மானித்துள்ளது, உரிய சட்ட விதிகளின் படி இந்த முடிவு நடுவணரசுக்குத் தெரிவிக்கப்படும், மூன்று நாளைக்குள் தில்லியிலிருந்து மறுமொழி வரவில்லை என்றால் நாமே அவர்களை விடுதலை செய்வோம் என்றார் முதல்வர். இந்திய அரசு தமிழக அரசுக்கு எவ்வித மறுமொழியும் அனுப்பாமல் தமிழக அரசின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. பிப்ரவரி 20ஆம் நாள் தமிழக அரசின் முடிவை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்து விட்டது.

இந்திய அரசு தொடுத்த வழக்கோடு தமிழ்நாட்டுக் காங்கிரசார் சிலரும் சேர்ந்து கொண்டு புதுப் புது சிக்கல்களைக் கிளப்பினர்: தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைத்த பின், மீண்டும் ஒரு முறை தண்டனைக் குறைப்பு வழங்க முடியுமா? குற்ற நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான விதிகளின்படி இப்படிச் செய்ய முடியும் என்றால் இந்தக் குற்ற நடைமுறைச் சட்ட விதிகளே செல்லாது என்று கூட சில காங்கிரசார் வாதிடுகின்றனர்! செத்தவர் ராஜிவ் என்பதால், இந்த வழக்கில் சட்டம் விதிமுறை என்பதெல்லாம்கூட இவர்களுக்கு கெட்ட வார்த்தையாகி விடுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட முழு ஆயம் இந்த வழக்கை விசாரிக்கவுள்ளது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்தியா முழுக்க நூற்றுக் கணக்கான ஆயுள் சிறைக் கைதிகளின் “முன்-விடுதலை” நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நடுவணரசும் எல்லா மாநில அரசுகளும் விடையளிக்க வேண்டிய சில வினாக்களை உச்ச நீதிமன்றம் கேட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 72 வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்திய அரசோ, உறுப்பு 161 வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாநில அரசோ ஒரு முறை தண்டனைக் குறைப்பு வழங்கிய பின் குற்ற நடைமுறைச் சட்ட விதிகளைப் பயன்படுத்தி மாநில அரசு மீண்டும் ஒரு முறை தண்டனைக் குறைப்பு வழங்க முடியுமா? அதாவது தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைத்த பின், ஆயுள் முழுக்க சிறையில் அடைத்து வைக்காமல் முன்-விடுதலை செய்ய இப்போதுள்ள சட்ட வழிவகைகள் நீடிக்கலாமா கூடாதா? ஆயுள் தண்டனைக் கைதியை முன்-விடுதலை செய்வதற்கான வழிவகைகள் ஒருசில வழக்குகளில் மட்டும் பொருந்தாதபடி செய்யலாமா? அதாவது என்ன நடந்தாலும் அந்த ஆயுள் கைதிகளை சாகும் வரை சிறையில் அடைத்து வைக்கலாமா? கொலை செய்ததாகத் தண்டிக்கப்பட்டவருக்கு கொலையுண்டவரின் குடும்பத்தினர் தரப்புக் கருத்தைக் கேட்காமலே தண்டனை குறைப்பு வழங்கலாமா?

இந்த வினாக்கள் அனைத்தும் ஏதோ ஒரு ராஜிவ் கொலை வழக்குத் தொடர்பானவை மட்டுமல்ல, சிறைப்பட்டுள்ள கைதிகள் அனைவரின் மனித உரிமைகள் தொடர்பானவை, சிறைத் தண்டனையின் நோக்கங்கள் தொடர்பானவை, மாநில அரசுக்குள்ள அதிகாரங்கள் தொடர்பானவை. ஆனால், இந்த வினாக்களுக்கு இதுவரை விடை காணப்படவில்லை என்று நினைக்க வேண்டாம். இப்போதுள்ள சட்டங்களிலேயே போதிய விளக்கங்கள், விடைகள் உள்ளன. போதவில்லை என்றால் சிறை தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. குறிப்பிடத்தக்க ஒன்று கிருஷ்ணய்யர் தலைமையிலான நீதிபதிகள் ஆயம் 1980ஆம் ஆண்டு மாருராம் வழக்கில் வழங்கிய தீர்ப்பு.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், என்ன சொல்லியாவது, என்ன செய்தாவது, பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரும் 24 ஆண்டு சிறையடைப்புக்குப் பிறகும் விடுதலை ஆவதைத் தடுக்கத்தான் காங்கிரஸ் அற்பர்கள் குதியாய்க் குதிக்கிறார்கள். இதற்காக அவர்கள் மாநில அரசுக்குள்ள தண்டனைக் குறைப்பு அதிகாரங்களையே கேள்விக் குள்ளாக்கியுள்ளனர்.

இந்தப் பூசலின் மையம்... குற்ற நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான விதிகளின்படி மாநில அரசுக்குள்ள தண்டனைக் கழிவு மற்றும் தண்டனைக் குறைப்பு அதிகாரங்களே. குறிப்பாகச் சொன்னால் பிரிவு 435 மாநில அரசுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகளை எப்படிப் புரிந்து கொள்வது என்பதே.

குறிப்பிட்ட சில வழக்குகளில் மாநில அரசு நடுவணரசைக் கலந்து கொண்ட பிறகே செயல்பட வேண்டும் என்று இந்தப் பிரிவு 435 சொல்கிறது. இதன் இரு உட்பிரிவுகள் இருவகையான வழக்குகளைக் குறிப்பிடுகின்றன. முதல் உட் பிரிவு 435(1) மூன்று கூறுகளைக் கொண்டது. இவற்றுள் முதல் கூறுதான் (435(1)(அ). இங்கு நம் கருத்துக்குரியது. தண்டனைக்

( 4ஆம் பக்கம்)

தலையங்கம்

## பெண்களும் நீதிமன்றங்களும்

பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுக்குள்ளான ஒரு நபரை சிறையிலிருந்து விடுவித்து, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் சமரசம் செய்து கொண்டு வாழ்க்கையை தொடர்ந்திட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தேவதாஸ் பிறப்பித்த ஆணை பலரையும் வியப்படையச் செய்தது. இந்த ஆணை கடும் விமர்சனங்களை எதிர் கொண்டது. இதைத் தொடர்ந்து மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து வந்த ஒரு பாலியல் வன்முறை வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு நேர் எதிராக இருந்தது. இத்தகைய வழக்குகளை சமரசத் தீர்வு மய்யங்களுக்கு அனுப்பக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டது உச்சநீதிமன்றம். இதனால், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி, தான் பிறப்பித்த ஆணையைத் திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளார். பிணையில் விடுவிக்கப்பட்ட குற்றவாளி, மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டுவிட்டார்.

இதேபோன்று, உயர்நீதிமன்றத்தில் மற்றொரு நிகழ்வு கடும் எதிர்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. ஆம்பூரைச் சார்ந்த பவித்ரா என்ற பெண், காணாமல் போனார் என்பதால், ஆம்பூரில் இஸ்லாமியர்களுக்கும் காவல்துறைக்குமிடையே பெரும் கலவரமே நடந்து முடிந்துள்ளது. அந்தப் பெண்ணின் கணவர் தந்த புகாரின் மீது ஒரு இஸ்லாமிய இளைஞரை விசாரணை நடத்திய காவல்துறை, விசாரணையின்போது நிகழ்த்திய சித்திரவதைகளால் மருத்துவமனையில் மரணமடைந்துவிட்டார். காணாமல் போன பவித்ரா, சென்னையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தப் பெண், தனது கணவரிடமிருந்து இப்போது மணவிலக்கு கேட்கிறார். நீதிபதிகள் அந்தப் பெண்ணிடம், “விவகாரத்து என்ன கடைகளில் கிடைக்கும் பொருளா? உன்னால்தான் கலவரம்” என்ற தொனியில் ஒருமையில் பேசியதாகவும், ஊடகங்களில் சமூக வலைதளங்களில் செய்திகள் வருகின்றன.

விவகாரத்து கடைகளில் கிடைக்காது என்பது தெரிந்ததால்தான் அந்தப் பெண், நீதிமன்றத்தை நாடியிருக்கிறார். சாமான்ய நிலையிலுள்ள ஒரு ஏழை பெண் என்பதாலேயே நீதிமன்றம் அவரை அவமதிப்பதை ஏற்க முடியாது. “நீதி வழங்கும் நீதிபதிகளிடம், ஆண்களே வெளிப்படுகிறார்கள்; நிச்சயம் மணவிலக்குக் கோரும் ஒரு ஆணிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்காது; நீதிமன்றங்கள்கூட சமத்துவமில்லாமல் இருக்கின்றன என்பது பேரவலம்” - என்றெல்லாம் பெண்ணுரிமையாளர்கள் வெளியிட்டுள்ள கருத்தை நூற்றுக்கு நூறு - நாம் வழிமொழிகிறோம்.

குடும்பம் - திருமண உறவுகள் - அண்மைக்காலமாக நெருக்கடிக்குள்ளாகி வருவதை சுட்டிக்காட்ட வேண்டும். தங்களின் கட்டுப்பாட்டுக்குள் பெண்களை இயக்கு வதற்கான ஆண்களின் முயற்சிகளால் முரண்பாடுகள் உருவாகி வருகின்றன. பெண்கள் தங்களுக்கான சுயமரியாதையை உறுதி செய்வது, அவர்களுக்கான உரிமை. சுயமரியாதையை அடகு வைத்துவிட்டு, ஆண்களின் அதிகாரத்துக்குட்பட்டவர்களாக அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற சிந்தனையை இனியும் தூக்கி சுமக்கக் கூடாது; அதிலிருந்து ஆண்கள் விடுபட வேண்டும்.

பெரியார் கூறுகிறார்:

> “ஆண் பெண் கல்யாண விஷயத்தில் அதாவது புருஷன் பெண் ஜாதி என்ற வாழ்க்கையானது நமது நாட்டில் உள்ள கொடுமையைப்போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்லலாம். நமது கல்யாண தத்துவம் எல்லாம் சுருக்கமாகப் பார்த்தால் பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்ளுவது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்து பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு அவ்வித கல்யாணத்திற்கு தெய்வீகக் கல்யாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்து பெண்களை வஞ்சிக்கின்றோம்.”
>
> (‘குடிஅரசு’, 17.8.1930)

திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தையைப் பெற்றுக் கொண்ட ஒரு பெண்ணுக்கு அந்தக் குழந்தையின் சட்டபூர்வ பாதுகாப்பாளராக உரிமை உண்டு என்று அண்மையில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள புரட்சிகரமான தீர்ப்பை குறிப்பிட வேண்டும். இது மேலே எடுத்துக்காட்டிய பெரியார் சிந்தனைக்கு கிடைத்த வெற்றிதான்!

இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்றங்களின் சில தீர்ப்புகளும், கருத்துகளும், பெண்ணடிமைப் பார்வையோடு பிணைந்து கிடப்பது வருத்தத்துக்கும், வேதனைக்கும் உரியது என்பதை கவலையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

# ‘பூப்பெய்தும்’ சடங்குக்கு மாற்றாக...

இந்து ‘கலாச்சாரம்’ திணித்த பெண்ணடிமை பண்பாடுகளில் ஒன்று வயது வந்துவிட்ட பெண்களுக்காக நடத்தப்படும் ‘பூப்பெய்தும்’ விழா என்பதாகும். ஒரு பெண் வயதுக்குரிய பருவத்தை எட்டுவது, இயல்பாக ஏற்படும் உடலியல் மாற்றம். இதை ஏன் ஊருக்கு அறிவிக்கும் விழாக்களாக நடத்த வேண்டும்? இதேபோல் ஆண் பிள்ளைகளுக்கு ஏன் நடத்துவது இல்லை? சென்னையில் பல பகுதிகளில் இதற்காக பெண்ணின் படத்தோடு விளம்பரப் பதாகைகள்கூட வைக்கப்படுகின்றன.

புவனேசுவரி என்ற மென்பொருள் பொறியாளர், தனது மகள் பூப்பெய்தும் விழாவை சடங்குகளாக மாற்றாமல், அறிவியல் நிகழ்வாக மாற்றி நடத்தியிருக்கிறார். மகப்பேறு மருத்துவர், ஊட்டச் சத்து நிபுணர், உளவியல் மருத்துவர்களை அழைத்து, அறிவியல் விளக்கம் தரும் நிகழ்ச்சியாக அதை மாற்றியமைத்துள்ளார். “எனக்கு இது போன்று நிகழ்ந்தபோது என்னுள் பல கேள்விகள் எழுந்தன. உடல் மற்றும் உள ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் குறித்து என் அய்யங்களுக்கு எவரும் விடை தரவில்லை. இந்த நிலை என் மகளுக்கும் வந்துவிடக் கூடாது என்பதாகவே, இளம் பெண்களும், ஆண்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த நிகழ்வுக்கு ஒரு ஓட்டலில் ஏற்பாடு செய்து, முன்னூறுக்கும் மேற்பட்ட இளம் பெண்கள், ஆண்களை அழைத்து, அறிவியல் விளக்கம் கிடைக்க ஏற்பாடு செய்தேன்” என்கிறார் பொறியாளர் புவனேசுவரி.

பண்பாடு என்ற பெயரில் பார்ப்பனியம் திணித்த சடங்குகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க இதுபோன்ற மாற்றுச் சிந்தனைகளை முன் வைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இதற்கு முன்னோடியாக செயல்பட முன் வந்துள்ள பொறியாளர் புவனேசுவரியைப் பாராட்ட வேண்டும்.

### பா.ஜ.க. ஆட்சி கோயில்களை இடிக்கிறது

இராஜஸ்தான் மாநிலத்தில் நடப்பது பா.ஜ.க. ஆட்சி தான். அங்கே ‘மெட்ரோ’ இரயில் திட்டம் வரப் போகிறது. இதற்காக ஜெய்ப்பூரில் சாலைகளை ஆக்கிரமித்திருந்த 80 கோயில்களை இடித்துத் தள்ளியிருக்கிறது பா.ஜ.க ஆட்சி. சென்னை நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சட்ட விரோத கோயில்களை அகற்றுவதற்கு நீதிமன்ற ஆணை இருந்தும்கூட இங்கே, ‘இந்து அமைப்புகள்’ என்ற பெயரில் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். மந்தைவெளி பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஒரு கோயிலை அகற்றுவதற்கு திராவிடர் விடுதலைக் கழகம் முயற்சி எடுத்து, மாநகராட்சி அதிகாரிகள் இடிக்க வந்தபோது, அங்கே பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான வானதி சீனிவாசன், நேரே வந்து, இடிக்கவிடாமல் தடுத்தார். அவர்கள் ஆட்சி நடக்கும் இராஜஸ்தானிலோ நிலைமை வேறு. ஆனாலும், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், பா.ஜ.க. ஆட்சியின் கோயில் இடிப்பைக் கண்டித்து மறியல் நடத்தியுள்ளனர். இடித்தது இடித்தது தான். இடிக்கப்பட்ட கோயில்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வேறு இடத்தில் கட்டிக்கொள்ளலாம் என மாநில அரசு கூறிவிட்டதாம்!

### தாழ்த்தப்பட்டோர் ஆணையம் குற்றம் சாட்டுகிறது

தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி தாழ்த்தப்பட்டோருக்கான 18 சதவீத நிதியில் 2 சதவீதத்தைக்கூட பயன்படுத்தவில்லை என்பது தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத் தலைவர் பி.எல்.புனியா கூறியுள்ளார். மீதமுள்ள நிதியை வேறு திட்டங்களுக்கு திருப்பி விடப்படுவதை ஆணையம் அனுமதிக்காது என்றும் அவர் கண்டிப்பாகக் கூறியுள்ளார். அவர் கூறியிருக்கும் வேறு பல தகவல்கள் அதிர்ச்சிக்குரியவை.

“தேசிய அளவில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமை அதிகளவில் நடக்கும் 5 மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. வன்கொடுமை தொடர்பான புகாரின் பேரில் உடனடியாக வழக்குப் பதியாமல், நீதிமன்ற தலையீட்டுக்குப் பின்பே பதிவு செய்யப்படுகிறது. வழக்கு பதிந்து விசாரணை நடத்தி ஆதாரம் இல்லாவிட்டால் வழக்கை முடிக்கலாம். ஆனால், தமிழகத்தில் 70 சதவீதம் வழக்குகள் ஆதாரம் இல்லை என முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 10 சதவீதம் வழக்குகளில் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் தொடர்பான விஷயங்களை கண்காணிக்க மாநில அளவில் முதல்வர் தலைமையிலும், மாவட்ட அளவில் ஆட்சியர் தலைமையிலும் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. ஆண்டுக்கு இருமுறை கூட வேண்டிய இந்த குழு, மாநில அளவில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜுன் 25-க்குப் பின் கூடவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் என போலி சான்றிதழ் மூலம் அரசுப் பணியில் சேர்ந்துள்ள 2000 பேரையும் பணியில் இருந்து உடனடியாக நீக்கி, குற்ற நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளோம். வேறு ஜாதி பெண்களை காதலிக்கும் தலித் இளைஞர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்து வருகிறது” -என்று, பி.எல். புனியா கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஜாதி ஆணவக்காரர்கள் கொலை வெறி ஒரு புறம்; தமிழக அரசின் அலட்சியம் மற்றொரு புறம். இந்த அவலங்கள் தொடரலாமா?

### சத்தீஸ்கரின் கொடும் அடக்குமுறை சட்டம்

சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்டுகளை எதிர் கொள்வதற்கான கடுமையான சட்டம் என்ற பெயரில், மாநில அரசால் கொண்டு வரப்பட்ட சட்டம் ‘சத்தீஸ்கர் சிறப்பு பொதுப் பாதுகாப்புச் சட்டம் 2005’. சட்டப்படியான நிர்வாகத்துக்குத் தடை ஏற்படுத்தும் விதத்தில் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டாம் என்று யாரையாவது ஊக்குவிப்பதாக அரசு கருதும் எவரின் நடவடிக்கையும் இந்தச் சட்டத்தின்படி ‘சட்ட விரோதம்’. இந்தச் சட்டத்தின் கீழ் அரசு உங்களைக் கைதுசெய்ய நீங்கள் பெரிதாகக் குற்றம் ஏதும் செய்திருக்க வேண்டாம். அரசை விமர்சித்து ஒரு இடத்தில் கூட்டம் போடுவது, உரையாடல் நடத்துவது, சுவரொட்டி ஒட்டுவது எதுவானாலும் ‘சட்ட விரோதம்’ ஆகலாம்; அதன் அடிப்படையில் உங்களைக் கைதுசெய்து மூன்றாண்டுகள் வரை உள்ளே வைக்கலாம்.

சத்தீஸ்கரில் பத்திரிகையாளராக இருப்பது இன்றைக்கு அவ்வளவு எளிதானது அல்ல. அங்கிருந்து கொண்டே அரசை விமர்சிப்பது சாத்தியமே இல்லை என்கிறார்கள் பத்திரிகையாளர்கள். “முதலில் அதிகாரிகள் தரப்பிலிருந்து வாய்மொழியாக மிரட்டல் வரும். அடுத்து, அரசு தரும் விளம்பரங்கள் நிறுத்தப்படும். அப்புறம், பத்திரிகை முகவர்கள், விற்பனையாளர்கள் மிரட்டப்படுவார்கள். இவ்வளவையும் தாண்டினால், சட்டத்தை அரசு கையில் எடுக்கும். ஏனென்றால், ‘சட்டவிரோத நடவடிக்கைகள்’ தொடர்பாக ஊடகங்கள் எந்தச் செய்தியையும் வெளியிடக் கூடாது என்று தடை விதிக்கிறது இந்தச் சட்டம். எது ஒன்றையும் சட்ட விரோதம் ஆக்க அரசால் முடியும்” என்கிறார்கள்.

புகழ் பெற்ற மருத்துவரும் மனித உரிமை ஆர்வலருமான டாக்டர் விநாயக் சென் 2007-ல் கைதுசெய்யப்பட்டது இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான். அரசை விமர்சித்தார் என்பதாலேயே அவரைக் குறிவைத்தது அரசு. தடைசெய்யப்பட்ட இயக்கம் தொடர்பான புத்தகம் ஒன்றை வைத்திருந்தார் என்கிற குற்றச்சாட்டே அவரை ஆயுள் தண்டனையை நோக்கித் தள்ள சத்தீஸ்கர் அரசுக்குப் போதுமானதாக இருந்தது. நோம் சோம்ஸ்கி, நோபல் பரிசு பெற்றவர்கள் 22 பேர் என்று சர்வதேச அளவில் அறிவுஜீவிகள் பலர் சென்னுக்கு நீதி கேட்டுக் கை கோத்தும் ஒன்றும் அசைக்க முடியவில்லை. இப்போதும் உச்ச நீதிமன்றம் அளித்த பிணையிலேயே வெளியே வந்திருக்கிறார் சென்.

## சமூக நீதிக்கு சாவுமணி அடிக்கும் 'மனுதர்ம'க் கூட்டம்

# என்ன நடக்கிறது, 'அய்.அய்.டி.'களில்?

**விடுதலை இராசேந்திரன்**

'சூத்திரர்' கல்வி உரிமையைப் பறித்தது 'மனுசாஸ்திரம்'. எனவே, அம்பேத்கரும் பெரியாரும் அதை எதிர்த்தனர். மக்கள் வரிப் பணத்தில் இயங்கும் - அய்.அய்.டி.கள். இந்தத் தலைவர்களின் சிந்தனைகளுக்கே அய்.அய்.டி. வளாகத்துக்குள் தடை போட்டன. 'மனுதர்மமே' அய்.அய்.டி. ஏற்றுக் கொண்ட தத்துவம் என்பதே இதற்கான அர்த்தம். இதுகூட ஒரு கண்ணோட்டத்தில் வரவேற்க வேண்டியது தான். இல்லையேல் தமிழ்நாட்டில் அம்பேத்கரிஸ்டுகள், பெரியாரிஸ்டுகள், மார்க்சிஸ்டுகள், மாவோயிஸ்டுகள் ஒரே களத்தில் கரம் கோர்க்க நல்ல வாய்ப்பை உருவாக்கியிருக்குமா?

'அய்.அய்.டி.' என்பதற்கு மற்றொரு பெயர் எப்போதும் வலம் வந்து கொண்டிருக்கும் - "அய்யர், அய்யங்கார், உயர்கல்வி நிறுவனம்". வசிஷ்டர் படிப்பு வட்டம், வந்தே மாதரம் படிப்பு வட்டம், இராமாயண படிப்பு வட்டம், விவேகானந்தர் படிப்பு வட்டம், துர்வாசர் படிப்பு வட்டம் என்று வளாகத்தை வேதமயமாக்குவதற்கு அனுமதித்தவர்கள் - அம்பேத்கர், பெரியார் படிப்பு வட்டத்தை மட்டும் அனுமதிக்க மறுத்தது.

சென்னை அய்.அய்.டி.யில், தலித், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மீது திணிக்கப்படும் பாகுபாடுகளை எதிர்த்து 1998இல் தொடங்கி, 2000 ஆண்டு வரை மூன்று ஆண்டு காலம் தொடர் போராட்டங்களை பெரியார் திராவிடர் கழகம் முன்னின்று நடத்தியது. தலித் அமைப்புகளை இணைத்து, 'சமூகநீதி மீட்பு இயக்கம்' ஒன்றை உருவாக்கி போராடியது.

பொதுக் கூட்டங்கள், முற்றுகைப் போராட்டங்கள் ஆளுநரிடம் மனு என்ற வடிவில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 'அய்.அய்.டி. வளாகத்துக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவுகிறார்கள்' என்று புதுடில்லியிலிருந்து சுப்ரமணியசாமியைப் பிடித்து அறிக்கை வெளியிட வைத்தது அய்.அய்.டி. நிர்வாகம். அப்போது இங்கே பணியாற்றிய 420 பேராசிரியர்களில் தலித் இரண்டு பேர்; பிற்படுத்தப்பட்டோர் 20 பேர்; ஒரு முஸ்லீம்கூட இல்லை. இவர்கள்கூட இடஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படவில்லை. திறந்த போட்டியில் போட்டியிட்டு வந்தவர்கள்தான். 15 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலையில் எந்த மாற்றமும் நிகழ்ந்திடவில்லை. 2008-லிருந்து 2015ஆம் ஆண்டு வரை சென்னை அய்.அய்.டி.யின் பேராசிரியர், மாணவர்களின் ஜாதிவாரி எண்ணிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ளன. அதே நிறுவனத்தில் மனித வளம் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையில் பணியாற்றும் அருண்சுதர்சன் என்ற இளம் பேராசிரியர் விவரங்களைப் பெற்றிருக்கிறார். இதன்படி 86.57 சதவீத பேராசிரியர்கள் (மொத்தம் 464 பேர்) பார்ப்பனர்கள். இதில் மிகச் சிலர் உயர் ஜாதிப் பிரிவினர் பிற்படுத்தப்பட்டவர்கள் 11.01 சதவீதம் மட்டுமே (59 பேர்) தாழ்த்தப்பட்டோர் 2.05 சதவீதம் மட்டுமே (11 பேர்). பழங்குடிப் பிரிவினர் ஒரு சதவீதம்கூட இல்லை 0.31 சதவீதம் (2 பேர்). மொத்தமுள்ள 536 பேராசிரியர், துணைப் பேராசிரியர், இணைப் பேராசிரியர்களில் 90 சதவீதம் பேர் பார்ப்பனர் உயர்ஜாதியினர்.

1998-2000 ஆண்டுகளில் வசந்தா கந்தசாமி என்ற கணிதப் பேராசிரியர், பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் கொடுத்ததால், துறை ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் விவரிக்க முடியாத அளவில் பழி வாங்கப்பட்டார். பல சர்வதேச ஆய்வு இதழ்களில் மிக அதிக எண்ணிக்கையில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிய பெருமை இவருக்கு உண்டு. இதற்கு இணையாக எந்த ஒரு அய்.அய்.டி. பேராசிரியரும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியதில்லை.

நோபல் பரிசுக்கு இணையாக மதிப்பிடப்படும் 'பட்நாகர் விருது', 1996இல் இவருக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதுவரை சென்னை அய்.அய்.டி.யிலிருந்து இந்த விருதை எவரும் பெற்றிடவில்லை என்ற நிலையிலும் அய்.அய்.டி.யின் முன்னாள் இயக்குனராக இருந்த ஒரு பார்ப்பன இயக்குனர் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவசரமாக திரும்பி வந்து, அவ்விருது கிடைத்துவிடாமல் தடுத்து நிறுத்தினார். இதை எதிர்த்து, வசந்தா கந்தசாமி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு மனுவில் இந்த விவரங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

அய்.அய்.டி.யின் ஜாதி வெறிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் ஏராளம். அத்தனையும் விசாரணைக்கு வராமல் கிடப்பில்தான் போடப்பட்டுள்ளன. ஒரே ஒரு முறைதான் அய்.அய்.டி. ஜாதியத்துக்கு எதிரான ஒரு தீர்ப்பு உயர்நீதிமன்றத்திலிருந்து வந்தது. வழக்கு இதுதான். அய்.அய்.டி. இயக்குனராக பல ஆண்டுகாலம் வேதகால ஆட்சி நடத்திய நடராஜன் என்பவர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு ஆனந்த் என்ற பார்ப்பனர் கொல்லைப்புற வழியாக வந்துவிட்டார்.

அவரது நியமனம் முறையாக வெளிப்படைத் தன்மை இல்லாமல் இரகசியமாக அரங்கேற்றமானது. அதற்கான ஆவண சான்றுகளும் இருந்தன. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி இந்த நியமனத்தின் முறைகேடுகளை எடுத்துக்காட்டி, இயக்குநர் நியமனத்தை செல்லாது என்று அறிவித்தார். இந்த வரலாற்றுப் புகழ்மிக்க தீர்ப்பை வழங்கியது நீதிபதி சந்துரு. இதுவும் நிலைத்திடவில்லை. அடுத்த சில வாரங்களிலேயே மேல்முறையீட்டில் நிர்வாகம் தங்களுக்கு சாதகமான தீர்ப்பைப் பெற்றுவிட்டது.

> *நிறுவனம் தொடங்கப்பட்டு, 20 ஆண்டுகள் வரை அரசியல் சட்டம் உறுதி செய்திருந்த தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டையே பின்பற்ற மறுத்துவிட்டனர்.*
>
> *அய்.அய்.டி. நிறுவனம், அந்த ஆணையை அமுல்படுத்த மறுத்ததோடு, அதை எதிர்க்கவும் முடிவெடுத்தது.*

இதே அய்.அய்.டி.யில் படித்து, சிறந்த மாணவருக்கான விருதையும் பெற்று, அமெரிக்கா-ஜப்பான் போன்ற நாடுகளில் கவுரப் பேராசிரியராகப் பணியாற்றிவிட்டு சொந்த நாட்டுக்கு சேவை செய்யும் விருப்பத்தோடு திரும்பினார் ஒரு பேராசிரியர். அய்.அய்.டி.யில் அவர் மனு செய்திருந்தார். அவர் பெயர் முனைவர் முரளிதரன். 50க்கும் மேற்பட்ட இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வதேச அளவில் பாராட்டுகளைப் பெற்றவை. அமெரிக்காவின் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகளுக்கான தகவல் களஞ்சியத்தில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது. ஆனாலும், அவரிடம் இல்லாமல் போன தகுதி-உயர் குடிப் பிறப்புதான். 'மிகவும் பிற்படுத்தப்பட்ட' சமுதாயத்தில் பிறந்து விட்டார். இந்த உயிரியல் மருத்துவப் பொறியாளரான முனைவர் முரளிதரன், அய்.அய்.டி.யில், சிறந்த மாணவருக்கான விருது கிடைத்தும், பணி வாய்ப்புக்கான உரிய வாய்ப்பு, தகுதி இருந்தும் நிர்வாகம் மறுத்தது. நீதிமன்றம் போனார் முரளிதரன்.

ஆனால், அய்.அய்.டி. இயக்குனராக இருந்த நடராசன், இவரை அய்.அய்.டி. வளாகத்துக்குள்ளேயே நுழைவதற்கு தடை விதிக்கும் ஆணையைப் பிறப்பித்து, தனது ஆணவத்தை அதிகாரத் திமிரை வெளிப்படுத்தினார். எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் இப்படி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்குமா என்று தெரியவில்லை. கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் இந்தப் பேராசிரியர் புகார் கொடுக்கப் போனார். காவல் நிலையம் புகாரை பதிவு செய்யவே மறுத்து விட்டது. தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் அவமதிப்புக்கும் நீதி கேட்டு நீதிமன்றங்களின் படியேறி வழக்குகளைத் தொடர்ந்தார். அவருக்கு நீதியின் கதவு திறக்கப்படவேயில்லை.

நாட்டில் தொழில்நுட்ப உயர்கல்வியை உலகத் தரத்துக்கு உயர்த்த 1959ஆம் ஆண்டில் இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் பம்பாய், சென்னை, டெல்லி, கான்பூர், கோரக்பூர் மற்றும் கவுகாத்தியில் தொடங்கப்பட்டன. தேசிய முக்கியத்துவம் பெற்ற இந்த நிறுவனங்களின் வேந்தர் (Chancellor) - குடியரசுத் தலைவர். 1961ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ், இந்த நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டன. 1963இல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, வெகு மக்களின் மேம்பாடே இதன் நோக்கம் என்று சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. மக்கள் வரிப்பணத்தில் வெகு மக்கள் மேம்பாட்டுக்காக நடத்தப்படும் இந்த நிறுவனம், "பூணூல்"களுக்குள் முடக்கப்பட்டு விட்டது. நிறுவனம் தொடங்கப்பட்டு, 20 ஆண்டுகள் வரை அரசியல் சட்டம் உறுதி செய்திருந்த தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டையே பின்பற்ற மறுத்துவிட்டனர். 1978ஆம் ஆண்டுதான் அதுவும் நீதிமன்றத் தலையீட்டுக்குப் பிறகே தலித் பிரிவினருக்கான இடஒதுக்கீட்டைப் பின்பற்ற ஒப்புக் கொண்டனர். அதுவும்கூட கண் துடைப்புதான். அய்.அய்.டி. வரலாற்றில், இதுவரை இந்த இடஒதுக்கீட்டுக்கான இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதே இல்லை. இப்போதும் என்ன நிலை? அய்.அய்.டி. மனிதவளம் மற்றும் சமூக விஞ்ஞானத் துறை, இளம் பேராசிரியர் அருள் சுதர்சன், தகவல் பெறும் உரிமை சட்டத்தில் பெற்றுள்ள தகவல்களே இதை உறுதி செய்கின்றன.

2008-லிருந்து 2015 வரை ஆய்வுப் பட்டப் படிப்புக்கு (பிஎச்.டி.) அனுமதிக்கப்பட்ட தலித் மாணவர் எண்ணிக்கை 142. பழங்குடி மாணவர் எண்ணிக்கை 9. திறந்த போட்டி வழியாக நுழைந்த பார்ப்பனர்கள் - 1592 பேர். மேல் பட்டப் படிப்புக்கு (எம்.எஸ்.) பொது போட்டி வழியாக நுழைந்த பார்ப்பனர் - 1194 பேர். இதில் வெகு சிலர் மட்டுமே முன்னேறிய ஜாதிப் பிரிவினர்) இதில் பிற்படுத்தப்பட்டோர் 740. தலித் மாணவர்கள் 29 பேர் பழங்குடிப் பிரிவு மாணவர் 3 பேர். இது தவிர, ஏனைய துறைகளில் பொதுப் போட்டி வழியாக நுழைந்தவர்கள் 1,194 பார்ப்பன/உயர்ஜாதியினர். 429 பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். 650 பேராசிரியர், துணைப் பேராசிரியர்களும், 8000 மாணவர்களும், 3000 ஊழியர்களும் பணியாற்றும் மிகப் பெரும் கல்வி நிறுவனத்தில் இடஒதுக்கீடு கொள்கைகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதை இந்த புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. (தகவல்: 'பிரன்ட்லைன்', ஜூன் 26, 2015)

இவ்வளவுக்குப் பிறகு, 2008ஆம் ஆண்டு மத்திய மனித வளத்துறை அமைச்சகம், இடஒதுக்கீட்டை உறுதி செய்யக் கோரி குறிப்பாணை ஒன்றை அய்.அய்.டி.க்கு அனுப்பியது. தலித் பிரிவினருக்கு 15 சதவீதம், பழங்குடியினருக்கு 7.5 சதவீதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம். ஆசிரியர்-மாணவர் தேர்வுகளில் உறுதி செய்ய வேண்டும் என்று அந்த குறிப்பாணை வலியுறுத்தியது. அய்.அய்.டி. நிறுவனம், அந்த ஆணையை அமுல்படுத்த மறுத்ததோடு, அதை எதிர்க்கவும் முடிவெடுத்தது. அய்.அய்.டி., தனது 'செனட்' கூட்டத்தைக் கூட்டி, இடஒதுக்கீட்டு ஆணையை நிறைவேற்ற முடியாது என்று தீர்மானமே நிறைவேற்றியது. மத்திய மனித வளத் துறை தனது குறிப்பாணையை திரும்பப் பெற வேண்டும் என்றும் ஆட்சிக்கே அறிவுறுத்தியது. வெகு மக்கள் மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம், தலித், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அவர்களுக்கான சட்டப்படியான உரிமைக் கதவுகளை இழுத்து மூடியது.

இந்த நிறுவனங்களில் மக்கள் வரிப் பணத்தில் படித்த 'அறிவாளிகள்' இறுதியாண்டு படிக்கும் போதே வெளிநாடுகளில் வேலை நியமன ஆணைகளையும் விசாவையும் பெற்றுக் கொண்டு பட்டம் பெற்ற உடனேயே விமானம் ஏறி விடுகிறார்கள். இந்தியாவில் குறைந்தது சில பல ஆண்டுகளாவது பணியாற்றுவதை கட்டாயப்படுத்தும் நிபந்தனைகளைக்கூட எதையும் இந்த 'தேசபக்த' நிர்வாகங்கள் விதிக்கத் தயாராக இல்லை.

(தொடரும்)

DATE OF PUBLICATION 16.07.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# மேட்டூரில் தொடர் கூட்டங்கள்

மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழக சார்பில் மேட்டூர் அணைப் பகுதியில் ஜூலை 4 முதல் 19ஆம் தேதி வரை பெரியார் கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கி நடந்து வருகின்றன.

ஜூலை

4 - காவேரி பாலம் (தலைமை - பிரகாசு)

5 - குள்ள வீரன்பட்டி (தலைமை - பெ. சக்திவேல்)

7 - பொன்னகர் ( தலைமை - இர. பூவழகன்)

9 - ஆஸ்பத்திரி காலனி (தலைமை - பொன்.தேவராசு)

11 - பாரதி நகர் (தலைமை - மே.கா. கிட்டு)

12 - வீரபாண்டிய கட்டபொம்மன் (தலைமை - மா.கதிரேசன்)

14 - நேரு நகர் (தலைமை - அ. அண்ணாதுரை)

16 - மசூதித் தெரு (தலைமை - மார்ட்டின்)

18 - காவேரி நகர் (தலைமை - சி.கோவிந்தராசு)

19 - மாதையன்குட்டை (தலைமை - மா. பழனிச்சாமி)

கூட்டங்களில் கோபி.வேலுச்சாமி, நங்கவள்ளி சீ. அன்பு ஆகியோர் உரையாற்றுகிறார்கள். காவை. இளவரசன், மேட்டூர் சி. கோவிந்தராசு ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்.

கூட்டங்களின் நோக்கம் குறித்து மேட்டூர் கழகம் வெளியிட்டுள்ள துண்டறிக்கை:

நாம் இன்று மிக நெருக்கடியான காலத்தில் ஒடுக்குமுறைச் சமூக அமைப்பில் வாழ்ந்து வருகிறோம் என்பதை அனைவரும் அறிவீர். நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு மதத் தீவிரவாதம் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்து மத பயங்கரவாத சக்திகள் இந்துப் பண்பாட்டை (?) இந்து வெறியை மக்களிடையே புகுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. கல்வியை காவி மயமாக்குதல்; வரலாற்றைத் திரித்து எழுதுதல்; இந்துத்துவத்தின் தேசத் தொண்டர்கள் என்ற பெயரில் வன்முறைக் கும்பலை உருவாக்கி பயிற்சி அளித்தல்... என அதன் நடவடிக்கைகள் விரிவடைந்து வருகின்றன. இதன் விளைவாக மதக் கலவரங்கள் அதிகரித்து, நாடு வன்முறைக் காடாக மாறி வருகிறது.

இத்தகையப் போக்கை நாம் தொடர்ந்து அனுமதிக்கப் போகிறோமா? மத வன்முறையாளர்களுக்கான தளமாக நாடு தொடர்ந்து இருக்க வேண்டுமா? இப்படி எண்ணற்ற வினாக்கள் நம் முன் எழுகின்றன.

இவ்வினாக்களுக்கான விடையாக நாம் இன்று பார்ப்பது பெரியாரைத் தான்! சமூக, பொருளாதார, அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தன் வாழ்நாள் முழுவதும் போராடி சமத்துச் சமுதாயம் காண கிளர்ச்சி செய்தவர் பெரியார். அவரது அயராத போராட்டத்தின் பயனாக விழித்தெழுந்த இச்சமூகத்தை மதவாதம் என்ற நஞ்சுக்கு இரையாக்க பல்வேறு சக்திகள் முயன்று வருகின்றன. எனவே பெரியாரின் சிந்தனைகள் இன்று மிகவும் தேவையான ஒன்றாகிவிட்டது. அவரின் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்லவேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடே... இந்த பெரியார் கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் என்று துண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கழிவு அல்லது தண்டனைக் குறைப்பு வழங்குவதற்கு 432, 433 ஆகிய பிரிவுகள் வழங்கும் அதிகாரத்தை மாநில அரசு - மத்திய புலனாய்வு நிறுவனம், புலனாய்வு செய்த வழக்கில் பயன்படுத்தும்போது, நடுவண் அரசிடம் கலந்தாய்வு செய்ய வேண்டும் என்று இந்த பிரிவு கூறுகிறது.

ராஜிவ் கொலை வழக்கை நடுவண் புலனாய்வு நிறுவனம் (CBI) புலனாய்வு செய்தது உண்மை. எனவே, எழுவர் விடுதலைக்கு இவ்விதி பொருந்தும் இதில் அய்யமில்லை. அதனால்தான் தமிழக முதல்வர் அவர்களை விடுதலை செய்யும் முடிவை உடனே செயல்படுத்தாமல் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினார். முதல்வர் மூன்று நாள் கெடு விதிக்கலாமா? என்று கேட்பவர்களுண்டு. விதித்தால் என்ன? மூன்று நாள் போதாது என்று நடுவணரசு கருதியிருந்தால் மாநில அரசுக்குத் தெரிவித்துக் கூடுதல் அவகாசம் பெற்றிருக்கலாமே! செய்தி தெரிவிப்பதை மட்டுமே கலந்தாய்வாக மதிக்க இயலாது என்றால், திறமான கலந்தாய்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை நடுவணரசே எடுத்துரைக்கலாமே! மாநில அரசு எழுதும் மடல்களைக் குப்பைத் தொட்டியில் வீசி விட்டு மறுமொழியே இல்லாமல் காலங்கடத்துவதற்குப் பெயர்தான் திறமான கலந்தாய்வோ?

எழுவர் விடுதலை தொடர்பில் முதல்வர் செயலலிதா செய்தது சட்டப்படியும் ஞாயப்படியும் சரி. கலந்தாய்வு என்ற கட்டுப்பாட்டைக் காரணங்காட்டி இந்திய அரசின் இசைவு பெற்ற பிறகே விடுதலை செய்ய முடியும் என்று காங்கிரஸ் சொல்வது விபரீத அபத்தம்! கலந்தாய்வு (Consultation) வேறு, ஒப்புதல் (Concurrence) வேறு இதைத் தெரிந்து கொள்ளப் பெரிய சட்ட அறிவு ஏதும் தேவை இல்லை. எளிய ஆங்கில-தமிழ் அகராதியே போதும். இது வருகிற சூலை 15ஆம் நாள் உச்ச நீதிமன்றத்தில் தெளிந்துரைக்கப்படும் என்று நம்புகிறோம்.

கலந்தாய்வு வேறு, ஒப்புதல் வேறு என்பதற்கு குறிப்பிட்ட சட்டப் பிரிவிலேயே அகச் சான்று உள்ளது. பிரிவு 432, உட்பிரிவு (2) இந்த வேறுபாட்டைத் தெளிவாக உணர்த்துகிறது. எவ்வாறான வழக்குகளில் மாநில அரசின் தண்டனைக் குறைப்பு ஆணை மத்திய அரசின் தண்டனைக் குறைப்பு ஆணை இல்லாமல் நடைமுறைக்கு வராது என்று இந்த உட்பிரிவு தெளிவுபடுத்துகிறது. அதாவது நடுவணரசின் ஆட்சியதிகாரத்துக்குட்பட்ட வழக்குகளில் மாநில அரசு மட்டும் தண்டனைக் குறைப்பு வழங்கினால் போதாது, மத்திய அரசும் வழங்கினால்தான் அது செயல்வடிவம் பெறும்; அதாவது மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் மாநில அரசு தண்டனைக் குறைப்புச் செய்ய முடியாது.

கலந்தாய்வு என்றாலே ஒப்புதல்தான் என்றால் இந்த இருவேறு உட்பிரிவுகளே தேவைப்பட்டிருக்க மாட்டா. இரண்டும் சேர்ந்து ஒரே பிரிவாக இருந்திருக்கும்.

முதல் உட்பிரிவு கலந்தாய்வு கோருகிறது, இரண்டாம் உட்பிரிவு ஒப்புதல் கோருகிறது. அதாவது மத்தியக் காவல்துறை நிறுவனம் (சி.பி.அய்.) தொடர்ந்த வழக்கில் மத்திய அரசுடன் கலந்தாய்வு தேவை. மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட குற்றங்களில் மத்திய அரசின் ஒப்புதல் தேவை. ராசீவ் கொலை வழக்கு முதல் வகையைச் சேர்ந்தது என்பதால், கலந்தாய்வே போதுமானது. இது முதல் வகையைச் சேர்ந்தது என்பதை இந்திய அரசோ காங்கிரசோ மறுக்கவில்லை. ஆனால் கலந்தாய்வு என்றாலும், இந்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுதலை செய்ய முடியும் என்று குதர்க்கம் பேசுகிறார்கள். குதர்க்கத்துக்குக் காரணம் குருட்டு பக்தி!

முதல் உட்பிரிவு கலந்தாய்வு கோருகிறது, இரண்டாம் உட்பிரிவு ஒத்த முடிவு, அதாவது ஒப்புதல் கோருகிறது. இந்த வேறுபாட்டைக் காண விடாமல் காங்கிரஸ் அற்பர்களைத் தடுப்பது எது?

ராஜிவ் பக்தர்களாக இருப்பது காங்கிரசார் உரிமை. ஆனால் மனித உரிமைகள், மாநில உரிமைகள், நீதிமன்றத் தீர்ப்புகள், சட்ட விதிகள் எல்லா வற்றையும் தங்களின் பழிவெறி ஆதாய அரசியல் யாகத் தீயில் போட்டுக் கொளுத் தும் அவர்களின் முயற்சிக்கு அரசுகளோ உச்ச நீதிமன்றமோ துணை போகாதிருக்க வேண்டும். மனித உரிமைகள் மகத்தானவை, எந்தப் பெரிய மனிதனை விடவும்!


**கட்டுரையாளர்: ‘தமிழ்த்தேசம்’ இதழ் ஆசிரியர்**

## மேட்டூர் கழக மூத்த ஓவியர் சேகர் முடிவெய்தினார்



மேட்டூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மூத்த ஓவியர் சந்திரசேகர் (எ) சேகர் கடந்த 1.7.2015 அன்று உடல்நலம் பாதிப்பால் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் முடிவெய்தினார். இவருக்கு வயது (54). மேட்டூரில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டு, வளர்ந்து வந்த நிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகம் வளர்வதற்கு இவரின் சுவரெழுத்தும், தட்டி விளம்பரமும் முழு வீச்சாக அன்று இருந்தது. குறிப்பாக கடவுள் கதைகள், வேதங்களில் வரும் கடவுள் தொடர்பான கடவுள் கதைகளுக்கேற்ப கார்ட்டூன்கள் வரைவதில் திறமையானவர். அந்த காலகட்டங்களில் இவர் வரையும் கடவுள் கார்ட்டூன்கள் அடங்கிய தட்டி பிரச்சாரம் மக்கள் மத்தியில் எப்போதும் ஒரு பரபரப்பை உண்டாக்கும். இவருக்கு நிர்மலா என்ற மனைவியும், தமிழ் பிரபா, தமிழ் நிலா என்ற இரு மகள்களும் உண்டு. கழகப் பொறுப்பாளர்களும், கழகத் தோழர்களும் கழகச் சார்பில் இறுதி மரியாதை செலுத்தினர்.


## கைவண்டி கருப்பு முடிவெய்தினார்



எப்போதும் கருஞ்சட்டையுடன் காட்சியளிக்கும் உழைக்கும் தோழர் மதுரை கைவண்டி கருப்பு (75), 12.7.2015 அன்று காலை முடிவெய்தினார். திராவிடர் கழகத்தில் தொடங்கி, திராவிடர் விடுதலைக் கழகம் வரை பெரியார் தொண்டராகவே வாழ்ந்தவர். அவர் பொள்ளாச்சியில் வாழ்ந்த காலத்தில் எப்போதும் சுமை இழுக்கும் கை வண்டியுடன் உழைத்ததால் கைவண்டி கருப்பு என்று பெரியாரால் அழைக்கப்பட்டவர். கழக நிகழ்ச்சிகளில் தமது துணைவியாரோடு பங்கேற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கடந்த சில மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் மதுரை மஞ்சள்மேடு குடியிருப்பில் தனது இல்லத்தில் முடிவெய்தினார். கழக சார்பில் தோழர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 16th July 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூலை 23, 2015 | புரட்சி 14 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00

## எழுச்சியுடன் நடந்த தர்மபுரி கழக செயலவை

திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம் 19.7.2015 காலை 11 மணியளவில் தர்மபுரி பெரியார் மன்றத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடந்தது. கழகத் தோழர் கிணத்துக்கடவு நிர்மல் குமார், கடவுள், ஆன்மா மறுப்பு கூற, மாவட்டக் கழக சார்பில் நிகழ்ச்சிக்கு பொறுப்பேற்று ஏற்பாடு களை செய்த பரமசிவம் வரவேற்புரையாற்றினார்.

சென்னை மாவட்டக் கழகத் தோழர் சரவணன், நெல்லை மாவட்டத் தலைவர் குறும்பலபேரி சு. வடிவேலு (3.11.2014), தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் க.மதன் (16.4.2015), மதுரை கைவண்டி கருப்பு, கழக ஓவியர் மேட்டூர் சாதகப் பறவை சேகர், கரூர் இராஜா ஆகியோர் மறைவுக்கு ஒரு நிமிடம் மவுனம் காத்து இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், செயலவை முன் விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள், கழக செயல்பாடுகளை விளக்கி தொடக்க உரையாற்றினார். பின்னர், மாவட்ட வாரியாக தோழர்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

ஈரோடு வடக்கு - நாத்திக ஜோதி, ஈரோடு தெற்கு - சண்முகபிரியன், சேலம் கிழக்கு - பரமசிவன், சேலம் மேற்கு - கோவிந்தராஜன், விழுப்புரம் - நாவாப்பிள்ளை, பொள்ளாச்சி - நிர்மல்குமார், மதுரை - பாண்டியன், தென் சென்னை - வேழவேந்தன், தஞ்சை - பாரி, காஞ்சிபுரம் - தெள்ளமுது, திருப்பூர் - முகில்ராசு, தூத்துக்குடி - பொறிஞர் சி.அம்புரோசு, கிருட்டிணகிரி - குமார், கோவை - நேருதாஸ், நாகை - மகேஷ், நாமக்கல் - சக்திவேல், கரூர் - முகமது அலி (எ) பாபு, திருவாரூர் - காளிதாசு, கடலூர் - பாரதிதாசன், விருதுநகர் - கணேச மூர்த்தி, சிவகங்கை - பெரியார் முத்து, தர்மபுரி - வையாபுரி, வடசென்னை - யேசு.

**மாவட்ட பொறுப்பாளர்களைத் தவிர கருத்துகளை முன் வைத்த தோழர்கள்:** நிவாஸ்-கோபி செட்டிபாளையம், முகில்ராசு-திருப்பூர், பரிமளராசன்-முகநூல் குறித்து விளக்கினார். விஜயக்குமார்-இளையதளம் குறித்து விளக்கினார்.

மதியம் அனைவருக்கும் மாவட்டக் கழகம் சிறப்பாக உணவு ஏற்பாடு செய்திருந்தது. 3.30 மணியளவில் மீண்டும் செயலவை தொடங்கியது.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழு கோவிந்த ராஜ், பாடல்கள் பாடினார். தொடர்ந்து, தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் ஈரோடு வெங்கட், தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பில் ஆசிரியர் சிவகாமி, சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் சார்பில் கொளத்தூர் குமார் உரையாற்றினர். அதைத் தொடாந்து கருத்துகளை முன் வைத்து தலைமைக் குழு உறுப்பினர்கள் பேசினர்.

**பேசியோர்:** அய்யனார், சக்திவேல், இளையராசா, அன்பு தனசேகரன், கோபி இளங்கோ, துரைசாமி, தபசி குமரன், இரத்தினசாமி, பால். பிரபாகரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தீர்மானங்களை முன் மொழிந்து, தீர்மானங்களை விளக்கியும் பரப்புரைத் திட்டம், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டை மேலும் பரப்புதல், அமைப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் விரிவாகப் பேசி, மாநிலப் பொறுப்பாளர்களை அறிவித்தார். நாகராஜ் நன்றி கூற, 7 மணியளவில் செயலவைக் கூட்டம் நிறைவடைந்தது.

## காவல்துறைக்கு சவால் விடும் ஜாதிவெறியர்கள்

தமிழ்நாட்டில் ஜாதி ஆணவக் கொலைகள் தொடர்ந்து கொண்டிருப்பதோடு, ஜாதிவெறி சங்கங்கள் இதைத் தூண்டிவிட்டு, நியாயப்படுத்தியும் வருகின்றன. நடுவண் ஆட்சி, இந்த ஜாதி ஆணவக் கொலைகளைத் தடுக்க தனி சட்டம் ஒன்றை இயற்றிட - மாநில அரசுகளிடம் கருத்துகள் கேட்டுள்ள நிலையில், அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, இது குறித்து ஏதும் கருத்து கூறாது அலட்சியம் காட்டுகிறது. தமிழ்நாடு அரசே, ஒரு தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்கவில்லை.

அண்மையில் கோகுல்ராஜ் என்ற தலித் பொறியியல் பட்டதாரி, தலை துண்டிக்கப்பட்டு ஜாதி ஆணவக் கொலைக்கு பலியாகியுள்ளார். இந்தக் கொலையில் தேடப்படும் முக்கிய குற்றவாளியான யுவராஜ் என்பவர் இன்னும் கைது செய்யப்படாத நிலையில், அவர் தலைமறைவாக இருந்துகொண்டு, தனது குற்றச் செயலை நியாயப்படுத்தி காவல்துறைக்கு சவால்விட்டு பேசியது, 'வாட்ஸ் அப்' வழியாக பரப்பப்பட்டு வருகிறது. ஜாதி ஆணவக் கொலைகளில் காவல்துறையின் இந்த அலட்சியத்துக்குக் காரணம், அதில் ஊடுருவி நிற்கும் ஜாதிய மனநிலைதான் என்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகிறோம். எனவேதான் ஒரு மாவட்டத்தில் காவல்துறை அதிகாரியாக அந்த மாவட்டத்தில் ஆதிக்கஜாதியாக உள்ள பிரிவைச் சார்ந்தவர்களையே நியமிப்பதை தவிர்க்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழகத்தில் சமூக ஒற்றுமைக்கும் - சமத்துவத்துக்கும் பெரும் சவாலாக உருவாகிவரும் - இந்த ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில், தமிழகம் ஜாதி வெறிக் களமாக மாறிடும் ஆபத்தை தமிழக அரசுக்கு சுட்டிக்காட்டுகிறோம்.

இந்தப் படுகொலைகள் குறித்து, தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் கண்டனங்களைத் தெரிவிக்காமல் 'பாராமுகம்' காட்டுவது கவலை அளிக்கிறது. இந்தக் கட்சிகள் தங்கள் மவுனத்தைக் கலைத்து, ஜாதி வெறிக்கு எதிராகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வற்புறுத்துகிறது.

**– செயலவைத் தீர்மானம்**

### *எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; எங்கள் சந்ததிக்கு வேலை வேண்டும்!*

## மீண்டும் தொடங்குகிறது, பரப்புரை இயக்கம்!

தர்மபுரி செயலவையில் ஜாதி எதிர்ப்பு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகளை வலியுறுத்தி பரப்புரை இயக்கத்தைத் தொடங்க தீர்மானிக்கப்பட்டது. தீர்மான விவரம்:

தமிழ்நாட்டில், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களின் எதிர்காலம் இருண்டு கிடக்கிறது. அவர்களின் வேலை வாய்ப்புகள், அரசுத் துறைகளில் வெகுவாகக் குறைந்து விட்டன. தாராளமயக் கொள்கையால் பெருகிவரும் பெரும் தொழில் நிறுவனங்களில் இவர்களின் வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் சட்டங்கள் வர வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த கால அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, அதன் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் ஏற்றுக் கொண்டிருந்தாலும் செயல்படுத்தாமல் புறந்தள்ளிவிட்டது. பெரும் தொழில் நிறுவனங்களுக்கு அரசுதான் நிலம் வழங்குகிறது. தண்ணீர், மின்சாரம் இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ வழங்கப்படு கின்றன. பங்கு மூலதனங்கள் வழியாக மக்கள் பணம் மூலதனத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு இந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பை உறுதி செய்ய அரசு சட்டம் இயற்றுவதற்கு முழுமையான அதிகாரமும் நியாயமும் இருக்கிறது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் அந்நாட்டில் கருப்பர் உள்ளிட்ட மைனாரிட்டி மக்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளுக்கு சட்டம் இயற்றப்பட்டு வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாட்டில், ஜாதி சங்கங்களை நடத்தும் ஜாதித் தலைவர்கள், ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு, கலவரத்தை நடத்தவும், ஜாதி ஆணவக் கொலைகளை




நடத்தி, தங்களுக்குக் கீழே ஜாதிக்காரர்களை அணி திரட்டி, தங்களின் அரசியல் சுயநலன்களுக்குப் பயன்படுத்தவும் துடிக்கிறார்களே தவிர, இளைஞர்களின் வேலைவாய்ப்பு உரிமைகளுக்கோ, எதிர்கால சமுதாய நலனுக்கோ குரல் கொடுப்பது இல்லை. இந்த நிலையில் சமுதாயத்தில் சமத்துவத்தை சீர்குலைத்து, மோதல்களை உருவாக்கிடும் ஜாதியத்துக்கு துணை போகாமல், அதிலிருந்து வெளியேறி, தங்களின் எதிர்கால வாழ்வுரிமைக்கும், ஜாதி எதிர்ப்புக்கும் போராட இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று திராவிடர் விடுதலைக்கழகம் அறைகூவி அழைக்கிறது. இந்த நோக்கத்தை முன் வைத்து,

**எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்;**
**எங்கள் சந்ததிக்கு வேலை வேண்டும்!**

முழக்கத்தை முன் வைத்து, ஆகஸ்டு இரண்டாம் வாரத்தில் தமிழகம் முழுதும் பரப்புரை இயக்கங்களை நடத்துவது என்று இந்த செயலவை முடிவு செய்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் திட்டமிடப்பட்டு, இந்தப் பரப்புரை இயக்கத்தை நடத்துவது என்றும் செயலவை தீர்மானிக்கிறது.

## சாதிவாரி கணக்கெடுப்பை வெளியிடுக!

மக்களின் சமூக பொருளாதார கணக்கெடுப்பு விவரங்களை வெளியிட்டுள்ள நடுவண் அரசு- ஜாதிவாரிக் கணக்கெடுப்பு விவரங்களை மட்டும் வெளியிடாமல் தவிர்ப்பது கண்டனத்துக்குரியது. இந்த உண்மைகள் வெளியே வந்தால் பார்ப்பன உயர்ஜாதி - ஆதிக்கம் அனைத்துத் துறைகளிலும் மேலோங்கி நிற்கும் உண்மை அம்பலமாகிவிடுமோ என்று அஞ்சுகிறதோ என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் உண்மையான கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நிலைகள் வெளிவரும் போதுதான் அவர்களுக்கு சமூக நீதிக்கான இடஒதுக்கீடு மற்றும் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றிட முடியும் என்பதால், ஜாதிவாரி கணக்கீட்டு விவரங்களை வெளியிட வேண்டும் என்று இந்த செயற்குழு வற்புறுத்துகிறது.

**– செயலவைத் தீர்மானம்**

தலையங்கம்

## ‘புண்ணிய’ முழுக்குகளில் பலியாகும் அப்பாவி உயிர்கள்

மதத்தை மக்களிடம் நிலைநிறுத்துவதற்கு மதவாதிகள் உருவாக்கிய சடங்குகள், அதன் மீது திணிக்கப்பட்ட நம்பிக்கைகள் மக்களின் சிந்தனைகளை முடக்கிப் போட்டு விட்டன. இந்த நம்பிக்கைகள்தான் மக்களை விழாக்களில் இலட்சக்கணக்கில் கூடுவதற்கு தூண்டுகின்றன. பெரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் திறன் மிக்க நிர்வாகக் கட்டமைப்புகள் இல்லாதபோது அப்பாவி பக்தர்கள் உயிர்ப்பலியாகி விடுகிறார்கள். காதைக் கிழிக்கும் அளவுக்கு மதங்களையும் அதன் மீதான அரசியலையும் நீட்டி முழங்கிக் கொண்டிருப்பவர்கள், மத உணர்வில் வீழ்ந்துபட்ட பக்தர்கள் இப்படி உயிர்ப்பலியாகும் போது வாயை இறுக மூடிக் கொண்டுவிடுகிறார்கள்.

மதத் திருவிழாக்களில் கூட்ட நெரிசலில் சிக்கி, அப்பாவி மக்கள் பலியாகும் அவலம் தொடர்கதையாகிவிட்டது. ஆந்திராவில் கோதாவரியாற்றில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் ‘கோதாவரி புஷ்கரம்’ விழாவில் முழுக்குப் போட வந்த மக்களில் 29 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த துயர செய்தி அண்மையில் வெளி வந்திருக்கிறது. இந்த ‘புண்ணிய முழுக்கு’ப் போடும் விழாவுக்கு கட்டுக்கடங்காத வகையில் கூட்டத்தைக் கூட்டச் செய்ததில் சாமியார்களுக்கு ஜோதிடர்களுக்கு பெரும் பங்கு உண்டு. இராஜமுந்திரியில் இவ்வாண்டு நடக்கும் ‘கோதாவரி புஷ்கரம் விழா’வின்போது (முழுக்குப் போடும் விழா) குருபகவான், சிம்ம இராசியில் பிரவேசிப்பதாக, ஏற்கெனவே ஜோதிடர்கள் கதைகளைப் பரப்பினார்கள். சாமியார்கள் அவர்களின் பங்குக்கு வேறு ஒரு கதையை பரப்பினார்கள். “இந்த ஆண்டு வருவது மகாபுஷ்காரம் என்றும், 144 ஆண்டுகளுக்குப் பிறகு வருவதால், மகாபுஷ்காரம் என்பதையும் கடந்து, ‘ஆதி புஷ்காரம்’ என்ற சிறப்புப் பெற்றுள்ளது என்றும் மக்களை நம்ப வைத்தனர். அதுமட்டுமல்ல, முழுக்குப் போடும் அன்றைய நாளில் (ஜூலை 14) சரியாக காலை 6.25 மணிக்குத்தான் கோதாவரியில் குருபகவான் பிரவேசிக்கிறார் என்பதால், அந்த நேரத்தில் முழுக்குப் போடுவதே “புண்ணியத்தை”க் கொண்டுவந்து சேர்க்கும் என்றும் அறிவித்திருந்தனர்.

இவை அனைத்தையும் நம்பிய அப்பாவி மக்கள், பகுத்தறிவு சிந்தனையின்றி, பெரும் கூட்டமாகத் திரண்டதாலும், அதிலும் குறிப்பிட்ட அந்த ஒரு நிமிட நேரத்தில் முழுக்குப் போட்டுவிட வேண்டும் என்று முண்டியடித்துக் கொண்டு நின்றதாலும் பக்தர்களாக வந்தவர்கள், ‘சடலங்களாக’ திரும்பும் நிலை ஏற்பட்டு விட்டது. அதைவிட பெரிய அவலம், முக்கியப் புள்ளிகள் என்போரும், இந்த மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பதுதான். அதே ‘புண்ணிய நேரத்தில்’, ஆந்திர முதல்வர் சந்திரபாபு, தனது குடும்பத்துடன் முழுக்குப் போட வந்து விட்டார். அரசு நிர்வாகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலமைச்சருக்கும் அவரது குடும்பத்துக்குமே திருப்பி விடப்பட்டன.

1992ஆம் ஆண்டு இதேபோல் தமிழ்நாட்டில் குடந்தை ‘மகாமக’த்தின்போதும் நடந்தது. அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா தோழி சசிகலாவுடன் முழுக்குப் போட மகாமகம் வந்தார். இவர்களது பாதுகாப்பில் மட்டும் கவனம் செலுத்திய காவல்துறை, மக்கள் பாதுகாப்பைப் புறக்கணித்ததால் 50 அப்பாவி உயிர்கள் பலியாயின.

‘சுதந்திர’ இந்தியாவில் இதுபோன்ற கூட்ட நெரிசலில் பக்தர்கள் திணறி இறந்த சம்பவங்களை நாளேடுகள் பட்டியலிட்டுள்ளன. 1954ஆம் ஆண்டு மகாகும்பமேளாவின் போது பெருமளவில் கூட்ட நெரிசலில் பக்தர்கள் இறந்தபோது பிரதமர் நேரு, முக்கிய பிரமுகர்கள் இத்தகைய நிகழ்வுகளில் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதற்காக, சங்பரிவாரங்கள் அவருக்கு மதவிரோதி என்று முத்திரை குத்தின.

மக்களிடம் மதவெறியை – மூடநம்பிக்கைகளைத் திணித்து – கட்டுப்பாடற்ற கூட்டத்தைக் கூட்டச் செய்து, அவர்கள் மரணத்துக்குக் காரணமான சாமியார்கள், சோதிடர்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவருமே இந்த மரணங்களுக்கு நியாயமாக பொறுப்பேற்க வேண்டும். இதற்காக அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும். ஆனால், இந்த மூடநம்பிக்கைகளுக்குப் பலியாக வேண்டாம் என்று மக்களிடம் பகுத்தறிவைப் பரப்புகிறவர்கள், மதவிரோதிகளாக சித்தரிக்கப்படுகிறார்கள். மக்களை நல்வழிப்படுத்தும் பகுத்தறிவு சிந்தனைகளை எடுத்துக்கூற அனுமதி மறுக்கப்படுகிறது. மத உணர்வைப் புண் படுத்தினார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்படுகிறது.

சொல்லப்போனால், மக்கள் மீது கவலையுள்ள ஒரு ஆட்சி பகுத்தறிவைப் பரப்புவதை தனது கடமைகளில் ஒன்றாகக் கருதிட வேண்டும். அதையும் செய்யாமல் பகுத்தறிவுப் பிரச்சாரத்தையும் தடுப்பது, மக்கள் விரோதச் செயல்பாடன்றி வேறு என்ன?

## 20 தமிழர் படுகொலை வழக்கு: தமிழக அரசுக்கு கோரிக்கை

தர்மபுரி செயலவையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:

செம்மரக் கடத்தல் தொடர்பாக - ஆந்திர காவல்துறை 20 தமிழர்களை கொடூரமாக சித்திரவதை செய்து சுட்டுக் கொன்ற வழக்கை, மத்திய புலனாய்வு நிறுவனம் (சி.பி.அய்.) விசாரிக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் செய்த பரிந்துரைக்கு ஆந்திர காவல்துறை அம் மாநில உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கி விட்டது. வழக்கு விசாரணை முடங்கிப் போய் நிற்கும் நிலையில், தடையை நீக்கு வதற்கும், படுகொலை செய்யப்பட்ட தமிழர் களுக்கும், சிறையில் அடைக்கப்பட்டுள்ள 2000 அப்பாவித் தமிழர்களுக்கும் நீதி கிடைப்பதற்கும் தமிழக அரசு, அலட்சியம் காட்டாமல், இந்த வழக்கில், தன்னையும் ஒரு தரப்பினராக இணைத்துக் கொண்டு கடமையாற்ற வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

### கையெழுத்து இயக்கம் தீவிரமாகட்டும்

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு இழைத்த இனப்படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை தமிழகம் உள்ளிட்டு உலகம் முழுதும் வாழும் தமிழர்களால், மனித உரிமை அமைப்புகளால் வலியுறுத் தப்படுகிறது. எதிர்வரும் செப்டம்பர் மாதம், அய்.நா. மனித உரிமை அவையில் இது குறித்த விவாதம் வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அண்மையில் நீண்ட நெடுங்காலமாக போர்க்குற்றத்துக்கு உள்ளாகி வரம் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது நடவடிக்கை எடுக்கக் கோரும் அய்.நா. தீர்மானத்தின்போது இந்தியா வாக் கெடுப்பைப் புறக்கணித்து, பாலஸ்தீனர் களுக்கு துரோகம் செய்துள்ளது. அதே துரோகத்தை ஈழத் தமிழர் பிரச்சினையில் மேற்கொள்ளக் கூடாது என்று இந்திய அரசை வற்புறுத்துகிறோம்.

அய்.நா. சர்வதேச விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழகத்தில் நடக்கும் கையெழுத்து இயக்கங்களை கழகத் தோழர்கள் தீவிரப்படுத்திட இந்த செயற்குழு வலியுறுத்துகிறது.

## மாநில கழகப் பொறுப்பாளர்கள்

திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு கீழ்க்கண்ட மாநிலப் பொறுப்பாளர்களை தர்மபுரியில் நடந்த செயலவைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்களின் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

ஈரோடு இரத்தினசாமி - அமைப்புச் செயலாளர்

திருப்பூர் துரைசாமி - பொருளாளர்

பால். பிரபாகரன் - பரப்புரை செயலாளர்

கோபி. இராம. இளங்கோவன் - வெளியீட்டுச் செயலாளர்

தபசி. குமரன் - தலைமைக் கழகச் செயலாளர்

## பெரியார் பெரும் தொண்டர் சதாசிவம் – நெகிழ்ச்சி உரை

தர்மபுரியில் கழக செயலவையில் முதுபெரும் பெரியார் பெருந்தொண்டர் சதாசிவம், தடியூன்றிய நிலையிலும் தளரா கொள்கை உறுதியோடு பேசியது அனைவரையும் நெகிழச் செய்தது. ஏற்கெனவே பரப்புரைக்கான அனைத் துச் சாதனங்களையும் கொண்ட வாகனம் ஒன்றை கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கி யிருக்கிறார். அந்த வாகனம் மேட்டூர் கழகத்தால் பரப்புரைக்குப் பயன் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. திராவிடர் விடுதலைக் கழகம், பெரியார் கொள்கைகளை பரப்பு வதில் உண்மையாகவும் உறுதியாகவும் செயல்படுகிறது என்று உளம்திறந்து பாராட்டிய அவர், தனது சொத்துக்களை பொதுச் சொத்தாக்க தாம் முடிவு செய்து விட்டதாகவும் திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு அது பயன்படவேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான ஆவணங்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கியுள்ளதாகவும், அவர் அறிவித்த போது அரங்கமே கரவொலியால் அதிர்ந் தது. கழகத்தின் பரப்புரைக்காக மற்றொரு வாகனத்தையும் வழங்கத் தயாராக இருப்பதாக கூறிய அவர், பெரியார் கொள்கை கள் ஆண்டு முழுதும் நடந்து கொண்டே இருக்க வேண்டும் என்று கூறிய போது, இந்த வயதிலும் ஒரு பெரியார் தொண்டரின் கொள்கை உறுதியைக் கண்டு தோழர்கள் நெகிழ்ந்து போனார்கள்.



சதாசிவம் அவர்கள் அறிவிப்பு குறித்து, பின்னர் பேசிய கழகச் செயலவை உறுப்பினர் இரத்தினசாமி, பெரியார் பெருந்தொண்டர் தனது மரணத் துக்குப் பிறகு தனது உடைமைகளை கழகத்துக்கு வழங்குவதாக அறிவித்தாலும் அவர் நீண்ட காலம் வாழ்வார். இளை ஞரைப் போன்ற அவரது கொள்கைத் துடிப்பும் ஆர்வமும் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கும் என்று குறிப்பிட்டார்.

# சமூக நீதிக்கு சாவுமணி அடிக்கும் ‘மனுதர்ம’க் கூட்டம்

# சென்னை அய்.அய்.டி.யால் பழிவாங்கப்பட்ட பழங்குடிப் பெண்

**விடுதலை இராசேந்திரன்**

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

உயர்கல்வியில் 27 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்வதற்கான சட்டத் திருத்தம் வந்தபோது, இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டக் களமாக இந்த உயர்கல்வி நிறுவனங்கள் மாற்றப்பட்டன. அதற்கெல்லாம் நிர்வாகம் தாராளமான சுதந்திரத்தை வழங்கவே செய்தது. அய்.அய்.டி. வளாகத்துக்குள் மட்டுமல்ல; வெளியே வந்தும் போராடினார்கள். 2006, மே 15 அன்று இடஒதுக்கீட்டை எதிர்த்து, சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு, அய்.அய்.டி. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த அய்.அய்.டி. நிர்வாகம் அனுமதித்தது. அப்போதெல்லாம் மாணவர்களுக்கு அரசியல் தேவையா என்ற கேள்வியை எழுப்புவதற்கு அய்.அய்.டி. ‘அறிவு ஜீவிகள்’ தயாராக இல்லை. அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டம் வரும்போது மட்டும்தான் இவர்கள் ஆவேசத்துடன் மாணவர்களிடையே பிளவு ஏற்படுத்தக் கூடாது என்றும், அரசியல் நுழையக் கூடாது என்றும் ‘வேதாந்தம்’ பேசுகிறார்கள். இவை மட்டுமா?

மிகக் குறைந்த எண்ணிக்கையில் அய்.அய்.டி.க்குள் காலடி எடுத்து வைக்கும் தலித் மாணவர்கள், அவமதிப்புக்கும் கேலிக்கும் உள்ளாக்கப்படுவதும், உயர்ஜாதிப் பேராசிரியர்களால் புறக்கணிக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது. இதுவரை 50க்கும் மேற்பட்ட தலித் மாணவர்கள் வளாகத்துக்குள்ளேயும் விடுதிகளிலும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மூன்று ஆண்டுகளுக்குமுன் ரூர்க்கேலா அய்.அய்.டி. வளாகத்தில் மனிஷ்குமார் என்ற ‘சாமார்’ சாதிப் பிரிவில் பிறந்த (செருப்பு தைக்கும் சமூகம்) மாணவர், வளாகத்துக்குள் பிணமாகக் கிடந்தார். அவரது சாவின் ‘மர்மம்’ அப்படியே நீடிக்கிறது. 2014ஆம் ஆண்டு பம்பாய் அய்.அய்.டி. விடுதியில் அனிஹட் அம்ப்ஹோர் என்ற தலித் மாணவர் மர்மமாக இறந்து கிடந்தார். ஜாதி அவமானத்துக்கு உள்ளாகியே தனது மகன் பிணமானார் என்று பெற்றோர்கள் புகார் தந்தார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


2000ஆம் ஆண்டில் சென்னை அய்.அய்.டி. யில் நடந்த ஒரு நிகழ்வை சுட்டிக்காட்ட வேண்டும். பழங்குடி-தலித் இணையர்களுக்குப் பிறந்த சுஜி என்ற பழங்குடி பெண், 12ஆம் வகுப்பில் ஆந்திராவில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்று, மாநில அரசின் விருது பெற்றவர். மாதம் ரூ.17,500 உதவித் தொகை பெற்று, 4 ஆண்டு பொறியியல் படிப்பை முடிக்க முடியும். ஆந்திராவிலே தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் சேர்ந்து படிக்க அழைப்பு விடுத்தும்கூட, அந்தப் பெண், சென்னை அய்.அய்.டி.யிலேயே படிக்க விரும்பினார். (பொதுவாக அய்.அய்.டி.களில் மாணவர்கள் சேர்க்கை தான் அதிகம் இருக்கும். மாணவிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே சேர்க்கப்படுகிறார்கள். இதிலும்கூட மனுதர்மக் கொள்கைதான்) தலித் மாணவர் என்றால் அவர்களுக்காக ஓராண்டு கூடுதல் படிப்பு. அதற்குப் பெயர் ‘தயாரிப்புப் பயிற்சி’. மாநிலத்திலே முதலிடம் பெற்ற மாணவியாக இருந்தாலும்கூட தலித் என்றால் அவருக்கும் தனிப் பயிற்சி கட்டாயம். இயற்பியல் (Physics) மிகச் சிறந்த அறிவு பெற்றவர் சுஜி. தனிப் பயிற்சி வகுப்பில் டாக்டர் எம்.வி. சத்யநாராயணன் என்ற பார்ப்பனப் பேராசிரியர், வகுப்பில் இயற்பியல் தொடர்பாக ஒரு பாடத்தில் தடுமாறிக் கொண்டிருந்தபோது, மாணவி சுஜி, பேராசிரியர் பாடத்தில் செய்த தவறை திருத்தினார். அவ்வளவுதான். தனக்கு அவமானம் நேர்ந்து விட்டதாகக் கருதிய அந்த பேராசிரியர், அந்த மாணவியை தனிப் பயிற்சி தேர்விலேயே தோல்வியைத் தழுவச் செய்தார். அதிர்ச்சியுற்ற மாணவியின் பெற்றோர்கள், அப் போது அய்.அய்.டி. எதிர்ப்புப் போராட்டக்களத்தில் நின்ற பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்னை (விடுதலை இராசேந்திரன்) இல்லத்தில் சந்தித்து, கண்ணீர் விட்டனர். உடனே களத்தில் இறங்கினோம். பெரியார் திராவிடர் கழகம் பல்லாயிரக்கணக்கில் சுவரொட்டிகள் அச்சடித்து, அதன் வழியாக இந்த அநீதியை சென்னை நகரம் முழுதும் மக்களிடையே கொண்டு சென்றது. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தை அணுகி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம். அய்.அய்.டி. வளாக வாயிலிலேயே பொதுக் கூட்டம் நடத்தி, நிர்வாகத்தின் முறை கேடுகளை அம்பலப்படுத்தினோம். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் அய்.அய்.டி.யிடம் விளக்கம் கேட்டது.

தேசிய - தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையத்தின் சார்பில் அதன் உதவி இயக்குனர் ஏ.சத்ய நாராயணன், 8.6.2000 அன்று சென்னை அய்.அய்.டி. இயக்குனர் நடராஜனுக்கு ஒரு தாக்கீது அனுப்பினார். அதில், “தயாரிப்புப் பயிற்சியில் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பழங்குடிப் பிரிவு மாணவி சுஜியின் விடைத்தாளை மறு மதிப்பீடு செய்ய வேண்டும். அல்லது மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். இதை செய்து முடித்த பிறகே அதிகாரபூர்வ தேர்வு முடிவுகளை வெளியிட வேண்டும். அதுவரை இப்போது வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளை நிறுத்தி வைக்க வேண்டும்” என்று அந்த தாக்கீதில் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டது. பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றி இது.

அய்.அய்.டி.க்கு எதிரான போராட்டங்கள் எதையும், தமிழ்நாட்டின் ஆங்கில-தமிழ் நாளேடுகள் இருட்டடித்தன. அய்.அய்.டி. நிர்வாகம் பத்திரிகைகளோடு நெருக்கமான தொடர்புகொண்டு, செய்திகள் வராமல் பார்த்துக் கொண்டது. மறைந்த பேராசிரியர் முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன், ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’யில் இது பற்றி எழுதினார். ‘ஸ்டேட்ஸ்மேன்’, ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேடுகள் மட்டும் துணிந்து சுஜி பழிவாங்கப்பட்ட செய்திகளை வெளியிட்டன. (அதற்காக, அந்த ஏடுகளின் செய்தியாளர்கள் முறையே ஜெயா மேனன் மற்றும் பகவான் சிங் மீதும் அந்த ஏடுகளின் நிர்வாகத்தின் மீதும் அய்.அய்.டி. இயக்குனர் அவதூறு வழக்கு தொடர்ந்தார்) இவ்வளவு போராட்டத்துக்குப் பிறகு அய்.அய்.டி. நிர்வாகம், அதன் வரலாற்றிலேயே முதன் முதலாக தலித் மாணவியை தோல்வி அடையச் செய்த தனது அநீதியான முடிவை திரும்பப் பெற முன் வந்தது. சுஜி, தொடர்ந்து படித்தாலும் அவரால் கல்வியை அங்கே தொடர முடியவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன், அனுப்குமார் எனும் மாணவர், ‘அய்.அய்.டி.’களில் ஜாதியம் குறித்து நேரடி விசாரணை நடத்தி, ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். இதேபோன்று பல்கலைக்கழக நிதிக் குழுவின் முன்னாள் தலைவர் சுகதேவ் தோரட். நேரடி ஆய்வுகளை நடத்தி, 72 சதவீத தலித் மாணவர்கள் புறக்கணிப்புக்கும் அவமானத்துக்கும் உள்ளாகிறார்கள் என்பதை வெளிச்சப்படுத்தினார் (டைம்ஸ் ஆப் இந்தியா, செப்.2014).

சில மாதங்களுக்கு முன், ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஒருவர், மனித வளத்துறைக்கு எழுதிய கடிதத்தை அந்த அமைச்சகம் அனைத்து அய்.அய்.டி.களுக்கும் நகல் எடுத்து அனுப்பி, அதன் பேரில் விளக்கம் கேட்டது. சைவம், அசைவம் சாப்பிடுகிற மாணவர்களை, ஒரே இடத்தில் உணவருந்த அய்.அய்.டி. அனுமதிப்பதாக அந்த ஆர்.எஸ்.எஸ். தலைவரின் கடிதத்தில் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. சென்னை அய்.அய்.டி., உடனே இதற்கு பதில் எழுதியது. சைவ, அசைவ உணவுகள் ஒரே உணவு கூடத்தில் சாப்பிட அனுமதிக்கப்படுவது இல்லை என்பதே அய்.அய்.டி. தந்த பதில். சென்னை அய்.அய்.டி.யின் இணையதளம் உணவு விடுதிகள் பற்றிய தகவல்களைத் தந்துள்ளது. இதன்படி 15 மாணவர் விடுதிகளும் இரண்டு மாணவியர் விடுதிகளும் இவற்றிற்கு 6 உணவுக் கூடங்களும் செயல்படுகின்றன. இதில் அய்ந்து உணவுக் கூடங்கள் (பெண்கள் உணவுக் கூடங்களும் சேர்த்து) தனியார் நடத்துபவை. ஒரு உணவுக் கூடத்தை அய்.அய்.டி. நிர்வாகமே நடத்துகிறது. இது தவிர, பல்வேறு உணவகங்கள் ஒரே இடத்தில் செயல்படும் உணவுக் கூடமும் (Food Court) உண்டு. அனைத்து உணவுக் கூடங்களிலும் அசைவ உணவுகள் முழுமை யாக தடைசெய்யப்பட்டுள்ளன. சைவ உணவு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. சைவத்திலேயே சமண மதத்தினருக்கு மட்டும் தனி சமையல் கூடம். அசைவ உணவை விரும்பும் மாணவர்கள் வெளியிலிருந்து எடுத்து வந்து வளாகத்துக்குள் சாப்பிடலாம் என்ற அனுமதி மட்டும் இருக்கிறது. இதுவும் எந்த நேரத்திலும் பறிக்கப்பட்டுவிடலாம் என்று அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்ட மாணவர்கள் தங்கள் இணையத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.


GOVERNMENT OF INDIA
NATIONAL COMMISSION FOR SCH. CASTES & SCH. TRIBES
STATE OFFICE TAMILNADU
(TAMIL NADU AND PONDICHERRY U.T)
Floor 2, Block 5, Shastri Bhavan, CHENNAI-600 006.
Date: 8.6.2000

To Shri R. Natarajan,
Director,
Indian Institute of Technology,
Chennai.

Sub: Not providing of B.Tech programming to Kum.T.Sujee (ST), who is preparatory course student – regarding.

Sir,

With reference to the above subject and in continuation of my letter dated 8.6.2000 and I am further to state that Kum.T.Sujee, a student in Preparatory course belongs to ST category. As you know, that this is one of the most under-privileged class and we hardly get students for this type of course in this community.

As the B.Tech programming and selection of students is going to be held before 16th of this month, unless the answer papers are re-valued or she is allowed for re-examination, a B.Tech programme may kindly be withheld. We have full faith in the Professors and in their assessment. Normally, there should be provision for revaluation of the answer papers or re-examination in the Preparatory courses, wherever students get failed, but in the instant case, this kind of facility is not provided.

Under the above circumstances, you are requested to withheld the B.Tech Programming till the case of Kum.T.Sujee is settled in I.I.T., under intimation to this office for further assessment of the case.

Yours faithfully,
(A.SATHYANARAYANA)
Assistant Director

Letter no.4/9/2000 Res. Dated .6.2000
Copy to Kum.T.Sujee, D/o T.Surendra Babu, H.No.1, Venkataraman Street, West Mambalam, Chennai 33.

(A.SATHYANARAYANA)
Assistant Director

**தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் அனுப்பிய தாக்கீது**

நவீன தொழில்நுட்பக் கல்வி வளாகம் ஒன்று - அதுவும் வெகு மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறிக் கொண்டு வெகுமக்கள் உணவு முறைக்கு தடை போடுகிறது. இவர்கள் படித்த உடனேயே சைவ-அசைவ உணவு வேறுபாடுகள் ஏதுமற்ற - வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகக் காத்துக் கிடப்பவர்கள். அத்தகைய வளாகத்துக்குள்ளேயே ‘அசைவ’ உணவு வெறுப்புக்கும் தடைக்கும் உள்ளாக்கப்படுகிறது. உழைக்கும் மக்களின் உணவுக் கலாச்சாரமே இங்கு அவமதிக்கப்படுகிறது. இதற்குப் பெயர் கல்வி வளாகமா அல்லது சங்கர மடமா? என்று கேட்க வேண்டியிருக்கிறது.

மோடி ஆட்சிக்கு வந்தப் பிறகு, ஒவ்வொரு துறையின் பெயர் பலகையும் சமஸ்கிருதமாக்கப்பட்ட இந்தி மொழிகளிலேயே மாற்றப்பட்டுள்ளன. இந்தி தெரிந்த மாணவர்களால்கூட இதைப் படிக்க இயலவில்லை என்று தொலைக்காட்சி விவாதங்களில் அய்.அய்.டி. மாணவர் கூறுகின்றனர். நாடாளுமன்ற தோதலுக்கு முன்பு காங்கிரசின் பொருளாதாரக் கொள்கையை கடுமையாக விமர்சிக்கும் கருத்தரங்குகளை அய்.அய்.டி. நிர்வாகமே ஏற்பாடு செய்தது. குருமூர்த்தி, அரவிந்த் நீலகண்டன் போன்ற ஆர்.எஸ்.எஸ். ஊதுகுழல்களை அய்.அய்.டி. நிர்வாகம் பேச வைத்து, மோடிக்கு மறைமுக ஆதரவைத் திரட்டியது என்ற செய்தியை மாணவர்கள் தொலைக் காட்சி விவாதங்களில் கூறினர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அதன் ‘ஷாகாக்களும்’ அய்.அய்.டி.யில் அனுமதிக்கப்படுவதோடு, ‘அரே ராமா அரே கிருஷ்ணா’ அமைப்பும் அதற்குரிய ‘பூணூல்-குடுமி’ அடையாளங்களோடு வலம் வருகின்றன.

அய்.அய்.டி. தொடங்கியது முதல் இயக்குனர்களாக பி.வி. இந்திரேசன், எல்.எஸ். சிறீநாத், என்.வி.சி. சாமி, ஆர்.நடராஜன், அனந்த் என்று தொடங்கி, பாஸ்கர் இராமமூர்த்தி வரை பார்ப்பனர்கள் மட்டுமே தொடருகின்றனர். இவர்களின் ‘சாம்ராஜ்யத்தில்’ பதவி நியமனங்களில் வெளிப்படைத் தன்மை ஏதும் பின்பற்றாமல், கொல்லைப்புற வழிகளில் ‘அட்ஹாக்’ நியமன முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஏடுகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுவதும் இல்லை. இந்த முறைகேடுகளை எதிர்த்து, ஏராளமான வழக்குகள் உயர்நீதிமன்றங்களில் குவிந்து கிடக்கின்றன.

( 4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 23.07.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தலைவர்-பொதுச்செயலாளர் பங்கேற்கும் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள்

மாவட்டந்தோறும் கீழ்க்கண்ட திட்டப்படி கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் பங்கேற்கும், கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த கழக செயலவை தீர்மானித்தது.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களை மாவட்ட வாரியாக கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், மாவட்டக் கழகக் கூட்டங்கள் வழியாக நேரில் சந்தித்து கழக அமைப்புகளை மேலும் முனைப்பாக நடத்திடவும் அமைப்புகளை மாற்றி அமைக்கவும், கீழ்க்கண்ட சுற்றுப்பயணத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு இரண்டு மாவட்டக் கூட்டங்கள் நடக்கும். முதல் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும், இரண்டாவது கூட்டம் பிற்பகல் 4 மணிக்கும் கீழ்க்கண்ட வரிசையில் தொடங்கும்.

ஜூலை 29 - ஈரோடு (தெற்கு ) - ஈரோடு ( வடக்கு ); ஜூலை 30 - திருப்பூர் - கோவை; ஜூலை 31 - பொள்ளாச்சி - திண்டுக்கல்;

ஆகஸ்டு 5 - சேலம் ( மேற்கு ) - சேலம் ( கிழக்கு ); ஆகஸ்டு 6 - நாமக்கல் - கரூர்; ஆகஸ்டு 7 - பெரம்பலூர் - திருச்சி; ஆகஸ்டு 12 - திருவாரூர் - தஞ்சாவூர்; ஆகஸ்டு 13 - நாகை - கடலூர்; ஆகஸ்டு 14 - விழுப்புரம்- திருவண்ணாமலை; ஆகஸ்டு 18 - புதுக்கோட்டை - சிவகங்கை; ஆகஸ்டு 19 - மதுரை - தேனி; ஆகஸ்டு 20 - விருதுநகர் - தூத்துக்குடி; ஆகஸ்டு 21 - திருநெல்வேலி - கன்னியாகுமரி; ஆகஸ்டு 29 - தருமபுரி - கிருட்டிணகிரி; ஆகஸ்டு 30 - வேலூர் - காஞ்சிபுரம்; ஆகஸ்டு 31 - சென்னை.



செயலவைக் கூட்டத்தின் ஒரு பகுதி

## பெருகி வரும் குடி நோயாளிகளைக் கட்டுப்படுத்த...

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில், ‘மதுக்குடி’ தனிப்பட்ட சிலரின் பழக்கமாக இருந்த நிலை மாறி, இன்று சமூகத்தையே சீர்குலைத்து வருகிறது. மாணவர்களையும் இளைஞர்களையும் போதை அடிமைகளாகவும் குடிநோயாளிகளாகவும் மாற்றி வருவது ஆபத்தான அறிகுறியாகும். மதுக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், விற்பனைக்கு கூடுதலாக இலக்கை நிர்ணயிப்பதும் ஒரு மக்கள் நலன் பேணும் ஆட்சிக்கான செயல் திட்டமாக இருக்க முடியாது.

அதே நேரத்தில் முழுமையாக மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதிலும் பல ஆபத்துகள் இருக்கவே செய்கின்றன. கள்ளச் சாராயம் வர்த்தமாகி, காவல்துறை-கள்ளச் சாராய வியாபாரிகள் இரகசிய கூட்டு உருவாகி, மேலும் பல சமூக-சட்ட ஒழுங்கு நெருக்கடிகளை உருவாக்கிவிடும். போதைக்காக ஆபத்தான இரசாயனங்களைக் குடிப்பது, மனநிலையைப் பாதிப்படையச் செய்யும் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவது போன்ற ஆபத்தான பழக்கங்களுக்கு வழிவகுத்து விடும். எனவே, குடிப்பழக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய செயல் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மது விற்பனைக் கடைகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனை நேரத்தை பாதியளவுக்கு குறைப்பது, குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் மதுக் கடைகளை திறக்காமல் இருப்பது; சிறுவர்களுக்கு மது விற்காமல், கண்டிப்புடன் கண்காணிப்பது போன்ற கட்டுப்பாடுகளை தமிழகஅரசு கொண்டு வரவேண்டும். மதுவின் ஆபத்துகளை விளக்கி, புகை எதிர்ப்புப் பிரச்சாரம்போல் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் தமிழக அரசை வலியுறுத்துகிறது.

**– தர்மபுரி செயலவை தீர்மானம்**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் நாடாளுமன்ற சட்டத்தின் வழியாக உருவாக்கப்பட்ட, இந்த நிறுவனங்கள் பெற்றுள்ள சுயாட்சி உரிமைகள் முறைகேடாகவே பயன்படுத்தப்படுகின்றன. சென்னை அய்.அய்.டி., அதிகாரக் குவியல்களை சட்டப்பூர்வமாக்கி, அதற்கேற்ற திருத்தங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அய்.அய்.டி. சட்டத்தின் 13(5)ஆவது பிரிவு ஒரு பேராசிரியரையோ ஊழியரையோ விளக்கம் ஏதும் கேட்காமலே பதவி நீக்கம் செய்ய முடியும். பிரிவு 12(1) - நியமனங்களுக்கான விளம்பரத்தை வெளியிடாமல், இயக்குனர் பரிந்துரையை ஏற்று நிர்வாகக் குழுவே நியமனம் செய்ய முடியும் என்ற உரிமையை வழங்குகிறது. அதுமட்டுமின்றி தற்போதுள்ள சட்டங்களையே மாற்றியமைக்கவும், உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், இயக்குனருக்கு அதிகாரம் அளிக்கப்1பட்டுள்ளது. இந்த சட்டத்திருத்தங்களுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற சட்ட நடைமுறை பின்பற்றப்படாமல், அனைத்தையும் புறந்தள்ளி, ‘மனுதர்ம’ ஆட்சியை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில், இயக்கங்கள் நடத்திய போராட்டங்களால் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்தின் மீதான தடை நீங்கியிருக்கிறது. ஆனால், அம்பேத்கரும்-பெரியாரும் வலியுறுத்திய ‘சமூகநீதி’ அய்.அய்.டி.க்குள் நுழையுமா? அதற்கு அனுமதிப்பார்களா? மக்கள் வரிப்பணத்தில் பல்லாயிரம் கோடியை விழுங்கி மக்களுக்கே பயன்படாத இருந்த அய்.அய்.டி.களை இழுத்து மூடிவிட்டு இந்தப் பணத்தில் பல நூறு “அய்.டி.அய்.”கள் (சிறு தொழில் பயிற்சி நிறுவனங்கள்) உருவாக்கினாலேயே, அது வெகு மக்கள் வாழ்வில் ஒளியேற்றுவதாக இருக்கும்.

(நிறைவு)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

## வினாக்கள்... விடைகள்...!

- அசைவ உணவுக்கு அனுமதித்து பூஜைகளை தடை செய்யும் அய்.அய்.டி.கள் இந்து மதத்துக்கு எதிராக செயல்படுகின்றன.– **ஆர்.எஸ்.எஸ். குற்றச்சாட்டு**

  அப்ப, அய்.அய்.டி.களை இந்து அறநிலையத் துறை அதிகாரத்துக்குக் கீழே கொண்டுவந்து, ஓர் அவசர சட்டம் போட்டுடுங்க.

- கோயில் பக்தர்களிடம் கட்டணம் வசூல் செய்வதை எதிர்த்து இராம.கோபாலன் போராட்டம். **– செய்தி**

  புரோகிதர்கள் ‘தட்சணை’ வாங்குவதையும் இதுல சேர்த்துக்குங்க...

- பா.ம.க., பா.ஜ.க. கூட்டணிக்கு வர வேண்டும்.– **பா.ஜ.க. தலைவர் தமிழிசை**

  இது என்ன பிரமாதம்! நாளைக்கே அன்புமணிதான் முதல்வர்ன்னு அறிவியுங்கள்; ஓடி வந்துடுவாங்க.

- முஸ்லிம்கள் நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகளில் கட்சிகள், பிற அமைப்புகள் பங்கேற்க ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு. **– செய்தி**

  ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம் பிரிவான ‘ராஷ்டிரிய மஞ்சின்’ நடத்திய நோன்பு திறப்பில் டில்லியில் ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் பங்கேற்றார்களே, அநேகமாக அந்த நிகழ்ச்சியில்தான் இப்படிப் பேசியிருப்பாங்கபோல!

- உப்பிலியப்பன் கோயிலில் உரிய மரியாதை தரவில்லை என்று தரிசனம் செய்யாமல் வெளியேறிய வானமாமலை ஜீயரிடம் அதிகாரிகள் மன்னிப்பு. **– செய்தி**


  ஜீயர்களுக்கு அவமதிப்புன்னா மன்னிப்பு கேட்பீங்க. ‘சூத்திரர்’களுக்கு அவமதிப்புன்னா ‘அய்தீகம்’ என்பீங்க...

- மகாராஷ்டிராவில் நாசிக்கில் கும்பமேளா திருவிழாவுக்கு நோய் தடுப்புத் துறை 8 இலட்சம் ஆணுறைகள் வினியோகம். **– செய்தி**

  முன்பெல்லாம் காலரா ஊசி போடுவாங்க. இப்போ ‘ஆணுறை’ வழங்குறாங்க. பக்தி வளரவில்லை என்று யார் சொன்னது?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 23rd July 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூலை 30, 2015 | புரட்சி 14 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00


## நம்ப வைத்து ஏமாற்றப்பட்ட மேமன்

"1994 ஜூலை மாதம், தனது பெற்றோர், மனைவி மற்றும் 40 நாள் 'கைக்குழந்தை'யோடு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்து, தனக்கும் குண்டுவெடிப்புக்கும் சம்மந்தமில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்காக 'சரண்' அடைந்தவர் தான் யாகூப் மேமன்."

பாபர் மசூதியை இடித்த கையோடு, தொடர்ந்து 3 மாதங்களாக முஸ்லிம்களை கொன்று குவித்துக் கொண்டிருந்த காலக்கட்டத்தில், 12-03-1993 அன்று மும்பையில் நடந்த குண்டுவெடிப்பு குற்றவாளிகள் குறித்து துப்பு கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தது இந்திய அரசு.

தாவூத் இப்ராஹீம் உள்ளிட்ட பலர் மீது, புலனாய்வுத் துறையினரின் பார்வை விழுந்துக் கொண்டிருந்த வேளையில் 'ஆடிட்டர்' யாகூப் மேமன்மூலம் குண்டு வெடிப்புக்கான பணபரிமாற்றம் நிகழ்ந்துள்ளதாககூறி, யாகூப் மேமன் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது. தன் மீதான 'கறை'யை துடைக்கும் பொருட்டு, 1994 ஜூலை மாதம், தனது பெற்றோர், மனைவி மற்றும் 40 நாள் 'கைக் குழந்தை'யோடு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்து, தனக்கும் குண்டுவெடிப்புக்கும் சம்மந்தமில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்காக 'சரண்' அடைந்தவர்தான் யாகூப் மேமன்.

இதுகுறித்து யாகூப் மேமனின் வழக்கறிஞர் 'ஷியாம் கேஸ்வாணி'யின் விரிவான விளக்கம் :

யாகூப் மேமனை 'சரண்' அடையச் செய்து 'தடா' நீதிமன்றத்தில் யாகூப் மேமனுக்காக நான் வாதாடிக் கொண்டிருந்த வேளையில், புலனாய்வுத்துறை உயரதிகாரி ஓ.பி. சத்வால், 'மந்த்ராலயா'வுக்கு எதிரே அமைந்துள்ள அவரது அலுவலகத்துக்கு என்னை அழைத்து, 'யாகூப் மேமனுக்கு ஜாமீன் மனு போடுங்கள்' என்றார். 'சாதாரண வழக்குகளில்கூட நான் முதல் நாளே ஜாமீன் மனு போடுவதில்லை, மிகவும் சீரியசான இந்த வழக்கில் முதல் நாளே ஜாமீன் கிடைத்திடுமா?' என கேள்வி எழுப்பினேன்.

யாகூப் மேமனின் ஒத்துழைப்பு அபாரமானது, 40 ஆண்டுகளாக நமது புலனாய்வு நிறுவனங்கள் சேகரிக்க முடியாத அளவுக்கான, பாகிஸ்தான் குறித்த பல தகவல்களை யாகூப் மேமன் வழங்கியுள்ளார். எனவே அவரது ஜாமீன் மனு மீது எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்பட மாட்டாது என்றார், ஓ.பி. சத்வால். இதனை நம்பி ஜாமீன் மனுவை தாக்கல் செய்தபோது, அதனை 'சிபிஐ' கடுமையாக ஆட்சேபித்து ஜாமீன் கிடைக்காமல் செய்துவிட்டது.

புலனாய்வு அதிகாரி சத்வாலிடம் நான் இதுகுறித்து கேட்டபோது :

கடந்த 12 மணி நேரத்தில் எல்லாம் 'தலைகீழ்' ஆகி விட்டது, மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுகள் மாறி விட்டது என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டு மன்னிப்பும் கேட்டார், சத்வால். இந்திய புலனாய்வு நிறுவனங்களை நம்பி நீ 'மகாத்மா'வாக முயற்சிக்காதே என சரணடைவதற்கு முன்பே யாகூப் மேமனை அவரது சகோதரர் 'டைகர் மேமன்' தடுத்தும்கூட, சரணடைந்தவர்தான் யாகூப் மேமன்.

சரணடைவதற்கு முன்பு, புலனாய்வுத்துறை அதிகாரிகளுடன் செய்யப்பட்ட எல்லா (வாய்வழி) ஒப்பந்தந்தங்களையும் புறந்தள்ளிவிட்டு யாகூப் மேமனை நேபாள நாட்டிலிருந்து கைது செய்ததாகவும், புதுடெல்லி இரயில் நிலையத்திலிருந்து கைது செய்ததாகவும், முன்னுக்குப்பின் முரணான தகவல்களை பரப்பி, கதை கட்டிவிட்டது சிபிஐ.

நீதித்துறையின் மீது நம்பிக்கை வைத்து, புலனாய்வுத் துறை அதிகாரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, 1994 ஜூலையில் சரண் அடைந்து, கடந்த 21 ஆண்டுகளாக ஜெயில்வாசம் அனுபவித்து வந்த நிலையில், இம்மாதம் 30ஆம் தேதி தூக்கில் போடப்படுகிறார் யாகூப் மேமன்.

இதைத்தான் 'நீதித்துறையின் கேலிக்கூத்து' என்கிறார், வழக்கறிஞர் ஷியாம் கேஸ்வாணி.

## தூக்குத் தண்டனையை நீக்குக!



இந்தியாவில் தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் என்று முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி.தாமஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பச்சன்சிங் வழக்கில் உச்சநீதி மன்ற அமர்வு, பெரும்பான்மை அடிப்படையில் தூக்குத் தண்டனைக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

30ஆம் தேதி தூக்கிலிடுவதற்கு பம்பாய் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட யாக்கூப் மேமனுக்கு தேதி குறித்த நிலையில் தூக்குத் தண்டனைக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. இராஜீவ் கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத் தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி. தாமஸ், பதவி ஓய்வுக்குப் பிறகு தூக்குத் தண்டனைக்கு எதிராக கருத்துகளை வலியுறுத்தி வருகிறார். தற்போது யாக்கூப் மேமன் பிரச்சினையில் தூக்குத் தண்டனைக்கு எதிராக தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார். ஒரு நீதிபதி தூக்குத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றம் என்று கருதுவதால் மட்டுமே தூக்குத் தண்டனை விதித்திடக் கூடாது என்று கூறியுள்ள முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி, சமூகப் பார்வையை மய்யமாகக் கருதி செயல்பட வேண்டும். சட்டத்தின் நிர்பந்தம், சூழ்நிலையை மட்டுமே நீதிபதிகள் கருத்தில் கொள்ளக்கூடாது. மக்கள் உணர்வுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டுமே தவிர, நீதிபதிகள் தங்களின் முடிவுகளை மட்டுமே சார்ந்திருக்கக் கூடாது என்றும் நீதிபதி கே.டி. தாமஸ் கூறியுள்ளார்.

யாக்கூப் மேமனுக்கு கருணை அடிப்படையில் மன்னிப்பு வழங்க வேண்டும் என்று இந்த வழக்கு விசாரணையில் முனைப்புடன் செயல்பட்ட இந்திய உளவு நிறுவன ('ரா') அதிகாரி பி. இராமன் வெளியிட்ட கருத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பி. இராமன் கருத்து, இப்போது இணையதளங்களில் இருக்கிறது. நீதிமன்றமே தாமாக முன் வந்து இவரது கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், கே.டி. தாமஸ் கூறியுள்ளார். பம்பாய் குண்டுவெடிப்பு வழக்கில், பல முக்கிய தகவல்களை விசாரணையில் யாகூப் மேமன் தெரிவித்துள்ளதோடு, பாகிஸ்தானுக்கு தொடர்பு இருக்கிறது என்பதற்கான பல முக்கிய தகவல்களையும் கூறியிருக்கிறார். விசாரணை நடத்திய உளவுத் துறை இந்த வழக்கிலிருந்து அவரைக் காப்பாற்ற, உறுதியளித்திருக்கக்கூடும். இந்த நிலையில் தானாக முன்வந்து சரணடைய வந்த ஒருவரை, கையில் சிக்கியவர் என்பதால், தூக்கிலிடக் கூடாது என்று பிரபல வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.டி. எஸ். துள்சி கூறியுள்ளார்.

## தண்டனையைக் குறைக்க கழகம் கோரிக்கை

"யாகூப் மேமனின் மரணதண்டனையை கருணை அடிப்படையில் இரத்து செய்து தண்டனை குறைப்பு வழங்க வேண்டும்" என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

"மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் முதன்மையான குற்றவாளிகள் இருவர் வெளிநாடுகளுக்கு தப்பி சென்று விட்ட நிலையில், குற்றவாளியின் தம்பியான யாகூப் மேமன் தானாக முன் வந்து தன்னை விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டார். அவ்வாறு தன் மீது குற்றம் இல்லை என தானாகவே முன் வந்தவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இப்போது அவர் தூக்கு கயிற்றின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். தற்போது மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கும் யாகூப் மேமனை தூக்கிலிடப் போவதாக அறிவித்திருப்பது ஏற்புடையது அல்ல.

உலகம் முழுவதும் மரணதண்டனைக்கு எதிராக அனைத்து மனித உரிமை ஆர்வலர்களும் குரல் எழுப்பிக் கொண்டுள்ள நிலையிலும், பல நாடுகள் மரணதண்டனையை இரத்து செய்துவிட்ட நிலையிலும் மனித நேயமுள்ள நாகரீக சமுதாயத்தை நோக்கி உலக நாடுகள் சென்று கொண்டிருக்கும் இந்தச்சூழலில் இந்தியாவில் இப்படி ஒரு மரணதண்டனை அறிவிப்பு வந்திருப்பது மிகவும் வருந்ததக்கதாகும்.

ஆகவே இந்த மரணதண்டனையை இரத்து செய்து யாகூப் மேமனுக்கு தண்டனை குறைப்பு வழங்க வேண்டும் என கோருகிறோம்" என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

## பரப்புரைப் பயணம்: கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்!

"எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!
எங்கள் சந்ததிக்கு வேலை வேண்டும்!"

- ஜாதி ஒழிப்புப் பரப்புரைக்கான தேதி-ஊர் வாரியான பயணத் திட்டத்தை தலைமைக் கழகத்துக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தமிழகம் முழுதும் பயணத் திட்டத்துக்கு முன்கூட்டியே சென்னையில் காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகத்தில் அனுமதி பெறுவதற்கு பயணத் திட்டம் தேவைப்படுவதால் தோழர்கள் இப்பணியில் விரைந்து செயலாற்ற கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்,
தபசி. குமரன்
தலைமைக் கழகச் செயலாளர்
பேசி: 9941759641
மின்னஞ்சல் : thapasikumaran@gmail.com

தலையங்கம்

## மனிதனுக்கு கீழோ-மேலோ எந்த ஜாதியும் இல்லை!

*உரிமைக்காக ஜாதி மாநாடுகள் கூட்டுவதை ஆதரித்த பெரியார், ஜாதி பெருமைக்காகக் கூட்டப்படுவதை அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார்.*

“இந்த நாடு பல சாதி, பல வகுப்பார் அடங்கியதாக இருக்கிறது. எப்போது நமது நாட்டில் சாதி வகுப்பு ஏற்பட்டு அதனுள் உயர்வு தாழ்வு அமைக்கப்பட்டுப் போய்விட்டதோ அன்று முதலே தனிச்சாதி மாநாடு கூட வேண்டியது அவசியமேற்பட்டுவிட்டது. ஒவ்வொரு சாதியாரும் தனித்தனியாக மாநாடுகள் நடத்திக் கொண்டிருந்தால் எப்போதுதான் ஒன்று சேருவது என்று பலபேர் குற்றஞ் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சிலர் இத்தகைய மாநாடுகளை வகுப்பு மாநாடுகள் என்று சொல்லி மாநாட்டிற்கு வரமுடியாதென்று மறுக்கவும் பார்த்திருக்கிறேன். இத்தகைய காரணங்களைக் கொண்டு வகுப்பு மாநாடு கூட்டுவோரைக் குறை கூற முடியாது. இத்தகைய மாநாடுகள் கூட்ட வேண்டியது மிகவும் அவசியமாகவே இருக்கிறது. ஒரு வகுப்பார் தாங்கள் தாழ்ந்த நிலைக்குள்ளாக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு வருவதை உணராதிருக்கும் வகையில் ஒருவித ஏற்பாடும் செய்யாமல் தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தாங்களும் மனிதர்கள், தாங்களும் மற்றோருக்குச் சமமானவர்களே, தங்களைத் தாழ்ந்தவர்களெனக் கூறுவது சுயநலக் கூட்டத்தாரின் பொறுக்க முடியாத கொடுஞ்செய்கை என்று உணர்ச்சி ஏற்பட்டுவிட்டால் சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வார்கள். தேவேந்திர குல வேளாளர் என்ற உயர்ந்த பதத்தால் கூறப்படினும், தாழ்த்தப்பட்டுத் தொடுவதற்கு அருகதையற்றுக் கிடப்பதால், சுயமரியாதை உணர்ச்சி வந்துவிட்ட பிறகு சமத்துவத்தை அடைவதற்கே முயற்சி செய்வான். இப்போதிருக்கும் கஷ்டமெல்லாம் தாழ்ந்த சமூகத்தவரென்று எல்லோராலும் இகழப்பட்டு அழுத்தி வைக்கப்பட்டிருப்பதால், இதிலிருந்து எழும்ப வேண்டியது முக்கியமானதாக இருக்கிறது.

பிறர் உங்களைப் பள்ளர், பறையர் என்று சொல்லி நீங்கள் கேவலமானவர்கள் என்று கருதப்பட்டால், அவர்கள் அதைவிடக் கேவலமானவர்கள் என்றே சொல்லுவேன். அவ்வாறு உங்களைக் கேவலமாகக் கருதுகிறவர்களுக்குள்ள பெயரைவிட உங்கள் பெயர் கேவலமானதல்ல. யாரேனும் என்னைப் பள்ளன், பறையன் என்று அழைப்பது மேலா, சூத்திரன் என்று அழைப்பது மேலா என்று கேட்டால், சூத்திரன் என்று அழைக்கவே கூடாது; பள்ளர், பறையர் என்று அழைப்பதுதான் மேல் என்று சொல்லுவேன். ஏனென்றால், சூத்திரன் என்னும் பெயர் அந்தப் பெயர்களைவிட மிக மிக இழிந்ததாகும். ஜனத்தொகை எடுக்கும்போது நான் பள்ளர், பறையர் என்று தான் சொல்லுவேன். பள்ளர், பறையர் என்பவர்களாகிலும் சொந்தத் தாய் தகப்பன்மார்களுக்குப் பிறந்தவர்களாகிறார்கள். ஆனால். சூத்திரர் என்பவர்களோ, பார்ப்பானின் வைப்பாட்டி மக்கள்என்று அழைக்கப்பட்டுப் போய்விட்டது. இப்பொழுதுள்ள இராஜாங்கத் துறையின் வித்தியாசத்தால் வேண்டுமானால் அப்படி இல்லை என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால், பழைய இராமராஜ்யம் வருமானால் அப்படித்தானிருந்தாக வேண்டும்.

நீங்கள் உங்களை வேளாளர்கள் என்று அழைத்துக் கொள்ள ஆசைப்படுகிறீர்கள். வன்னியர்கள் தங்களை க்ஷத்திரியர்கள் என அழைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். செட்டியார்கள் வைசியர்களென அழைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். இதெல்லாம் எதற்காக? நீங்களே உங்களைத் தாழ்மைப்படுத்திக் கொள்வதற்கொப்பாகிறதே என்றால், ‘என்ன அய்யா! இப்பொழுது தான் எங்கள் பெற்றோர்களைத் திருத்திக் கொண்டிருக்கிறோம். அதற்குள் இப்படிக் கீழே தள்ளுகிறீர்களே?’ என்கின்றனர். நாடார் பெருமக்களும் ஆரியர் வழியைப் பின்பற்றுவது போன்று குறுக்கே பூணூல் போட்டிருந்தனர். அவைகளை எல்லாம் அறுத்தெறியுங்கள் என்றபோது ஓர் அன்பர், ஏனய்யா, இவ்வளவு காலம் போராடி இந்த பூணூல் போடுவதற்கு இவ்வளவு காலமாயிற்று. அந்த நூலில் அழுக்கு ஒட்டுவதற்குமுன் அறுத்தெறியச் சொல்லுகிறீர்களே என்று வருந்தினார். இவ்வாறு க்ஷத்திரியர் என்றும், வைசியரென்றும், வேளாளர் என்றும் அழைத்துக் கொள்ள ஆசைப்படுவதும், பூணூல் முதலியன போட்டுக்கொள்ள ஆசைப்படுவதும் தன் சாதியைத் தவிர தனக்கு மேல் பெரிய சாதி இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு, தாங்கள் அந்தச் சாதிக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதையும் ஒப்புக் கொண்டவர்களாகிறார்கள். எல்லோருக்கும் உயர்ந்த சாதியான் என்று கூறிக் கொள்ளுகிறவன், க்ஷத்திரியரை வைசியனுக்கு மேல் உயர்ந்தவனென்றும், வைசியனைச் சூத்திரனுக்கு மேலானவனென்றும் பாகுபடுத்திக் கூறினாலும் அவன் இந்த இரண்டு பேரையும் ஒரே கண்ணுடன் பார்த்து, ஒரே முறையில்தான் நடத்துகிறான். ஆகவே, இந்த மூன்று பேர்வழிகளுக்குள் அவனுக்கு யாதொரு வித்தியாசமுமில்லை. இரயில்வே முதலிய சிற்றுண்டி சாலைகளுக்கும், சாப்பாட்டு விடுதிகளுக்கும் சென்று பார்ப்போர் இதை உணருவதில்லையா? அங்கே சாப்பிடுவதற்கு இரண்டு பாகங்கள்தானிருக்கின்றன. ஒன்றில் பார்ப்பான் சாப்பிடுவதற்கும், மற்றொன்றில் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய எல்லோரும் சாப்பிடுவதற்குமே இருக்கின்றன. ஆகவே, இதில் என்ன வித்தியாசத்தைக் காண்கிறீர்கள்? உண்மையில் அவன் மட்டும் உயர்ந்தவனாகவும், மற்ற மூன்று பேரும் அவனுக்கு ஒரே முறையில் தாழ்ந்திருப்பதாகவேதானே அவ்வறைகள் உணர்த்துகின்றன? பிறகு எதற்காக நீங்கள், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் வேளாளன் என்று உயர்வு தாழ்வு பேசுகிறீர்கள்? இதெல்லாம் உங்களை ஒற்றுமையில்லாதிருக்கச் செய்யும் சூழ்ச்சி முறை என்பதை நீங்கள் உணருகிறீர்களில்லையா? ஆகையால் சாதிப் பிரிவினையால் ஒரே ஒரு கூட்டத்திற்குத்தான் சவுகரியம்; மற்றையோருக்கு ஒற்றுமைக் குறைவு ஏற்படுவதுதான் இலாபம்.

ஆகையால், முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத்தன்மை என்பது இந்த நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமா, வேண்டமா என்ற முடிவு தெரிந்துவிடவேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழோ, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்கு மேல், சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ளவைகளை அடியோடு அழிக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாமல், உயர்வு தாழ்வைப் போக்கி விடலாமென்று கருதுதல் நுனி மரத்தில் நின்று கொண்டு அடிமரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள் செய்கையையே ஒக்கும்.

**‘திராவிடன்’ 5.10.1929**

### பேராசிரியர் கல்விமணி வலியுறுத்தல்

## சிறப்பு கல்வி மண்டலம் அமைக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிடவேண்டும்




நாட்டில் சிறப்பு கல்வி மண்டலம் அமைக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இதனை உடனடியாக கைவிட வேண்டும் என மன்னார்குடியில் நடந்த கல்வி வளர்ச்சி நாள் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டத்தின் சார்பில் காமராஜர் பிறந்தநாள் விழா கல்வி புரட்சி நாள் கருத்தரங்கமாக நடைபெற்றது.

கருத்தரங்கில் காமராஜர் படத்தை, முன்னாள் நகர்மன்ற தலைவர் சிவாராஜமாணிக்கம் திறந்து வைத்து பேசினார். அதுபோல் பெரியார் படத்தை, தஞ்சை தமிழ்பல்கலைக்கழக பேராசிரியர் வெற்றி செல்வன், அம்பேத்கர் படத்தை, திருவாரூர் கவுன்சிலர் வரதராஜன் ஆகியோர் திறந்து வைத்து பேசினார்கள். தொடர்ந்து, ‘தமிழக பள்ளி-கல்வி பிரச்சனைகளும் தீர்வுகளும்’ என்ற தலைப்பில் பேராசிரியர் பிரபா கல்விமணி பேசினார்.

அப்போது, “மத்திய மாநில அரசுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்யவேண்டும் அனைத்திந்திய அளவில் நடைபெறும் அனைத்து நுழைவுத்தேர்வுகளிலும், தமிழிலும் கேள்வித்தாள் அளிக்கப்படவேண்டும். மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயக்கும் ஐஐடி மற்றும் எய்ம்ஸ் போன்ற கல்வி நிறுவனங்களுக்கு அகில இந்திய அளவிற்கு நுழைவுத்தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த நுழைவு தேர்வுகளில் கேள்வித்தாள்கள் அனைத்தும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே உள்ளன. தமிழில் கேள்வித்தாள்கள் வழங்கப்படாததால் தமிழகத்தில் 12ம் வகுப்பு படித்து வரும் மாணவர்களில் மேற்படி தேர்வை 85 சதவீதம் பேர் எழுத முடியாத நிலைக்கு ஆளாகின்றார்கள். தமிழ் வழியில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கு தமிழில் கேள்வித்தாள் வழங்க மறுப்பது பெரும் சமூக அநீதியாகும் மேலும் மருத்துவம் பொறியியல் போன்ற தொழில் கல்வியிலும் அனைத்து பட்ட படிப்புகளிலும், கிராமப்புற ஏழை, எளிய அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீட்டை அரசு நடைமுறைப்படுத்தவேண்டும். உயர்கல்வித்துறையை சீரழிக்கும் நோக்கத்தோடு மத்திய அரசு சிறப்பு கல்வி மண்டலம் என்கின்ற ஒரு மிகப்பெரிய கல்வியை சீரழிக்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. இதனை உடனடியாக மத்திய அரசு கைவிடவேண்டும். அதுபோல் தமிழக அரசும் தாய் தமிழ் வழி தொடக்கப்பள்ளிகளுக்குநிதியுதவி அளித்து உதவ வேண்டும்.

6ஆம் வகுப்பிலிருந்து படிப்படியாக முப்பருவத்தேர்வு முறையை அறிமுகம் செய்து வந்தது வரவேற்கத்தக்கது. அதையொட்டி கடந்தாண்டு 10ஆம் வகுப்புக்கும் முப்பருவ முறையை அறிமுகம் செய்து 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வை இரத்துசெய்திருக்க வேண்டும் ஆனால் அதனை செய்யவில்லை. பொதுத்தேர்வு நடத்தினால்தான் மதிப்பெண்களை விளம்பரப் படுத்தி பணம் வசூலிக்க முடியும் என்ற தனியார் பள்ளிகளின் அழுத்தமே இதற்கு காரணம். அதேபோல அரசு பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பாடத்தை 11ஆம் வகுப்பிலிருந்தே நடத்தி அதிக மதிப்பெண்களை பெறவைத்து அரசு பள்ளி மாணவர்கள் பெறவேண்டிய மருத்துவ, பொறியியல் மற்றும் உயர் படிப்பு இடங்களை தனியார் பள்ளி மாணவர்கள் பெற்று விடுகின்றனர். அரசு பள்ளியை நம்பி படித்த ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இது எதனால் வருகின்றது என்று பார்த்தால் மேல்நிலை கல்வி பாடத் திட்டத்தில் தேர்வு முறையில் சரியான அணுகுமுறை கடைபிடிக்கப்படவில்லை. 11ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு என்று நாம் அதனை அழைத்து பாகுபடுத்தி காட்டப்படுகின்றது. அதனை மேல்நிலை முதலாமாண்டு மேல்நிலை இரண்டாமாண்டு என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டு ஆண்டுகளிலும் உள்ள பாடத்திட்டமானது தொடர்ச்சியாகத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இதனை மறைத்து மிகப்பெரிய கல்வி மோசடி தமிழகத்தில் நடக்கின்றது. அண்டை மாநிலமான ஆந்திராவில் இரண்டாண்டுகளும் பொதுத்தேர்வு நடத்தபடுகின்றது. மற்ற கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுப்பதைவிட 11ஆம் வகுப்புக்கும் பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்பதை அனைவரும் வலியுறுத்த வேண்டும்” என்றார்.

நிகழ்ச்சியை திராவிடர் விடுதலைக்கழக மாவட்ட செயலாளர் காளிதாஸ் ஒருங்கிணைத்தார். தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர்

( 4 ஆம் பக்கம்)

# பெரியார் கேட்ட கேள்வி நீடிக்கிறது

*நீதித் துறை ஜாதிய மயமாகியிருக்கிறது என்று பெரியார் நீதிமன்றத்திலே வாக்குமூலம் அளித்தார். ‘ஒரு குலத்துக்கு ஒரு நீதி’யாக செயல்படும் நீதித் துறையால் தண்டிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டவர்களில் தலித், ஆதிவாசிகளே அதிகம் என்பதை விளக்கி, ‘தமிழ்’ இந்து நாளேட்டில் 23.7.2015 அன்று சமஸ் எழுதிய கட்டுரை இது.*


ஆட்சியும் ஆதிக்கமும் பெரிதும் மேல் சாதிக்குச் சொந்தம். அவர்களிடம் அல்லலும் அவதியும் படுவது கீழ் சாதிக்குச் சொந்தம். இது சட்டப்படி, சாஸ்திரப் படி, கடவுள் சிருஷ்டியின்படி இந்த மடநாட்டில் இருந்துவருகிறது. இதை மாற்றுவதுதான் எங்கள் முயற்சி. இதற்கு நாங்கள் தக்க விலை கொடுத்தாக வேண்டும். ஆகையால், கனம் கோர்ட்டார் இஷ்டப்பட்ட விலை போடுங்கள்! - 1957இல் வரலாற்றுப் புகழ்பெற்ற திருச்சி வழக்கில், நீதிமன்றத்தில் எதிரொலித்த பெரியாரின் வார்த்தைகள் இவை.

‘இந்தியாவில் சாதியம் உறைந்திருக்கும் பீடங்கள்’ என்று பெரியார் வீசிய அம்புகளும் ஈட்டிகளும் நம்முடைய நீதி அமைப்புகளையும் சேர்த்தே குறி பார்த்தன. நீதி அமைப்புகளைச் சாதிய அளவுகோல் முன் நிறுத்துவது எந்த அளவுக்குச் சரியானது என்று சிலர் கேள்வி எழுப்பக்கூடும். பெரியார் காலத்துக்கு 42 ஆண்டுகளுக்குப் பின் இதற்கான பதில் நீதி அமைப்புகளிடமிருந்தே வந்திருக்கிறது.

டெல்லியின் தேசிய சட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் சமீபத்தில் ஓர் ஆய்வை மேற்கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் மரண தண்டனையை ஒழிப்பது தொடர்பாகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்தாய்வில் ஈடுபட்டிருக்கும் தேசியச் சட்ட ஆணையத்தின் உதவியுடன், அந்தக் கலந்தாய்வின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஆய்வு இது. நாடு முழுவதும் கடந்த 15 ஆண்டுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 373 கைதிகள், அவர்களுடைய வழக்குகள், அவர்களுடைய சமூகப் பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றைத் தொகுத்து மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்டிருக்கின்றன. கூடவே, கடந்த 2014 நவம்பரில், தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தால் வெளியிடப்பட்ட இந்தியச் சிறைவாசிகள் தரவுகளையும் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்புத் தரவுகளையும் பொருத்திப்பார்த்தால், இந்நாட்டில் நீதி படும்பாடும் நம் சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் உறைந்திருக்கும் பாரபட்சமும் நமக்குள் ஒளிந்திருக்கும் கள்ளத்தனமும் ஒருசேர அம்பலமாகின்றன.

1. நாடு முழுவதும் சிறைகளில் உள்ள 4.2 இலட்சம் சிறைவாசிகளில் 53% பேர் தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் முஸ்லிம்கள் என்கிறது தேசியக் குற்ற ஆவணக் காப்பகம். நாட்டிலேயே அதிகபட்சமாக ராஜஸ்தான் சிறைவாசிகளில் 45.8% பேர் தலித்துகள், ஆதிவாசிகள். குஜராத் சிறைவாசிகளில் 43.6% பேர் தலித்துகள், ஆதிவாசிகள்.
2. மரண தண்டனைக் கைதிகள் 373 பேரில் நால்வரில் மூவர் பிற்படுத்தப்பட்டவர்கள், சிறுபான்மையினர். பயங்கரவாதக் குற்றங்களுக்காகத் தண்டனைக்குள்ளாக்கப்பட்டவர்களில் 93.5% பேர் தலித்துகள், சிறுபான்மையினர். மரண தண்டனைக் கைதிகளில் 75% பேர் பொருளாதாரரீதியாக மிக மோசமான நிலையில் இருப்பவர்கள் என்கிறது டெல்லி தேசியச் சட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வறிக்கை.

இந்தத் தரவுகள் சொல்லும் மறைமுகப் பொருள் என்ன? “ஆம், நம்முடைய நீதித் துறையில் பாகுபாடு இருக்கத்தான் செய்கிறது” என்கிறார் நாட்டின் முன்னணி வழக்கறிஞர்களில் ஒருவரான பிரஷாந்த் பூஷண். “குற்றஞ்சாட்டப்படுவர்களில் ஒரு சதவிகிதத்தினரால்தான் நல்ல வழக்கறிஞர்களை நியமித்துக்கொள்ள முடிகிறது” என்கிறார் பூஷண். இது முதலாவது பாகுபாடு. பொருளாதாரரீதியிலான பாகுபாடு. பலரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. இரண்டாவது பாகுபாடு ஒன்றும் உண்டு. இன அடிப்படையிலான பாகுபாடு. பலர் பேசத் தயங்கக்கூடியது. “பொருளாதாரப் பாகுபாடும் நிறப் பாகுபாடும் அமெரிக்க நீதித் துறையைச் சீரழிப்பதாகச் சொல்வார்கள். இந்தியாவுக்கும் அது பொருந்தும். ஒரே வேறுபாடு, அமெரிக்க நீதித் துறையில் நிறப் பாகுபாடு உட்கார்ந்திருக்கும் இடத்தில் இங்கு சாதியப் பாகுபாடு உட்கார்ந்திருக்கிறது” என்கிறார் முன்னாள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சந்துரு.



ஆதிக்க வலுவும் பொருளாதார பலமும் இந்த நீதி அமைப்பின் முன் தங்களை எப்படி வெற்றிகரமாக முன்னிறுத்திக் கொள்கின்றன என்பதை மட்டும் அல்ல; ஒடுக்கப்பட்டவர்கள் இந்த நீதி அமைப்புடன் உரையாட முடியாமல் செய்து அவர்களை மேலும் விளிம்புநிலையை நோக்கி எப்படித் தள்ளுகின்றன என்பதையும் புரிந்துகொள்ள இந்தத் தரவுகள் உதவுகின்றன.

இன்றைய இந்தியப் பொதுச் சமூகத்தின் முன் தலித்துகள், ஆதிவாசிகள், முஸ்லிம்கள் மூவரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான் பார்க்கப்படுகிறார்கள். ஒரு வீட்டை வாடகைக்கு எடுப்பதில் இருக்கும் சவாலில் தொடங்கி, சகல இடங்களிலும் அவர்கள் எதிர்கொள்ளும் சந்தேக, அவமானப் பார்வைகள் வரை எதிலும் பெரிய வேறுபாடு ஏதும் இல்லை. மூவரையும் ஒரே தளத்தில் அடைக்க பொருளாதாரம் கருவியாகிறது என்றால், அந்தப் பொருளாதார நிலையை நோக்கி அவர்களைத் தள்ள அவர்களுடைய பிறப்பும் நம்முடைய சமூக அமைப்பும் போதுமானவையாக இருக்கின்றன.

டெல்லி தேசியச் சட்டப் பல்கலைக்கழக மாணவர்களிடம் பேசிய பல மரண தண்டனைக் கைதிகள், ‘பெரும்பாலான விசாரணைகளில் பங்கேற்கத் தாங்கள் அனுமதிக்கப்படுவதே இல்லை’ என்று தெரிவித்திருக்கின்றனர். ‘அப்படியே விசாரணைகளில் பங்கெடுத்தாலும், அங்கு நடக்கும் விசாரணைகள் புரிவதில்லை’ என்று தெரிவித்திருக்கின்றனர். ‘ஒரு புரியாத அமைப்புக்குள் சிக்கி, சிறைக்குள் சிதைந்து, மரண தண்டனைக் கைதியாக்கப்பட்டு, எப்போது சாவு சூழுமோ என்ற உயிர் வதைக்குள் சிக்கி ஒவ்வொரு நாளும் மருகுவதை விடவும் எவ்வளவு சீக்கிரம் எங்களைத் தூக்கில் போட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போட்டு விடுங்கள்’ என்று மன்றாடியிருக்கின்றனர்.

எல்லா அநீதிகளையும் அழித்தொழிக்கும் இடமாகவே நீதி அமைப்புகளைப் பார்க்கிறோம். அங்கும் இதே கதைதான் தொடரும் என்றால், இந்த ஜனநாயகத்தை மெச்சிக்கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

அன்றைக்கு பெரியார் கேட்டார்: “உண்மையில் விவாதத்துக்கு இடமில்லாமல், ஒரு நீதிபதி என்பவர் தவறானது என்று சொல்லும்படியான தன்மையில் நடந்துகொண்டால், தீர்ப்பு அளித்தால் அதற்குப் பரிகாரம் தேட வேண்டுமானால், பொதுமக்களுக்கு வழி என்ன இருக்கிறது? அப்பீலுக்கே போய்த் தீர வேண்டுமானால், அது எல்லோருக்கும் சாத்தியப்படும் காரியமாகுமா? எல்லோருக்கும் எல்லாக் காரியங்களிலும் அப்பீலில் இடமிருக்குமா? அரசாங்கத்தில் அரசர் ராஷ்டிரபதி பிரதமர் முதலமைச்சர் முதலியவர்களுடைய போக்குகளைப் பற்றியும் உத்தரவுகளைப் பற்றியும் பொதுக் கண்டனங்களும் கிளர்ச்சிகளும் செய்ய தாராளமாக இடமும் சட்ட அனுமதியும் இருக்கும்போது, இந்த ஜட்ஜுகளைப் பொறுத்து மாத்திரம் அம்மாதிரியான இடமும் அனுமதியும் கிடையாது என்றால், மக்களுக்குச் சுதந்திரம் எங்கே இருக்கிறது? பரிகாரம் எப்படித் தேடுவது? பொதுஜனங்களின் உணர்ச்சிகளை எப்படிக் காட்டுவது?”

கேள்வி கேட்ட பெரியார் இப்போது இல்லை. ஆனால், கேள்வி இன்னமும் அப்படியே நிற்கிறது. இந்திய நீதித்துறை மாற்றத்துக்குத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்!

## கிருட்டிணகிரியில் கழகத் தலைவர் பங்கேற்ற காமராசர் விழா

கிருஷ்ணகிரி, நுகர்வோர் சேவை மையம் நடத்திய கல்விக்கண் தந்த கர்மவீரர் காமராசரின் **113** வது பிறந்த நாள் விழா கல்வி விழிப்புணர்வு விழாவாக நடைபெற்றது.

இவ்விழாவை ஒட்டி கிருஷ்ணகிரியில் **21.07.2015** செவ்வாய் மாலை **6** மணியளவில் கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு நுகர்வோர் பொதுச் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் ராஜேஷ் ஜெயராமன் தலைமை தாங்கினார்.




இந்த விழா மற்றும் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உரையில் காமராசருக்கும் பெரியாருக்குமான உறவு, கல்விப் பெருக்கத்துக்கு ஆற்றிய பணிகள், பசுவதை தடை குறித்து அவரது எதிர்ப்பால் அவர்மீது இந்து மதவெறி அமைப்பினரின் தாக்குதல் ஆகியவற்றை விளக்கிப் பேசினார்.

விழாவின் தொடக்கத்தில் புதுவை அதிர்வுக் கலைகுழுவின் பறையிசை, கலைநிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் பல்வேறு அரசியல் அமைப்புச் சேர்ந்தவர்களும், இலக்கிய அமைப்பினரும் உரையாற்றினர். முன்னதாக கிருஷ்ணகிரி கொத்தபேட்டா நகராட்சி குப்பை கிடங்கை வேறு இடத்திற்கு மாற்ற கோருவதை விளக்கியும், மரணதண்டனை வழக்கின் போக்கைக் குறித்தும், பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது.

**திருத்தம்:** *16.7.2015 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வெளிவந்த ‘பெண்களும் நீதிமன்றங்களும்’ தலையங்கத்தில், ஆண்களின் அதிகாரத்துக்குட்பட்டவர்களாக அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற சிந்தனையை இனியும் தூக்கி சுமக்கக் கூடாது; அதிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்று திருத்திப்படிக்கக் கோருகிறோம். ‘பெண்கள் என்ற வார்த்தைக்கு பதிலாக ஆண்கள்’ என்று தவறாக வெளி வந்துள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்)*

DATE OF PUBLICATION 30.07.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## 75ஆம் பிறந்த நாளில் கழகம் வழங்கியது

# பெரியார் பெருந்தொண்டர் சதாசிவத்துக்கு "பெரியாரியல் பேரொளி விருது"





பெரியாரியல் கொள்கைகளை கிராமம் கிராமமாக சென்று பரப்பும் பணியை தொடர்ந்து பல ஆண்டுகளாக செய்துவருபவரும், ஏராளமான பெரியாரியல் பரப்புரையாளர்களை உருவாக்கியவருமான தோழர் பட்டுக்கோட்டை சதாசிவம் (வளவன்) அவர்களுக்கு 24-7-2015ஆம் நாள் 75ஆம் ஆண்டு பிறந்தநாள் ஆகும். பேச்சின்போக்கில் இதை அறிந்துகொண்ட மேட்டூர் நகரக் கழகத் தோழர்கள் அவருக்கு பிறந்தநாள் விழா எடுக்க முடிவுசெய்து கழகத் தலைமையிடம் அனுமதி கோரினர். கழகத் தலைவரும், கழகப் பொதுச்செயலாளரும் கலந்துபேசி அவரது நீண்டகால பெரியாரியல் பரப்புரைப் பணிகளைக் கருத்தில் கொண்டு அவ்விழாவை நடத்த அனுமதித்ததோடு, அவருக்கு "பெரியாரியல் பேரொளி" என்ற விருதினை அளிக்கவும் ஆலோசனைக் கூறினர்.

அதையடுத்து 24-7-2015 வெள்ளியன்று மேட்டூர் மகாலட்சுமி திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அவ்விழாவை எடுத்தனர். அது விழா என்ற அளவோடு முடிந்துவிடாமல் அதை ஒரு பயிலரங்கமாகவும் நடத்தினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி ' இட ஒதுக்கீட்டின் நியாயங்கள்' என்ற தலைப்பில் ஒரு மணி நேரம் கருத்துரை வழங்கினார். அதன் தொடர்ச்சியாக பட்டுக்கோட்டை சதாசிவம் அவர்களுக்கு " பெரியாரியல் பேரொளி " என்ற விருது வழங்கப்பட்டது.. மூத்த குடும்ப உறுப்பினருக்கு கொள்கை மக்களும், பேரக்குழந்தைகளும் புத்தாடைகளை வழங்கி மகிழ்ந்தனர். ஒரு சட்டைக்கான துணி பாராட்டு ஆடையாக அணிவிக்கப்பட்டது.. அவரது பெரியாரியல் பணிகள் பற்றி சேலம் தோழர் சரவணன் சிறிது நேரம் எடுத்து விளக்கினார். அதைத் தொடர்ந்து தோழர்களின் வேண்டுகோளின்படி "நான் கடந்து வந்த பாதை" என்ற தலைப்பில் விழா நாயகர் சதாசிவம் 45 நிமிடங்கள் உரையாற்றினார்.

விழாவில் அனைவரையும் வரவேற்று மேட்டூர் நகரக் கழகச் செயலாளர் சுரேஷ்குமார் வரவேற்றார். சேலம் மேற்கு மாவட்ட செயலாளஎ சி. கோவிந்தராசு, சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க. சக்திவேல், செயலாளர் டேவிட், தலைமைக்குழு உறுப்பினர் அ. சக்திவேல், நங்கவள்ளி அன்பு, சேலம் வீரமணி, முல்லை வேந்தன், மேட்டூர், ஆர்.எஸ்., நங்கவள்ளி, கொளத்தூர் பகுதி பொறுப்பாளர்களும் தோழர்களும் வந்திருந்தனர்.மேட்டுர் நகரக் கழகத் தலைவர் செ. மார்ட்டின் அனைவருக்கும் நன்றி கூறினார். விழாவின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாட்டுக்கறி பிரியாணி விருந்து அளிக்கப்பட்டது.

## பெரியார் ஈ.வெ.ராமசாமி—நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்தும் சுயமரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி

40 வாரங்களில் ஞாயிற்றுக் கிழமை களில் மட்டும் 6 மணி நேரம் முழு நாள் பயிற்சி நடக்கும்

**பயிற்சிக்கான பாடங்கள்:**

**பகுதி 1 :** பவுத்தம், வள்ளுவம், மார்க்சியம், லெனினியம், காந்தியம், பெரியாரியம், அம்பேத்கரியம், பாவேந்தம் முதலான சுயமரியாதை வாழ்வியல் பாடங்கள்.

**பகுதி 2 :** தமிழ் மொழித் திறன், மெய்ப்புத் திருத்தல், மொழி பெயர்ப்புத் திறன், கணினி அறிமுகப் பயிற்சி.

விண்ணப்பங்கள் அனுப்பக் கடைசி நாள் : 20.8.2015

வகுப்புகள் தொடக்கம் : 20.9.2015

மொத்தப் பயிற்சிக் கட்டணம் : ரூ.1,500 மட்டுமே.

விண்ணப்பக் கட்டணம் : ரூ.25

தொடர்புக்கு : 044-26246039 / பேசி : 9444804980 / 7299441712 / 9715233827

(வி.ம்)

## வினாக்கள்... விடைகள்...!

- 'வாஸ்து' நம்பிக்கையால் டெல்லியில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் 70 எம்.பி.க்கள் குடியேறவில்லை – **செய்தி**

  விடாதீங்க... டெல்லிக்குப் போகும் விமானத்துலயும் வாஸ்துப்படி இருக்கை கேளுங்க! இல்லாவிடில் டில்லிக்கும் போகாதீங்க!

- தில்லை நடராசன் கோபுரத்தை மறைத்து கட்டிடம் கட்டுகிறார்கள், தீட்சதர்கள். – **செய்தி**

  கோபுரத்தை இடிச்சுட்டு 'பிளாட்' போட்டுக்கூட விப்பாங்க; அதுக்கெல்லாம் உச்சநீதிமன்றத்துல சு.சாமி அதிகாரம் வாங்கிக் கொடுத்திருக்காரு!

- கோயில்களில் சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வது ஆகமத்துக்கு எதிரானது. – **இந்து அமைப்புகள் எதிர்ப்பு**

  சூரிய பகவானையும் 'சூத்திரர்' பட்டியலில் சேர்த்துட்டேளா?

- திருப்பதி தேவஸ்தானம் நிர்வாக ரீதியாக எடுக்கும் முடிவுகளால் 'புரோக்கர்' களுக்குத் தான் பயன். – **'தினமலர்'**

  விடுங்கய்யா... ஏழுமலையான் புரோக்கர்களான அர்ச்சகர்கள் மட்டும்தான் காலம்காலமாய் பயனடைய வேண்டுமா என்ன?

- அமைச்சர் செந்தில் பாலாஜி பதவி நீக்கம். – **செய்தி**

  மண்சோறு உண்டார்; மண்ணில் உருண்டார்; 'மந்திரி' யும் இழந்தார்!

- கடவுள் பெயர்களை வணிக நிறுவனங்கள் வர்த்தகத்துக்குப் பயன்படுத்த தடை இல்லை. – **டெல்லி உயர்நீதிமன்றம்**

  வர்த்தகத்துக்குப் பயன்படுத்தலாம்; வர்த்தக மோசடிக்கும் பயன்படுத்தலாம்; கடவுள் வந்து கேட்கவா போறாரு!

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க செயலாளர் கலைச்செல்வன் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் முரளி சங்கர் நன்றி கூறினார். அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட செயலாளர் சேரன்குளம் செந்தில், ஆசிரியர் தமிழ்மணி உட்பட பலர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### மன்னையில் கனல்மதியின் கவிதை நூல் அறிமுகம்

கல்வி வளர்ச்சி நாள் கருத்தரங்கில் 8ஆம் வகுப்புப் படிக்கும் மாணவி கனல்மதி எழுதிய 'இப்படிக்கு மழை' கவிதை நூல் அறிமுகம் நடந்தது. திருப்பூரில் அரசுப் பள்ளியில் தமிழ் வழிக் கல்வி படிக்கும் கனல் மதி, கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். திருப்பூர் கழகப் பொறுப்பாளர் முகில்ராசு, அறிவியல் மன்ற பொறுப்பாளர் ஆசிரியர் சிவகாமி ஆகியோரின் மகள் ஆவார். நூல் அறிமுக நிகழ்வு எழுத்தாளர் மருதம் சோதி தலைமையில் நடந்தது. மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் சீனி.ஜெகவர்சாதிக் நூலை வெளியிட, தமிழ்நாடு அறிவியல் இயக்கத் தோழர் சேதுராமன் பெற்றுக் கொண்டார். எழுத்தாளர் பசு. கவுதமன் நூல் திறனாய்வு செய்தார். கவிதைகளை எழுதிய மாணவி கனல்மதி ஏற்புரை வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 30th July 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN